Ro.M. 76
1133 - 18711
1 - 82



# அசோகா

18711

கௌரவ ஆசிரியர்: து. ரா.

நிர்வாக ஆசிரியர்: வ. சுப்ரமணியர்.

| | | |
|---|---|---|
| மாலை 1. | சென்னை, சர்வசித்துஞு பங்குனிமீ. | மலர் 3. |

## பொருளடக்கம்

### கட்டுரை

1. பொதிகை மலைச் சாரலில் (கா. ஸ்ரீ. ஸ்ரீ.)
2. செயற்கை மருந்துகள் (பேராசிரியர் ஸி. வி. ரா.)
3. மைசூர் கப் (ஜாம்பவான்)
4. புல்லுக் காரி (கி. வா. ஜகந்நாதன்)

### கவிதை

1. கும்பிடுவோம் (கி. வா. ஜகந்நாதன்.)
2. நான் ஒரு குருவி யானல் (வெள்ளி)

### கதைகள்

1. பஞ்சயன்பட்டி பரதன் (து. ரா.)
2. பரிவட்டம் (ல. ஸ. ராமாமிர்தம்)
3. மறக்கமுடியுமா? (கு. கா. சிவராமகிருஷ்ணன்)
4. அவள் (ஸரோஜா ராமமூர்த்தி.)
5. பாப்பா கதை (உ. வே. சுவாமிநாத ஐயர்)
6. இரு சகோதரிகள் (நாடகம்) ('சிரஞ்சீவி')
7. கண் திறந்தது (ஸௌம்யா)
8. வாத்தியார் (கு. அழகிரிசாமி)

### இதர அம்சங்கள்

1. ரஸிகரின் அபிப்பிராயம்
2. இன்னல் தீர்ப்போம்
3. தலையங்கம்
4. அப்படியா சேதி!
5. சங்கப் பலகை
6. படங்கள்

MARCH 1948

விலை அணு எட்டு

'அசோகா' காரியாலயம், 316 தங்கசாலை வீதி, சென்னை 1.


எப்ரல் 9ங் தேதி
வெளிவருகிறது...
சந்திரலேகா
ஜெமினியின்
அற்புதமான
சிருஷ்டி

# ரஸிகரின்  அபிப்பிராயம்

No. F. 9(32) PS/48
PRIME MINISTER'S SECRETARIAT
NEW DELHI

2nd March, 1948.

அன்புள்ள நண்பருக்கு,

........................, தங்கள் பத்திரிகையின் கொள்கைகள் மிகவும் போற்றத்தக்கவை. தங்கள் முயற்சி வெற்றிபெற, தங்களுக்கு பண்டித நேரு தம் ஆசியை வழங்குகிறார்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்)..........................................

அந்தரங்க காரியதரிசி.


அடைந்தோம் சுதந்திரம்
இனி
என்ன ?
தேச
முன்னேற்றமே!
நாஷினல்
ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை
வாங்குங்கள்.
இவைகளை தபாலாபீஸுகளில் பெறலாம்
P.N.S.O. MADRAS
N.C.7.

# தி இந்தியன் பாங்க் லிமிடெட்

★

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்.

★

லோகல் ஆபீசுகள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோட், மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயில் பிராஞ்சுகளும் சப் ஆபீசுகளும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 72,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000

ரிசர்வ் நிதி ரூ. 62,00,000

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

# கணேஷ் காபி




காரியாலயம்:—

கணேஷ் & கம்பெனி,
(மதராஸ்) லிமிடெட்,
22, வெங்கட நாராயண ரோடு
தியாகராயநகர், மதராஸ் 17.

கிளைகள்:—

285, சைனா பஜார் ரோடு,
மதராஸ்.

71, பாண்டி பஜார்,
தியாகராயநகர்.


STAR of INDIA
an outstanding name in the pencil world...
நம்பிக்கையற்ற பிராண்டும், பென்ஸிலுக்கு அடிக்கடி உடையக்கூடிய முனையும் கூடிவிட்டால், கோபம் வருவதுடன் தெளிவான சிந்தனையும் போய் விடும்! ஓர் அற்பபென்ஸில்கூட அபாரமான சிந்தனைக்கு ஏதுவாகலாம். ஸ்டார் ஆப் இந்தியா பென்ஸில்கள் எழுதுவதற்கு இன்பத்தையும் உன்னத எண்ணங்களையும் உற்பத்திசெய்ய ஏதுவானவை.
ALWAYS
-BUY-
INDIAN
.. MADRAS PENCIL FACTORY Madras.
ADS. MPL

யுனைடட் இந்தியா நெருப்பு & ஜனரல்
இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட்.

TRANSACTS

FIRE ★ MARINE ★ MOTOR ★ ACCIDENT
CASH IN TRANSIT ★ FIDELITY GUARANTEE

AND

EMPLOYERS' LIABILITY INSURANCES

AND

OFFERS YOU SECURITY AND SERVICE

தந்தி: "Unigen"

டெலிபோன்: 4241

தலைமை ஆபீஸ் :-
"யுனைடட் இந்தியா லைப் பில்டிங்,"
எஸ்பிளனெட், மதராஸ்.

பிராஞ்சுகள் :-
பாம்பே, கல்கத்தா, கொலம்பு
சிங்கப்பூர்.

காஞ்சீவரம் பண்ட்ஸ் லிமிடெட்
(ஸ்தாபிதம் 1939)

தலைமை ஆபீஸ்: காஞ்சீபுரம்

எமது நூதன முறை

"சீட்டு டிபாஸிட்டுகள்"

வர்த்தகர்களுக்கும், சேமித்துவைப்
போர்களுக்கும் மிக்க லாபகரமானவை.

சிறுக சிறுக ரூ. 773/- கட்டி ரூ. 1000/-

பெறுவதற் குண்டான விபரங்களுக்கு
எழுதவும்.

K. R. CHARY, B. A.,
செக்ரடரி.

மற்றவைகளுடன் ஒத்திட்டுப் பார்த்து ஸ்ரேஷ்டமானதை வாங்குங்கள்!

# 'ஜே பி' ஏ. ஸி. & டி. ஸி. ஸீலிங் பங்காக்கள்.




## குறைந்த விலையில் உயர்ந்த பங்காக்கள்.

முக்கிய அம்சங்கள் :—

★ லளிதமாக சுழன்று குளிர்ந்த காற்றை வீசும்.

★ உயர்ந்த சாமான்களைக்கொண்டு வேலைப்பாடுடன் தயாரிக்கப்பட்டது.

★ குறைந்த செலவில் நிறைந்த சேவை.

★ பார்ப்பதற்கு மிகவும் ரமணீயமான பொருள்.

★ தூசி, ஈரம், பூச்சுகள் இவற்றால் பழுதாகாமல் காக்கப்பட்டுள்ளது.

★ ரெகுலேடர் முதலிய பாகங்கள் 'ஷாக்' புரூப்பாகச் செய்யப்பட்டது.

★ ஒவ்வொரு பங்காவுக்கும் இரண்டு வருஷ உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

விற்பனை விவரங்களுக்கு :—

## தரம்தாவ்ஸ் & கம்பெனி,

எலக்டிரிக் சாமான் விற்பனையாளர்

அண்டு கண்டிராக்டர்கள்,

**236, சைனாபஜார் ரோட், மதராஸ் 1.**

குறிப்பு ;—சகல விதமான எலெக்டிரிக் சாமான்களும் கிடைக்கும். வீட்டு ஒயரிங் வேலைகள் குறைந்த விகிதத்தில் கவனிக்கப்படும்.

---

# சந்தோஷ செய்தி!

துணி ரேஷன் எடுத்ததும் அனைவருக்கும் ஒரு கவலை விட்டது.

எங்கள் வாடிக்கைக் காரர்களுக்கு எப்போதும் திருப்தி அளித்து வந்தோம். இனியும் அளித்து வருவோம். ஆகையால் தாங்கள் எங்களை எப்போதும் ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

★ எங்களிடம் மில், கைத்தறி, பட்டு ரகங்கள் குறைந்த விலையில் கைவசம் உள்ளன.

★ வான வில்லைப் போன்ற அழகிய கலர்களிலிருந்து தேவைப்பட்டதை தெரிந்தெடுக்கலாம்.

★ ரேஷன் எடுபட்டதை கொண்டாடுவதற்காக எங்கள் கைவசமுள்ள ஏராளமான ரகங்களை விலை குறைத்துத் தருகிறோம்! அவசியம் எங்கள் ஷாப்புக்கு விஜயம் செய்து வாங்கி ஆனந்திக்கவும்.

டெலிபோன்: 3316. டெலிகிராம்: 'கராச்சிவாலா'

## ராயல் ஸ்டோர்,

**2/200, தகங்சாலை வீதி, ஜி. டி., மதராஸ்.**

குறிப்பு :— தங்கள் சௌகரியத்துக்காக (யானை கவுனிக்கருகில்) நெ. 144, சைனாபஜார் ரோட், விலாசத்தில் எங்கள் கிளை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம். விஜயம் செய்து லாபம் அடையவும்

## இன்னல் தீர்ப்போம்.



மஹாத்மாவின் பிரிவால் பாரததேவி கண்கலங்குகிறாள்.
அவர் கொள்கைகளைக் கடைப் பிடித்து நடப்பதே, தாயின் இன்னலை தீர்ப்பதாகும்.

வாழ்க தமிழர் வாழிய வையகம்

அசோகா

## நாம் காங்கிரஸைப் பின் பற்றுவோம்.

மகாத்மா காந்தியின் மறைவால் ஏற்பட்ட சோகத்தினின்றும், தேசம் இன்னும் தெளியவில்லை. அவருடைய லட்சியத்தைக் கடைப்பிடித்து சித்தி பெறுவதும், தேசத்தின் பிதாவாகிய மகாத்மாவுக்கு சிறந்த ஞாபகச் சின்னம் நிறுவி அவரை என்றும் நம்மிடை நிலவியிருக்க வழிகோலுவதும், இன்றைய முக்கிய பிரச்னைகளாகும். மகாத்மாவின் லட்சியங்களுக்கும், தியாகத்துக்கும் சின்னமாக விளங்குவது காங்கிரஸ் மகா சபை. அதைப் பலப்படுத்தி அதன் ஆணைப்படி நடப்போம்.

காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனம் என்றும், தற்போது அரசியல் சுதந்தரம் கிடைத்து விட்டதால் காங்கிரஸை கலைத்து விட்டு வேறு ஸ்தாபனமொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஒரு கிளர்ச்சி எழுந்து வருகிறது. நாடு க்ஷேமமுற வேண்டுமாயின், நாட்டில் சுதந்தர விடுதலை மட்டுமன்றி சமூக, பொருளாதார முன்னேற்றமும் அத்யாவசியமாகும். இதன் முக்கியத்தைக்கருதியே, சுதந்தரம் பெற்ற பிறகும் காந்தியடிகள் வகுப்பு ஒற்றுமைக்காக பல முறை தம் உயிரையே பணயமாக வைக்கவும், கடைசியில் உலகமே வருந்தி திடுக்கிடும் வண்ணம் தியாகமும் செய்ய நேர்ந்தது. காங்கிரஸ், அரசியல் போராட்டத்துடன் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கேற்ற லட்சியங்களையும் கைக் கொண்டு சேவை செய்து வருகிறது. தேசபக்தர்

களின் உள்ளத்தில் சுதந்தரக்கனலை எழுப்பியதும், சமூக, பொருளாதார துறைகளில் போரிடும் ஆர்வத்தைத் தூண்டியதும், தேசபக்தர்களின் சேவைக்கு உரைகல்லாக விளங்கி வருவதும், மகாத்மாவிற்குப் பிறகு அனைவர் உள்ளத்திலும் நிறைந்திருப்பதும், காங்கிரஸ் மகா சபையே யாகும். ஆகவே, காந்தியடிகள் காங்கிரஸ் அமைப்பில் முக்கிய சீர் திருத்தங்கள் புகுத்தி, அதை மிகவும் விரிவான ஸ்தாபனமாக்க திட்டம் வகுத்தார். அவர் குறித்த வகைப்படி திட்டத்தைப் பூர்த்தி செய்து, காங்கிரஸ் மகா சபையின் மூலம் நாடு க்ஷேமமடையும் வகையில் பணியாற்ற நாம் முனைய வேண்டும்.

நாடு தற்போதுள்ள நிலைமையில் உள்நாட்டு ஒற்றுமையும், சிறந்த படை பலமும் உடனே தேவை. உற்பத்தியும், வாணிபமும் தடைபடாது பெருகவேண்டியது அத்யாவசியமாகும். இவை, செயல் முறையில் உருவு பெற வேண்டுமாயின், மக்களிடையே நம்பிக்கையும், உறுதிப்பாடும் நிலவ வேண்டும். அடைந்த சுதந்தரத்தை காக்கும் கடமையும், உரிமையும் நமக்குண்டு. தியாகங்கள் புரிந்த நம் உள்ளத்தில் சோர்வும், தன்னலப்பற்றும் தோன்றலாகாது. சுதந்தரத்தின் முழுப்பலனை நமது சந்ததியாராவது அனுபவிக்கட்டும் என்னும் தியாக உணர்ச்சியுடன் கடமையாற்ற வேண்டிய நிலையில் நாம் பழகிக்கொள்ள வேண்டும். தேசசேவையில் பண்பாடு பெற்று, மக்களின் க்ஷேமத்தில் சதா ஏக்கறைகொண்டு பணியாற்றும் நம் தலைவர்களின் அரசாங்கத்தை, நாம் ஒருமுகமாக ஆதரிக்க வேண்டியது நமது முதற் கடனாகும். பாரதத்தாயின் சஞ்சலத்தைத் துடைக்கவும், காந்தியடிகளின் ஞாபகத்தை நாம் உரிய முறையில் போற்றவும், அதுவே சிறந்த வழியாகும்.

---

# அப்படியா சேதி!

**பொருத்தமான ஞாபகச் சின்னம்.**

(பண்டிட் ஜவாஹர்லால் நேரு)

மகாத்மாவ்க்கு வெண்கலத்தினாலோ, பளிங்கினாலோ, கற்கம்பங்களினாலோ ஞாபகார்த்த சின்னங்கள் அமைக்க வேண்டுமென்று ஜனங்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். இவ்விதம் செய்வது மகாத்மாவின் புனித உபதேசங்களைப் புறக்கணிப்பதாகும். நாம் உத்தம வழியில் நடவாது போனால் மகாத்மாவுக்கு ஞாபகச்சின்னம் அமைப்பதில் ஒரு பலனுமில்லை.

காந்திஜி மறைந்து விட்டார். ஆனால் அவருடைய ஆத்ம ஜோதி நம்மை சூழ்ந்து பரிணமித்துக் கொண்டிருக்கிறது. இப்போது நம்மீதே பொருப்பு ஏற்பட்டிருக்கிறது. இக்கடமையைச் செய்து முடிக்க, நாம் நமது சக்திக்கேற்ற முழு அளவுக்குப் பாடு பட வேண்டும். நமது தலை முறையில் தலை சிறந்த மனிதரைக் கொன்ற அந்த வகுப்பு வாதக்கொடும் விஷத்தை நாம் ஒன்று பட்டு நின்று ஒழித்துக்கட்ட வேண்டும்.

காந்திஜியின் கனவுகள் சிலவற்றை நினைவாக்க இத்தலை முறையில் சந்தர்ப்பம் கிட்டவேண்டுமென்று நான் மனப்பூர்வமாக பிரார்த்திக்கின்றேன். இதனால் நாம் அவருடைய ஞாபகத்தை கௌரவித்து மகாதமாவுக்கு மதிப்பான ஞாபகச் சின்னத்தை அமைத்தவர்களுமாவோம்.



சுதந்தர பட்ஜட்.

குடும்ப வரவு செலவில் உள்ள அக்கறையைப்போல், நாட்டின் வரவு செலவுகளைப் பற்றி இதுவரை பொது மக்களுக்கு பற்றுதல் இல்லாமலிருந்தது. இதற்கு காரணம், அந்நிய ஆட்சி முறையில் ஏதேச்சாதிகாரமாக பட் ஜட் விஷயங்கள் முடிவு கட்டப்பட்டு வந்ததாகும்.

சுதந்திர ஆட்சியில் நிலைமை முற்றும் மாறியுள்ளது. நாட்டின் க்ஷேமலாப விருத்தியில் அக்கறைக் கொண்ட நம் தலைவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள முழு வருஷ பட்ஜட், சகல அம்சங்களில் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. மத்திய அரசாங்கம், தற்போது உணவுப் பிரச்னை, அகதிகள் பிரச்னை, யுத்தப் பிரச்னை, ஆகிய ஆபத் அவசரமான விஷயங்களில் பெருந் தொகைகளை செலவிட வேண்டியிருக்கிறது. இத்தவிர்க்க முடியாத செலவினங்களை சரி கட்டிக் கொண்டு, நாட்டின் புனரமைப்பிலும் கவனம் செலுத்தக் கூடிய பட்ஜட்டை நிர்ணயிப்பது, பிரம்மப் பிரயத்தனமாகும். ஏழை மக்களை வரிச் சுமைக்கு ஆளாக்காமல், தனவந்தர்களையும் தொழிலபி விருத்தியில் அக்கறைக் கொள்ளச்செய்யும் வண்ணம் மத்திய பட்ஜட்டை கொண்டு வந்ததற்காக, நம் தமிழர் திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள், பெரிதும் போற்றத்தக்கவராவர்.

சென்னை அரசாங்கம், தமது பட்ஜட் மூலம் பொது மக்களுக்கு 18-கோடி ரூபாய் தானம் வழங்கி யுள்ளனர்! அதாவது, வரும் அக்டோபர் மாதம் முதல், பரிபூரண மதுவிலக்கு அனுஷ்டானத்துக்கு வருவதால், அரசாங்கத்துக்கு கிடைத்து வந்த கலால் வருமானம் முழுவதும், பொது மக்களிடமே தங்கியிருக்குமல்லவா? இது தவிர, மாகாணத்திலுள்ள உலோகச் செல்வங்களை நன்கு பயன் படுத்திக் கொள்ளவும்; திருச்சி, சேலம் ஜில்லாக்களில் இரும்புத் தொழிற்சாலைகளை நிருவவும் தீர்மானித்திருப்பது சென்னை அரசாங்கத்தின் முற்போக்கை நிரூபிக்கிறது.

மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்!

தேசியக் கவி பாரதியார், தாய் நாட்டின் வளமைக்கும் பெருமைக்கும் கப்பல் அபிவிருத்தி அவசியம் என்பதை தம் கவிகளில் உணர்ச்சி பொங்க தெளிவு படுத்தியிருக்கிறார். ஆனால், தமிழ் நாட்டு வீரத் திலகம் வ. உ. சிதம்பரம் பிள்ளை தூத்துக் குடியில் துணிவுடன் கப்பலோட்ட, அவருடைய மா பெரும் முயற்சி அடக்குமுறைக்கும், வஞ்சகப் போட்டிக்கும் பலியாயிற்று! சுதந்தரம் பெற்று, பிற நாடுகளுடன் நாம் சரிநிகர் சமமாக வீறு கொண்டு எழுந்துள்ள இந்தச் சமயத்தில், "மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்" என்னும் நம் கனவை, "ஜல உஷா" என்னும் பெயரைச் சூட்டி முதல் சுதந்தரக் கப்பலாக விசாகப்பட்டணத்தில் மிதக்க விட்டார் நம் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு! இக் கனவு பரிபூரணமாக நினைவாகும் நாளே, நம் நாடு பொருளாதார, வாணிப, துறைகளில் முன்னேற்ற மடைந்த சுப தினமாகும்!

தமிழ் உயர்ந்தது!

தமிழ்த் தாத்தா உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள், ஔவைப் பாட்டிக்கு சமமாக தமிழர் உள்ளத்தில் குடி புகுந்து விட்ட தமிழ் வடிவம். வளரும் இலக்கியத்தை வளம் பெறச் செய்ய ஐயரவர்கள் தமிழருக்கு அளித்து விட்டுப் போன தமிழ்ச் செல்வங்களில் கி. வா. ஜகன்னாத ஐயரவர்களும் ஒருவர். இச் செல்வங்களைப் போற்றி பயன் படுத்திக் கொள்வது நம் கடமை—பாக்கியம். ஐயரவர்களின் உருவச்சிலை திறப்பு விழாவின் போது அரசாங்கத்தாரும், பிரமுகர்களும் ஐயரவர்களுக்குச் செய்த அஞ்சலி, தமிழ்த் தாயின் உள்ளத்தை குளிர்வித்தது. இனி, தமிழ் உயர்ந்தோங்குவதற்கு இது அத்தாட்சியாகும்.

# கும்பிடுவோம்

கி. வா. ஜகந்நாதன்.

*இராகம்: பைரவி* | *தாளம்: ரூபகம்.*

(*பல்லவி*)

சிந்தையில் வைத்து நிரந்தரம் வாழ்த்தியே
சிலைசெய்து கும்பிடு வோம்.

(*அநுபல்லவி*)

செந்தமி ழன்னையின் செல்வமெல் லாங்கண்டு
தந்து புகழ்பெற்ற சாமிநா தவள்ளலை (சிந்தை)

(*சரணம்*)

சிலம்பினை அடிபுனைந் தான் — மணிமேகலை
சிற்றிடை தனிற்பூட்டி னான்
இலங்குஞ்சிந் தாமணி எழில்முடி மேலணிந்தான்
எத்தனை யோசுவைகொள் பத்துப்பாட் டளித்திட்டான் (சிந்)

குறுந்தொகை யைவழங்கி னான் — பரிபாடலைங்
குறுநூறும் கண்டுதவி னான்
நறுந்தமிழ் வீரத்தை நாட்டும் புறநானூறும்
நல்ல பதிற்றுப்பத்தும் நல்கினான் அவன்தன்னை (சிந்)

இனிய கதைபலசொன் னான் — மாணாக்கருக்கே
ஏற்றநூ லைஉணர்த்தி னான்
கனிதமிழ்ப் பழம் இவன் கண்கண்ட அகத்திய
முனிஇவன் எனயாரும் மொழியுஞ்சா மிநாதனை (சிந்)



# பொதிகைமலைச் சாரலிலே

(கா. ஸ்ரீ. ஸ்ரீ.)

இரண்டு மகான்கள் வாழ்ந்து செயலாற்றிய காலத்திலே நாம் வாழ்கிறோம். இந்தப் பாக்கியம் உலகத்திலே எந்த நாட்டிலும் யாருக்கும் கிடைத்ததில்லை. மகாத்மா காந்தியடிகளும் ஐயரவர்களும் தங்கள் பௌதிக உடலோடு இந்த மண்ணிலே நம்முடன் நடந்திருக்கிறார்கள். "எங்கள் தாத்தா மகாத்மாவை நேரிலே பார்த்திருக்கிறார்; அவரிடம் ஸர்ட்டிபிகேட் வாங்கியிருக்கிறார்; அவரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஸ்தாபனத்திலே ஏழு வருஷகாலம் உழைத்திருக்கிறார். எங்கள் தாத்தா ஐயரவர்களை நேரில் கண்டிருக்கிறார்; அவரிடம் 'சபாஷ்' பெற்றிருக்கிறார். காந்தியடிகளின் நண்பரும் ஐயரவர்களின் மாணவரும் அவருடைய வாழ்க்கைக்குத் துணைவர்களாக இருந்திருக்கிறார்கள்" என்று என் கொள்ளுப்பேரன் பெருமையடித்துக்கொள்ளும் போது, சொர்க்கத்திலே என் தோழர்கள் நிச்சயமாக என்னைத் தட்டிக்கொடுக்கப் போகிறார்கள்!

மகாத்மா பாரதத்தாய்க்கு விடுதலையை அளித்தார்; ஐயரவர்கள் தமிழ்த்தாய்க்கு விடுதலை தந்தார்கள். ஐந்நூறு வருஷ காலம் ஒரு நாட்டிலுள்ள அனைவரும் உழைத்தும் செய்யமுடியாத ஓர் அரிய வேலையை மகாத்மா அல்லும் பகலும் ஓயாமல் உழைத்துச் சாதித்தார். ஒரு சர்வகலாசாலையிலுள்ள மகாபண்டிதர்கள் மொத்தமாகக் கூடி இருநூறு ஆண்டுகளில் செய்ய முடியாத அரிய செயலை ஐயரவர்கள் தம் வாழ்விலே செய்து முடித்தார்கள். மகாத்மா பாரதநாடு முழுவதும் சுற்றி, இந்நாட்டிலே ஏழையிலும் ஏழையான மக்களின் நலத்துக்காகத் தாமும் எளிய வாழ்வை மேற்கொண்டு 'தரித்திர நாராயணர்' ஆனார். ஐயரவர்கள் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஓலைச் சுவடிகளுக்காக அலைந்து திரிந்து, அவற்றைக் கொண்டுவந்து இரவும் பகலும் ஓயாமல் பாடுபட்டுப் பிரதி செய்து செப்பனிட்டுப் பதிப்பித்துத் தாமே தமிழ் வடிவமானார். பாரதநாட்டின் மகோன்னத நிலையை மகாத்மா உலகுக்கு அறிவித்தார். தமிழ்த்தாய் இழந்த செல்வங்களை எடுத்துத் துலக்கித் தந்து, ஐயரவர்கள் தமிழ்நாட்டைத் தலைநிமிரச் செய்தார். இந்திய நாட்டின் நூறு வருஷச் சரித்திரமும் வாழ்க்கையும் மகாத்மா மயமானது: தமிழ்நாட்டின் நூறு வருஷச் சரித்திரமும் வாழ்க்கையும் ஐயரவர்களின் உருவிலே நிலவியது. மகாத்மா பாரத நாட்டின் பிரதிநிதி. ஐயரவர்கள் தமிழுக்குத் தனி அடையாளம்.

கைம்மாறு கருதாமல் சதாயுசாக உழைத்த இந்த மகான்களுக்கு நாம் என்ன மரியாதை செய்தோம்? நம்மிலே ஒருவன் மகாத்மாவுக்கு மூன்று குண்டுகள் கொடுத்தான். நம்மிலே பலர், "தமிழிலே என்ன ஸார் இருக்கிறது!" என்று சொல்லி, ஐயரவர்கள் சேமித்துச் சென்ற நிதியைப் புறக்கணித்தோம். இவர்கள் இருவரும் நமக்காக வாழ்ந்தார்கள். ஆனால் இந்த மகான்களின் காலத்திலே வாழ்ந்தும் இவர்களின் கொள்கைக்குத் தீங்கிழைத்த நம்மைப் போன்ற பேதையர் எந்தத் தலைமுறையிலும் இருந்ததில்லை, இருக்கப் போவதில்லை!

## 2

காலையிலே, கடலலைகளின்மேலே தலை நீட்டிக் கதிரவன் உலகை நோக்கி நகைக்கும் வேளையிலே, ஒரு நண்பரோடு கடற்கரையில் உலாவிவிட்டு வீடு திரும்பினேன். உடனே முதல் வேலையாக முதல் முதலாக ஐயரவர்களைத் தரிசிக்கத் 'தியாகராஜ விலாச'த்துக்கு விரைந்து நடந்தேன்.

வாசலிலே ஒரு சிறுவன் இருந்தான்.

"ஐயரவர்கள் இருக்கிறார்களா?"

அவன் உள்ளே போய்த் தகவல் சொல்லிவிட்டு, "வாருங்கள்" என்றான்.

உடலிலே கூச்சத்தோடும் மனத்திலே அச்சத்தோடும் அந்த மகாபுருஷனைக் காண நான் மெதுவாக அடியெடுத்து வைத்து நகர்ந்தேன்.

கூடத்திலே, ஒரு மஞ்சத்திலே, மகா மேதைகளுக்கெல்லாம் மன்னுதிமன்னரான அந்தப் பெருங்கிழவர் வீற்றிருந்தார். நான் அவரை வணங்கி நின்றேன்.

அந்த நெடிய உடலை வளைத்து அவர் என்னைத் தூக்கித் தம் பக்கலிலே உட்கார வைத்துக்கொண்டார்.

"நீர் யார்? எந்த ஊர்? என்ன படித்திருக்கிறீர் தமிழிலே? எங்கே வேலை செய்கிறீர்? குடும்பத்திலே யார் யார் இருக்கிறார்கள்? சம்பளம் செலவுக்குப் போதுகிறதா? ஓழிந்த வேளையில் என்ன செய்கிறீர்? எந்த விஷயங்களிலே உமக்குப் பிரியம்?" என்றெல்லாம் என் யோகக்ஷேமங்கள் முழுவதையும் அவர் விசாரிக்கலானார்.

வாழ்க்கையிலே நான் பட்டுவந்த வேதனைகளனைத்தையும் அந்தக் கணத்திலே மறந்தேன். மந்தமாருதம் ஜிலு ஜிலுவென்று வீச, பொதிகை மலைச் சாரலிலே அமர்ந்து இயற்கைக் காட்சிகளை இன்பமாகக் காணும் ஒரு ராஜகுமாரன் போல, அந்தக் கலாநிதியின் பக்கத்திலே நான் மகிழ்ச்சியோடு உட்கார்ந்திருந்தேன். அகில உலகத்திலும் ஊடுருவி நின்று காக்கும் இறைவனின் கருணை, ஒரு கணத்திலே பக்தனுடைய வாழ்வை மலர்விப்பதுபோல, தமிழின் மேன்மைக்காக வாழ்ந்த அந்தப் பெருவள்ளலின் பார்வை ஒரு கணத்திலே என்னை உய்வித்தது.

நான் வந்த நோக்கத்தை அவரிடம் தெரிவித்தேன். அவருடைய 'வறுமைப் புலி'யை 'ஹம்ஸி'லே வெளியிட அநுமதி வேண்டினேன். 'தமிழ் இலக்கியத்தின் மேன்மையும் மலர்ச்சியும்' என்ற என் கட்டுரைக்கு அவர் சில குறிப்புகள் தந்தார். சென்னைச் சர்வகலாசாலையார் வெளியிட்ட தமது நூலையும் அளித்தார்.

"ஓழிந்தபோது என்னிடம் வாருங்கள். பாடம் சொல்லுகிறேன்" என்றார்.

தமிழ்மணம் வீசித் தமிழாகவே வாழ்ந்த ஐயரவர்கள் பொதிகைமலையே உருவாகி நிற்பதுபோல எழுந்து நின்றார். "வறுமையிலே வருந்தினாலும் நீர் புலியாக இருப்பீர்" என்று எனக்கு ஆசி கூறினார்.

"மகாத்மா காந்தி நமக்கு நேரே தலைவரல்ல. அவரை நாம் பின்பற்ற முடியாது" என்று அறிஞர் வ. ரா என்னிடம் ஒரு சமயம் சொன்னார். அதே பேச்சு எனக்கும் பொருந்தும். அந்த முதிய பிராயத்திலும் ஐயரவர்கள் மாணவர்களைத் தேடினார்கள். அவருடைய ஆராய்ச்சி துறைக்கு என்னால் சிறிதும் இடையூறு கூடாது என்று நான் விரும்பினேன். ஐயரவர்கள் எனக்கு நேரே குருவல்ல; அவரை நான் பின்பற்ற முடியாது. ஆனால்—

பொதிகைமலையைச்சார்ந்த 'அகஸ்தியர்' என்னிடம் இருக்கிறார். உத்தமதானபுரம் ஐயரவர்களைப் பிறப்பித்துத் தன் பெயருக்குப் பெருமை தேடிக்கொண்டது. ஐயரவர்களோ தம்மையும் தம் பொருள்களையும் தமிழுக்கும் தமிழகத்துக்குமே உத்தம தானமாக வழங்கினார். தமிழ் நாட்டுக்கு அவர் அளித்த இப்படிப்பட்ட பெருங்கொடைகளிலே, இந்த அகஸ்தியரும் ஒருவராக விளங்குகிறார்.

## 3

"இந்திய இலக்கியக் கழகம்"
பாரதீய ஸாஹித்ய பரிஷத்.

இந்தப் பெயர் சில பேருக்கே தெரிந்திருக்கும். இரண்டரை வருஷகாலம்

இந்தக் கழகம் வேலை செய்தது. மகாத்மா காந்தியடிகள் இதன் தலைவர். வெவ்வேறு மாகாணங்களைச்சேர்ந்த இலக்கிய மகாரதிகள் இதில் அங்கத்தினர்கள். அப்படியிருந்தும்—

இந்தக் கழகத்தின் இரண்டாவது மகாநாடு சென்னையில் கூடியது. ஐயரவர்களின் தலைமையிலே, பாரதநாட்டு இலக்கியப் பிரதிநிதிகளைத் தமிழ்நாடு வரவேற்றது. நிலைக்கண்ணாடியிலே நமது முகம் தெளிவாகத் தென்படுவதுபோல, ஐயரவர்கள் தமது சுருக்கமான அழகிய பிரசங்கத்திலே தமிழ் மொழியின் வரலாற்றையும், தமிழிலக்கியத்தின் இயல்பையும் சிறப்பையும் தெளிவாக எடுத்துக்காட்டினார். அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட அத்தனை பேர் முன்பும் அபயக்கரத்தோடும் மென்முறுவலோடும் தமிழ்த்தாய் வந்து நின்றாள். அதைக் கேட்ட மகாத்மா, "ஐயரவர்கள் பக்கலிலே அமர்ந்து தமிழ் பயிலவேண்டுமென்று இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது" என்று மொழிந்ததிலே வியப்பில்லை.

ஐயரவர்களின் அந்தப் பிரசங்கம் ஹிந்தியிலும் வெளிவந்தது. அவர்களுடைய அருளுக்கும், அகஸ்தியருடைய நெருங்கிய நட்புக்கும் நான் பாத்திரமானதற்கு அதுவே காரணமாக இருந்தது. என் 'மணிமேகலை'க் கட்டுரைக்கும் அது பாதையை வகுத்தது.

ஐயரவர்களின் மாணாக்கராகிய அகஸ்தியரை இந்த மகாத்மாவுக்கு அறிமுகப் படுத்தியபொழுது, "தங்களுக்கு மகாதேவ தேசாய் எப்படியோ அப்படி எங்கள் ஐயரவர்களுக்கு இவர்" என்று ராஜாஜி கூறியது எவ்வளவு பொருத்தமானது!

4

நவராத்திரிக் கொலுவைப் பார்த்துவிட்டு, நாங்கள் மேலே மாடிக்குப் போனோம். சாயங்காலம் ஆறரை மணி. ஐயரவர்களைத் தரிசிக்க எங்களோடு ஓர் அதிதி வந்திருந்தார்.

இயற்கை வளங்கள் செழித்து, மேன்மையான ஒரு நாகரிகத்தை உலகுக்கு அளித்த அழகிய பிரதேசம்; இன்று இரண்டுபட்டு வகுப்புவாதத்துக்கு இரையாகி நிலைகுலைந்திருக்கும் நிலம்—இதுதான் பஞ்சாபம். இங்கே பிறந்து, இந்தியாவிலுள்ள நாடோடிப் பாடல்களைத் திரட்டும் நோக்கத்தோடு நாடோடியாகத் திரியும் அந்த மனிதர் சென்னைக்கு வந்தார். சத்தியத்தை நாடி ஊரூராக அலையும் அந்தத் தாடிக்காரர் தேவேந்திர சத்தியார்த்தி ஒரு நாள் என்னிடம் வந்தார். மனைவியுடனும் புதல்வியுடனும் சென்னைக்கு வந்து, அவர் அன்றாடத் தேவைகளுக்கே சிரமப்பட்டார். ரகசியமாகப் பிறருக்கு உதவும் புரவலர் ஒருவர் அவருக்கு ஆதரவு அளித்தார். நானும் சத்தியார்த்தியும் நண்பர்களோடு கலந்து சுமார் நூறு நாடோடிப் பாடல்களைத் தமிழிலிருந்து தேர்ந்தெடுத்தோம். அவரும் நானுமாகக் காலையும் மாலையும் உட்கார்ந்து அவற்றை ஹிந்தியிலே மொழிபெயர்த்தோம். ராஜாஜியின் தலைமையிலே ஒரு கூட்டத்தில் அவர் பேசிய பிறகு, பல 'பெரிய மனிதர்கள்' அவருக்கு உதவ முன்வந்தார்கள்.

தேவேந்திர சத்தியார்த்தி ஐயரவர்களைப் பார்த்தார்; பேசினார். அவருடைய உழைப்பையும் தியாகத்தையும் போற்றிவிட்டு, ஐயரவர்கள் ஏடு தேடுவதிலே தாம் பட்ட இன்னல்களை வேடிக்கையாகச் சொன்னார். கம்பராமாயணத்தைப் பதிப்பிப்பதற்காக ஒழுங்கு படுத்தித் தனியே வைத்திருந்த சுவடிகளையெல்லாம் சத்தியார்த்தி பார்த்தார். இரண்டு மணிநேரம் பொழுது போனதே தெரியவில்லை.

கிராண்ட் டிரங்கு எக்ஸ்பிரஸ்ஸில் ஏறும்பொழுது சத்தியார்த்தி இரண்டு ஜோஸ்யங்கள் சொன்னார். அவர் அப்படிச் சொன்னதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஆயினும் அந்த ஜோஸ்யங்கள் உண்மையாயின.

"கம்பராமாயணத்தைப் பதிப்பிக்கும் ஐயரவர்களுடைய நோக்கம் அவருடைய வாழ்வுக் காலத்திலே நிறைவேறாது என்று அஞ்சுகிறேன்; வருந்துகிறேன்."—வண்டி புறப்படும் சமயம்.

19



தமிழ்த் தாத்தா.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்





காந்தித் தாத்தா.

"நான் போய்வருகிறேன். உங்கள் வாழ்க்கையில் சீக்கிரமே பெரிய மாறுதல் நிகழப்போகிறது."

இப்படிச் சொன்ன அவர் முகத்தையும் நகரும் வண்டியையும் பார்த்துக்கொண்டு நான் பேச்சற்று நின்றேன்.

5

நவயுகப் பிரசுராலயத்தில் நண்பர் ப. ரா. வினிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு நான் ஊரிலே போய்த் தங்கியிருந்தேன்.

அன்று சனிக்கிழமை; தலையிலே எண்ணெயை வைத்துக்கொண்டிருந்தேன். செங்கல்பட்டுக்குப் போய்வந்த என் மாமனார், 'தினமணி'யை ஊஞ்சற்பலகையிலே வைத்துவிட்டு, "ஒரு சமாசாரம். தைரியமாகக் கேளுங்கள்" என்றார்.

எனக்குத் தைரியம் போய்விட்டது.

"என்ன?" என்று நெஞ்சடைக்கக் கேட்டேன்.

"உங்கள் ஐயாவர்கள் போய்விட்டார்கள்!"

மறுநாள் என் நண்பரிடமிருந்து கடிதம் வந்தது.

"என் தந்தை காலமாகிவிட்டார். மோசூரிலிருந்து மோகனூருக்கு வந்து இருக்கிறேன். ஐயாவர்களின் அந்திய காலத்தில் அவரோடு இருக்கக் கொடுத்து வைக்காத மகாபாவியானேன்."

பெரியோர்கள் என்றும் வாழ்கிறார்கள்; அவர்களுக்கு இறப்பு இல்லை. ஐயாவர்களைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் தமிழிலக்கியத்திலே லலிதமான, உருக்கமான, உன்னதமான பகுதிகள் என் ஞாபகத்துக்கு வருகின்றன; உலக அரங்கிலே தமிழர்கள் மேன்மையுற்று வாழ்ந்த அந்தப் பொன்னான காலம் ஞாபகத்துக்கு வருகிறது. ஆழங்காணாத ஆனந்த சாகரத்திலே என் உள்ளம் ஆழ்ந்து விடுகிறது.



# பஞ்சயன்பட்டி பாரதன்

**து.ரா.**

## 3

சென்னைக்குப் புறப்பட்ட பாரதனைப் போலவே இன்னும் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு அன்று வெளியூர்களில் தலை போகிற காரியங்கள் இருந்திருக்க வேண்டும். தினப்படியே ரயிலில் கூட்டம் அதிகமாகத் தான் இருந்தது என்றாலும், அன்று கூட்டம் என்னவோ வழக்கத்திற்கு மாறாக மிகவும் அதிகமாக இருந்தது. இதன் காரணம், மெயில் எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நிற்கும் வரை பாரதனுக்கு, விளங்கவில்லை.

எழும்பூர் வந்ததும் எல்லோரும் மூட்டை முடிச்சுகளுடன் எழுந்தார்கள் இறங்குவதற்கு. அப்பொழுது, மெயிலின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு கையில் புஷ்ப மாலைகளுடன் பிளாட்பாரத்தில் காத்திருந்த, சுமார் இருபத்திநாலு பேருக்கு மேற்பட்ட, மாபெருங் கூட்டமொன்று “ஜஸா பைஸாவுக்கு ஜே!” என்ற கோஷத்துடன் சமுத்திரம்போல் அலை மோதியது! கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் குறவர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் கையில் ஆளுக்கொரு நரிக் கொடி பிடித்திருந்தார்கள். மூன்றாவது வகுப்பு வண்டியிலிருந்து இறங்கிய ஒரு குறப் பிரமுகர் கழுத்தில் மாலைகளைப் போட்டு அவர்கள் ஜயகோஷத்துடன் அவரை வரவேற்றார்கள். அந்தக் குறவரும் மற்றவர்களைப்போல் தான் கௌபீனமும், முண்டாசும் அணிந்திருந்தார். பல தினுசான மணி மாலைகள் அவர் கழுத்தை அலங்கரித்தன. அவர் மீசையையும் மையிட்ட கண்களையும் பார்த்தால் மட்டும் சற்றுப் பயமாக இருந்தது!

“இது என்ன?” என்று ஒன்றும் புரியாதவராய்க் கேட்டார் பாரதன் வண்டியிலிருந்து இறங்கியதும் பிளாட்பாரத்திலிருந்த ஒருவரைப் பார்த்து.

“அகில இந்திய நரிக்குறவர் மகா சபையின் வருஷாந்திரக் கூட்டம் இன்று நடக்கப் போகிறது. அதற்குத் தலைமை வகிக்கும் ‘ஜஸா பைஸா’ இதோ வந்து இறங்கியிருக்கிறார்” என்று தெரிவித்தார் அவர்.

நாடெங்கும் அங்கங்கே சிதறிக்கிடந்த குறவர்களை ஒன்று சேர்த்து ஒரு பலம் பொருந்திய சமூகமாகச் செய்த பெருமை அதன். மாபெருந் தலைவரான ஜஸா பைஸாவையே சேரும். இதை பாரதனும் பத்திரிகை வாயிலாக அறிந்திருந்தபடியால் சிறிது பயபக்தியுடனேயே அவரைப் பார்த்துவிட்டு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்.

அன்று ஞாயிற்றுக்கிழமையானதால், ‘கேஸரி’ பத்திரிகாலயம் பூட்டிக் கிடந்தது. பாரதனுக்குப் பெரிய ஏமாற்றம் தான். யோசிக்காமல் தாம் தே. மாவின் பேச்சைக் கேட்டு, சனிக்கிழமை சாயங்காலம் புறப்பட்டதற்காகத் தம்மையே கோபித்துக்கொண்டார் அவர். ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, பொழுதைப் போக்

குவதற்காக ஒரு பத்திரிகையை வாங்கி அன்றைய நிகழ்ச்சிகள் என்னவென்று ஆராய்ந்தார். பின் வரும் விவரம் தெரிந்தது :—

1. நடன நிகேதனம்—

கிருஷ்ணய்யர் அண்ட் சீதாலக்ஷ்மி கிருஷ்ணய்யர்—நடனம் 6-30 மணி.

2. கர்நாடக சங்கீத சபை :—கோமளீச்வரர் ஹால்:—வண்டவாளம் வெங்கட்ராமன் : பாட்டு. 5-30 மணி.

3. தமிழ் பார்லிமெண்ட் : மங்கை வெளி—திருவள்ளுவர் பெருமை. பேச்சாளர் : திரு. பாண்டியன் பிள்ளை. அவைத் தலைவர் ; மிஸ்டர் க்ராலி, ஐ. ஸி. எஸ். 7–மணி.

4. கோட்டை மைதானம். அகில இந்திய நரிக்குறவர் மகா சபைக் கூட்டம் ஆரம்பம் 4–30 மணி.

நான்காவது 'அயிட்ட'மே ச்வாரஸ்யமானதாக இருக்கும் போல் பாரதனுக்குத் தோன்றியபடியால் நான்கு மணிக்கே போய்க் கோட்டை மைதானத்தில் உட்கார்ந்து விட்டார். நேரம் ஆக ஆக ஒவ்வொருவராய் வரவும், ஒரு பெரிய கூட்டம் சேர்ந்தது. ஆறுமணி அடிப்பதற்குள் நாற்பது பேருக்கு மேற்பட்ட ஜனத்திரள் ஒன்று சேர்ந்து விட்டது! தலைவர் ஐஸா பைஸா கம்பீரமாக மேடைமேல் ஏறி நின்று மகா சபையின் கொடியாகிய நரிக்கொடியை ஏற்றுவித்துப் பின் தம் தலைமைப் பிரசங்கத்தை முழக்கினார். ஹிந்து சமூகத்தை அவர் தாக்கிப் பேச ஆரம்பித்ததும், எழுந்து போய்விடலாம் என்று தோன்றியது பாரதனுக்கு.

" ஐ. ஸி. எஸ். வர்க்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள் ; ஹைகோர்ட் ஜட்ஜிகளை எடுத்துக் கொள்ளுங்கள் ; மந்திரிகளை எடுத்துக் கொள்ளுங்கள். நம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவராவது ஐ. ஸி. எஸ். காரராகவோ, ஜட்ஜாகவோ. மந்திரியாகவோ இருக்கிறாரா? காப்பிஹோட்டல் ஸர்வர் வேலைகூட நமக்கு யாரும் கொடுக்கவில்லை ! காரணம் என்ன ? நமக்கென்று ஒரு தனிஸ்தானம் இல்லாதது தான் ! அதற்குத் தான் நாம் 'குறஸ்தான்' வேண்டுமென்று போராடுவது ! குறவர் சமூகத்தில் உள்ள அத்தனை பேரும் இறந்தாலும் இறப்போமே தவிர, குறஸ்தான் கோரிக்கையை மட்டும் விடமாட்டோம். அது தான் நமது மூச்சுக் காற்று ! குறவர்களே, ஒன்று சேருங்கள் !" என்று கர்ஜித்தார் ஐஸா பைஸா.

நல்ல வேளையாக, அவர்கள் ஒன்று சேருவதற்குள் அங்கிருந்து வெளியேறினார் பாரதன். மறுநாள் அவர் 'கேஸரி' பத்திரிகாசிரியர் வீரகேஸரி முன் ஆஜரான பொழுது பகல் பன்னிரண்டு மணி இருக்கும்.

## 4

மற்ற எழுத்தாளர்களைப்போல் வீரகேஸரியும் ஒரு சாதாரண எழுத்தாளராக ஒருகாலத்தில் இருந்தவர் தான். ஆனால், அதெல்லாம் இப்பொழுது அவருக்கு மறந்துபோய்விட்டது. மற்ற எழுத்தாளர்களோடு தம்மையும் எழுத்தாளராக அவர் இப்பொழுது கருதவில்லை. காரணம், சகோதர எழுத்தாளர்கள் அத்தனை பேரும் தரித்திரம் பிடித்த சனியன்களாக இருந்தது தான் ! பத்திரிகை உலகில், மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் வாங்கும் ஆசிரியர்களிலிருந்து ஐந்நூறு ரூபாய் பெறும் ஆசிரியர்கள் வரை இருந்தார்கள். அவர்களில் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர் வீரகேஸரி. எனவே, மற்ற பத்திரிகாசிரியர்களைத் தமக்குச் சமமானவர்களாகவும் சகோதரத் தொழிலாளிகளாகவும் கூட அவர் நினைக்காததில் ஆச்சரியம் இல்லை. சம்பாஷணையின்போது, வேறு எழுத்தாளர் பெயரோ, ஆசிரியர் பெயரோ அவர் வாயிலிருந்து ஒருநாளும் வெளி வராது. அட்வகேட் ஜெனரல்கள், பிரதம மந்திரிகள், பிரபல வக்கீல்கள், திவான்கள்—இவர்கள் பெயர்கள் தான் அடிபடும்.

அவர்களை மட்டும் தான் தம் நண்பர்களாக அவர் சொல்லிக் கொள்வதும் வழக்

கம். பரதன் அவர் அறைக்குள் நுழைந்தபோது டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார் வீரகேஸரி :

" ஆமாம்—நேற்று நீங்கள் வந்திருந்தீர்களோ ! அடடா ! அபாரமாய் இருந்தது போங்கள் ! ஒரே சக்கைப் போடு!—"

டெலிபோனை வைத்துவிட்டு வீரகேஸரி தம் மேஜை மேல் இருந்த மணியை



ஓங்கி அடித்தார். ஆபீஸ் பையன் வந்ததும், "மாரீசனைக் கூப்பிடு" என்று உத்தரவிட்டார். பையன் வெளியே சென்றான்.

அதுவரை ஆசிரியர் சமுகத்தில் நின்றபடியே இருந்தார் பரதன். எழுத்துப் பிரதி ஒன்றைப் படித்துக்கொண்டிருந்த வீரகேஸரி, மூக்குக் கண்ணாடிக்கு மேல் பார்வையை செலுத்தி அவரைப் பார்த்து எதிரிலிருந்த நாற்காலியை நோக்கித் தலையை அசைத்தார்.

" கூப்பிட்டீர்களா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் உதவி ஆசிரியர் " மாரீசன்."

" இந்த தே. மா. கட்டுரையைப் படித்தீர்களோ?"

"படித்தேன்"

" எப்படி இருக்கிறது?"

"சுமாராய் இருக்கிறது."

வீரகேஸரி தம் வலது கையை முகத்துக்கு நேரே உயர்த்தி, கையிலிருந்து எதையோ உதறுகிறவர் போல் ஐந்து விரல்களையும் குவித்து அவசரமாக மூடி மூடித் திறந்தார்: "ஒரே பேத்தல்!"

உதவி ஆசிரியர் முகத்தில் அசடு வழிந்தது: 'ஞு' என்று நாக்கைச் சப்புக் கொட்டிவிட்டு, "ஆமாம், ரொம்ப சுமாராகத்தான் இருக்கிறது" என்றார் அவர். "சரி, நீங்கள் போகலாம்" என்று அனுப்பிவிட்டு பரதன் பக்கம் திரும்பினார் ஆசிரியர்.

பரதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். மறுமலர்ச்சியின் ஏகப் பிரதிநிதியும், முடிசூடா மன்னருமான தம் நண்பர் தே. மாவின் கட்டுரையை "ஒரே பேத்தல்" என்று வர்ணித்த ஆசிரியர் எதிரில் தான் உட்கார்ந்திருப்பதை நினைத்த போது, அவர் தேகம் நடுங்கியது: தே. மாவின் பாட்டைத் தலையும், பித்தான் போடாத ஜிப்பாவும், மீசையும், திரு திரு என்ற பார்வையும் தேவலை போலிருந்தன! அழகாகத் தலையை வாரிக்கொண்டு, மல்லிகைப் பூப்போல் வெண்மையான சட்டையும் சரிகை அங்கவஸ்திரமும் தரித்த இந்த வீரகேஸரியிடம் ஒருவிதமான பயம் உண்டாயிற்று அவருக்கு.

"என்ன சமாசாரம்?" என்று பேச்சை ஆரம்பித்தார் வீரகேஸரி.

"ஒன்றுமில்லை. போன மாதம் தங்கள் பத்திரிகையில் ஒரு விளம்பரம் போட்டிருந்தேன். அதற்கு பதில் ஒன்று வந்திருக்கிறது. பதில் எழுதினவர் தம் பேரையோ விலாஸத்தையோ தெரிவிக்கவில்லை. பெட்டி நம்பர் 41, என்று போட்டிருக்கிறார். அது யார் என்று தெரிந்து கொள்வதற்காக வந்தேன்," என்றார் பரதன்.

"ஓஹோ!" என்றார் வீரகேசரி. ஒரு நிமிஷம் மௌனம். பிறகு மறுபடி வீரகேஸரி மேலே பேசத் தொடங்கி "நீங்கள் ராஜா பகதூர் ரங்கசாமிக்கு ஏதாவது உறவா?" என்று கேட்டார்.

பரதன் ஒன்றும் புரியாமல் ஒரு கணம் விழித்துவிட்டு, "மைத்துனன்" என்று போட்டார் ஒரு போடு!

"ஓ ஹோ!—இப்பொழுது கூடச் சற்று முன்னால் ராஜா பகதூருடன் டெலிபோனில் பேசினேன். நீங்கள் இங்கே வருகிறதைப்பற்றி அவர் சொல்லவில்லையே?"

"ஹி ஹி ஹி—அவருக்கு ஞாபகம் இருக்காது. பல ஜோலி—"

"ஆமாம்" என்று ஒப்புக்கொண்டார் வீரகேஸரி. மறுபடி அவர் மணியை அடித்ததும் பையன் வந்தான்.

"இவரை மாரீசனிடம் அழைத்துக் கொண்டு போ" என்று உத்தரவு கொடுத்துவிட்டு "நீங்கள் உதவி ஆசிரியரிடம் போனால் அவர் உங்களுக்கு வேண்டிய தகவலைத் தெரிவிப்பார்," என்று விடையளித்தார் பரதனுக்கு. பரதன் அவரை நமஸ்கரித்து விட்டுப் பையனைப் பின் தொடர்ந்தார்.

கூட்டு ஆசிரியர், துணை ஆசிரியர், மெய்யாசிரியர், பொய்யாசிரியர், போட்டி ஆசிரியர் முதலியவர்கள் அறைகளைக் கடந்து, உதவி ஆசிரியர்கள் இருந்த இடத்துக்கு இருவரும்வந்தார்கள். அறைக்கு வெளியே சுவரில், "தமிழர்களுக்காகத் தமிழர்களால் நடத்தப்படும் தமிழ்ப் பத்திரிகை" என்று கன்னத்தில் அறைவது போல் விளம்பரப்படுத்தி இருந்தது "கேஸரி" பத்திரிகை. வங்காளிகளுக்காக குஜராத்திகளால் நடத்தப்படும் மாதத்திப் பத்திரிகையோ என்று பரதன் சந்தேகித்திருந்தாரானால் அந்த சந்தேகம் அத்துடன் நீங்கி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை!

உதவி ஆசிரியர் அறைக்குள், மேஜை மேல் காலைத் தூக்கிப் போட்டுக்கொண்டு தினசரிப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார் "மாரீசன்". "கரம் பகோடா" என்ற தலைப்பின் கீழ் தாம் எழுதி வந்த துணுக்குகளுக்கு விஷயம் சேகரித்துக் கொண்டிருந்தார் அவர்.

"மாரீசன்" கேஸரி பத்திரிகாலயத்தில் வந்து நான்கு வருஷங்கள் ஆகின்றன. 'கேஸரி'யில் அவருக்கு வேலை கிடைத்ததும் அவர் எழுதி வந்த "கரம் பகோடா"வினால் தான். அங்கு வேலைக்கு வருமுன் வீட்டில் உட்கார்ந்தபடியே ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பக்கத்திற்கு வரும்படி "கரம் பகோடா" எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார் அவர். மாதத்தில் நான்கு வார இதழ்களுக்கும் சேர்த்து நாற்பது ரூபாய் சன்மானம் அவருக்குக் கிடைத்து வந்தது. உழைப்பும் அதிகம் இல்லை. தினம் பத்திரிகை படித்துவிட்டு சற்று நேரம் உட்கார்ந்து யோசிக்க வேண்டியது. அவ்வளவு தான்.

ஆனால் 'கேஸரி' பத்திரிகாசிரியர் வீரகேஸரியைப் பெரிய யோசனையில் ஆழ்த்தியது இது. "மாதம் நான்கு பக்கம் எழுதிவிட்டு நாற்பது ரூபாய் வாங்குகிறான். மேலே பத்து ரூபாய் போட்டு ஐம்பது ரூபாயாகச் சம்பளம் கொடுத்து இவனை நம் காரியாலயத்தில் வைத்துக் கொண்டால் மாசம் முப்பது நாளும் இங்கே உட்காரவைத்து வேலை வாங்கலாமே" என்று தீர்மானித்தார் அவர்.

மாரீசனுக்கு வேலை கிடைத்தது. ஆனால் அந்த தினத்திலிருந்து வீரகேஸரியைத் தமது பரம சத்ருவாகக் கருதத் தொடங்கினார் அவர். அவர் நன்றாக இருக்கிறது என்று அங்கீகரித்த கட்டுரைகள் ஆசிரியருக்கு ஒரே பேத்தலாகத் தோன்றின. நன்றாக இல்லை என்று அவர் நிராகரித்தவை அபாரம் என்றும், அமர்க்களம் என்றும், சக்கைப் போடு என்றும் ஆசிரியரால் புகழப்பட்டன. இதை நினைக்கையில் அபாரமான, அமர்க்களமான சக்கைப் போடு ஒன்றை ஆசிரியர் கன்னத்தில் போடலாமா என்று அடிக்கடி கோபம் பொங்கிக்கொண்டு வரும் மாரீசனுக்கு!

மற்ற உதவி ஆசிரியர்களும் ஒவ்வொரு காரணத்திற்காக ஆசிரியர் வீரகேஸரியிடம் ஆத்திரமும், கோபமும் கொண்டிருந்தார்கள். ஒன்றன்பின் ஒன்றாகத் தாம் எழுதிய தொடர் கதைகளையே வீரகேஸரி தம் பத்திரிகையில் வெளியிட்டு வந்ததற்காக அவரை மனப்பூர்வமாக வெறுத்தார், "குடுகுடுப்பாண்டி". தாம் நான்கு வருஷம் பிரயாசைப்பட்டு, அதற்கென்றே நாற்பத்தெட்டு இங்கிலீஷ் நாவல்களைப் படித்துவிட்டு எழுதிய தொடர் கதையை ஆசிரியர் பிரசுரிக்காமல் நிராகரித்ததற்காக அவருக்குக் கோபம் உச்சநிலையை அடைந்திருந்தது. எழுத்துப் பிரதியைக் கொண்டு போய் அவர் ஒரு தினம் ஆசிரியர் மேஜைமேல் வைத்தபோது "என்னப்பா இது?" என்று கேட்டார் வீரகேஸரி.

"தொடர்கதை ஒன்று எழுதியிருக்கிறேன்—"

"தொடர்கதையா! ஐயய்யோ—!"

"குடுகுடுப்பாண்டி"யாக இருந்தாலும் அவரும் மனிதர் தானே? ஆகையால் இந்த ஐயையோவைக் கேட்டதும் சிறிது கோபத்துடன் "ஆமாம், தொடர் கதைதான்" என்றார் தன்னம்பிக்கையுடன்.

வீரகேஸரி, நோட்டுப் புத்தகத்தின் ஓரத்தைத் தம் இடது கையினால் பிடித்து பக்கங்களைச் சடசட என்று இரண்டு தரம் தள்ளிப் பார்த்துவிட்டு "என்னப்பா; இதெல்லாம் நடக்குமா?" என்று கேட்டார்.

இப்படியாக "குடுகுடுப்பாண்டி"யின் தொடர் கதை வெளி வராமலேயே மடிந்தது. எனவே யாரையாவது தூக்கு மேடைக்கு அனுப்பும் அதிகாரம் தமக்கு இருந்தால் வீரகேஸரியை முதலில் அனுப்பிவைக்க "குடுகுடுப்பாண்டி" தயாராக இருந்ததில் வியப்பொன்றுமில்லை.

உதவி ஆசிரியர்கள் இவ்விதம் ஆசிரியரிடம் க்ஷாத்திரம் கொண்டிருந்தபடியால், அவரிடமிருந்து வருபவர்களையும் வெறுப்புடனும் அலக்ஷிய பாவத்துடனுமே வரவேற்பது வழக்கமாக இருந்தது. பரதன் "மாரீச"னிடம் போய் நின்ற போது சிறிது நேரம் வரையில் அவர் இவர் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. தம்மிடம் வராமல் நேரே அவர்

ஆசிரியரைப் போய்ப் பார்த்ததனால் ஏற்பட்ட கோபம் வேறு அவருக்கு.

ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு முகத்தைச் சிணுங்கிக்கொண்டு "எங்கே வந்தீர்?" என்று கேட்டார் "மாரீசன்"

தாம் வந்த காரியத்தையும், ஆசிரியர் தம்மை அவரிடம் அனுப்பியதையும் பரதன் தெரிவித்ததும், "மாரீசன்" ஏற இறங்க அவரைப்பார்த்தார். பிறகு "விளம்பரம் போடுகிறவர், தாம் யாரென்று வெளிபடுத்திக்கொள்ள விரும்பாததனால் தானே "பெட்டி நம்பர்' என்று போட்டுக் கொள்கிறார்? அப்படி இருக்கையில் அவர் பெயரையும் விலாஸத்தையும் வந்து கேட்கிறவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தம் என்ன என்று ஆசிரியரை நான் கேட்டேன் என்று கேளும்!" என்றார் அலக்ஷியமாக.

அப்படியே கேட்பதற்காக பரதன் திரும்பிய பொழுது "மாரீசன்" அவரை நிறுத்தி, உட்காரவைத்து ஒரு மணி நேரம் ஊர்க்கதையெல்லாம் பேசினார். தம் ஆசிரியரைப் பற்றி பரதனுக்குத் தாழ்வான அபிப்பிராயம் ஏற்படும்படியான வம்புகளையெல்லாம் அளந்தார். தங்கள் காரியாலயத்து சித்திரக்காரர் "இச்சு", ஆசிரியர் வீரகேஸரியைப்போல எழுதிய 'காரிகேச்சரை' மேஜைக்குள்ளிருந்து எடுத்து அவருக்குக் காண்பித்தார். கடைசியில் 'பெட்டி நம்பர் 41' என்பவரின் பெயர் விலாசம் கண்டு பிடிப்பதற்காக, ஒரு நோட்டுப் புஸ்தகத்தை எடுத்துப் புரட்டினார். உடனே அவர் முகத்தில் ஆச்சர்யம் தோன்றியது.

"அடத் தேரி! அதிருஷ்டக்காரர் ஐயா நீர்!" என்றார் மாரீசன்.

பரதன் "என்ன, என்ன?" என்றார் ஆவலுடனும் திகைப்புடனும்.

"பெட்டி நம்பர் 41 யார் தெரியுமா? தற்காலத்தில் பரதநாட்டியக் கலைக்குப் புத்துயிர் அளித்துவரும் ஸ்ரீமதி பர்வதவர்த்தனி தேவி அவர்கள் தான்" என்று தெரிவித்தார் 'மாரீசன்' மோவாய்க் கட்டையில் கை வைத்துக்கொண்டு.

(தொடரும்)

# இலக்கியமும் விமர்சனமும்



**ரா. ஸ்ரீ. தேசிகன்**

இங்கிலாந்தில் 19-ஆம் நூற்றாண்டில் ஒரு பெரிய விமர்சனக்காரராயிருந்த ஆர்னால்டு எழுதியுள்ள "தற்காலத்தில் விமர்சனம் செய்யக்கூடிய அலுவல்" (The Function of criticism at the present Time) என்ற கட்டுரையைப் படித்தால், அவர் கூறியிருக்கும் கருத்துக்கள் தற்காலத்துத்தமிழ் நாட்டுச் சமுதாயத்திற்கும், அதைக் கண்ணாடிபோலக் காட்டக்கூடிய இலக்கியத்திற்கும் பொருத்தமாக இருப்பதை உணரலாம். முதலில் அவருடைய விமர்சனக் கருத்துக்களை ஆராய்வோம். எல்லாத் துறைகளிலும் எல்லா அறிவுத் துறைகளிலும், மதம், வேதாந்தம், சரித்திரம், கலை, பௌதிக சாஸ்திரம் முதலிய எல்லாப் பிரிவுகளிலும் மனிதன் உண்மையை நாடவேண்டும் என்று! நான் கூறியதால் விமர்சனத்திற்கு அதிக மேன்மையை அளித்து விட்டேன் என்று என் மீது பழியைச் சுமத்துகின்றனர். சிருஷ்டிச் சக்தியைக்காட்டிலும் விமர்சனச் சக்தி குறைவு பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், சிருஷ்டிச்சக்தி எல்லாக் காலத்திலும் தோன்றாது. அதற்கேற்ற சூழ்நிலை வேண்டும். சிருஷ்டிச் சக்தி இலக்கியத்துறையில் மட்டும் தோன்றினால் மனிதன் நுகரக் கூடிய இன்பவட்டம் குறுகியதாய்ப் போய் விடும். படைப்பாற்றல் இலக்கியத்தோடு நின்று விடவில்லை. படைப்புச் சக்தியை நம் செயலில் காணலாம்; படிப்பிலே காணலாம்; விமர்சனமே ஒரு தனிச் சிருஷ்டியாக அமையலாம்.

தக்க விமர்சனம் இல்லாமற் போனதால், நல்ல கருத்துக்கள் எழவில்லை. கலைஞன் புதிய கருத்துகளைச் சிருஷ்டி செய்து விடுவதில்லை. அது ஒரு தத்துவ ஞானியின் வேலை—ஒரு விமர்சனக்காரனின் தொழில். அவன் தந்த கருத்துக்கள் ஜன சமுதாயத்தில் பாய்கின்றன. கலைஞன் உலகத்தை அறிகின்றான்; அக்கருத்தலைகள் மீது மிதக்கின்றான்: அவைகளைச் செஞ்சொற்களில் சிறை செய்கின்றான். சூழ்நிலை சரிவர அமையாத காரணத்தால் சிருஷ்டித்தொழிலைச் செய்யக்கூடிய கலைஞர்கள் ஆற்றை எதிர்த்து நிற்கவேண்டியிருக்கிறது. ஆற்றோடு மிதந்து செல்வது சுலபம். ஆற்றை எதிர்ப்பது எத்தனை கஷ்டம் பாருங்கள்!

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பநிலையில் பைரன் (Byron) ஷெல்லி (Shelly) வேட்ஸ்வொர்த் (Words Worth) முதலிய கவிகள் தோன்றினார்கள். இவர்கள் தங்கள் முழு ஆற்றல்களையும் காண்பிக்க முடியாமற் போயிற்று: அதற்குக் காரணம் சூழ்நிலை, தக்க சூழ்நிலையாக அமையாத காரணந்தான். ஜெர்மன் நாட்டைச் சார்ந்த கதேயிக்கும் ஒருதக்க சூழ்நிலை இருந்தது. வேட்ஸ் வொர்த்து அவர் நூல்களைப் படிக்காதபடியே அவரைத் தூஷித்திருக்கிறார். இது விந்தையிலும் விந்தை அன்றோ!

எல்லாக் காலங்களிலும் படைப்புத் தொழில் பிறக்கிறதில்லை என்று முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். புத்தக வாயிலாக ஒரு கருத்துலகம் சிருஷ்டிக்கப்பட

லாம். ஆனால் இயற்கையாய் அமையக் கூடிய உண்மை உலகத்தின் வளர்ச்சிக்கு அது ஒரு மாற்றாக ஆகுமா? ஆகாது தான். ஒன்றுமில்லாத நிலையில் புத்தகம் படைத்துத் தந்த கருத்துலகத்தில் இஷ்டப்படி திரியலாமன்றோ? ஆனால் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. ஷெல்லி நிரம்பப்படித்தவர். கோலிரிட்ஜின் (Coleridge) படிப்பிற்கோ கங்குகரை இல்லை. ஆனால் இயற்கையாய் அமைந்து கிடக்கிற சூழ்நிலைக்கு ஈடாகுமோ? ஆகாது தான். ஷேக்ஸ்பியர் அதிகம் படித்தவரல்லர். ஆனால் அவருக்குச் சூழ்நிலை அவருடைய உள்ளத்தைத் தொடக்கூடிய இயல்பாய் அமைந்து கிடந்தது. எலிஜபெத் அம்மையின் காலத்தில் இலக்கியச் சூழ்நிலைக்கு யாதொரு குறைவுமில்லை. பெரிக்லீஸ் காலமும், சிற்பிகளுக்கும் கவிவாணர்களுக்கும் கவிஞர்களுக்கும் தக்கதாயிருந்தது. சூழ்நிலைக்கேற்ற மனிதன் தோன்ற வேண்டும். தக்க சூழ்நிலை, தக்க மனிதன்—இவ்விரண்டும் வேண்டும். படைப்புத் தொழில் நிகழாத காலத்து அதன் விதைகள் ீழ ஒரு தக்க கழனியை அமைத்தல் வேண்டும். கழனியைத் தயார் செய்தல் விமர்சனக்காரரின் பொறுப்பாகும்.

விமர்சனம் என்பது இதுதான். பொருள்களை உள்ளபடி நோக்குதல் தான். இது யாருக்கு முடியும் தெரியுமா? பல இலக்கியங்களை ஆராய வேண்டும். அப்படி ஆராய்ந்தால் மனத்தில் ஒரு தனிப் பண்பு ஏற்படும். அதை உரை கல்லாக வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் எவர் பரீட்சை செய்கிறார்களோ, அவர்கள் தாம் உள்ளபடி விமர்சனம் செய்ய முடியும். ஆங்கிலமட்டும் போதாது. லத்தீன், கிரேக்க பாஷை முதலிய பாஷைகளில் காணப்படும் நூல் நயங்களைத் துருவி ஆராய வேண்டும். உலகத்திலுள்ள உயர்ந்த கருத்துக்களை ஒரு மதுகரம் போலச் சேர்க்க வேண்டும். இலக்கியத்திற்குக் காலதேசங்கள், வரம்புகள் இடையா. அது அகண்ட ஜனநாயகம். அதில் யாரும் உலாவலாம். சாதிச் சழக்குகளுக்கு அங்கே இடம் கிடையாது. பண்டை இலக்கியத்தைத் தள்ள முடியாது—பண்டைய இலக்கியம் என்ற முறையிலே, புதிய இலக்கியத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. புதிய இலக்கியம் என்ற முறையிலே, பண்டை இலக்கியங்களிலும் நவீன சிருஷ்டிகளிலும் காணக் கூடிய அம்சங்களை நடுநிலையிலிருந்து ஆராயவேண்டும்.

இந்தச் சுருதியில் 'ஆர்னல்டின்' விமர்சனம் பேசுகின்றது. அவர் தந்த கருத்துக்கள் எத்தனை பொருத்தமாய் விளங்குகின்றன பாருங்கள்!

பொருளை உள்ளபடி சொல்ல வேண்டும் என்ற கருத்தை எடுத்துக் கொள்வோம். நம் நாட்டில் ஒரு துறையிலும் பரந்த சிந்தனை கிடையாது. அரசியலிலும் சரி, பொருளாதாரம், கலை, இலக்கியம் விமர்சனம் ஆகிய ஒன்றிலும் இல்லை. எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடிய கவிதை கூட வகுப்புப் பிள்ளைத் தாக்கூடிய நிலையில் அமைந்து வருவதை நோக்குகிற எந்தத் தமிழன் உள்ளந்தாம் நைந்துருகாது?

பேரன்பினால் மிகைப்படுத்தி ஒன்றைக் கூறுவோம்; வெம்பகையால் ஒன்றைக் குறைவு படுத்துவோம். நடுநிசியில் நின்று ஆராய்ச்சி செய்வது சாதாரணக் காரியமன்று. அதற்கு விரிந்த நோக்கமும், பரந்த அறிவும் வேண்டும். அச்சமின்றி எதையும் கூறல் வேண்டும். மனதைரியத்தைக் கொண்டு தான் ஒருவன் நல்லவனாய் இருக்க முடியும். நல்லது புரிவதற்கும் தைரியம் வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை. எல்லா நற்குணங்களையும் நற்பாதையில் செலுத்த அச்சாணியாய் இருப்பது அஞ்சாமையே. மெய்ப்பொருள் என்பது தான் விமர்சனக்காரரின் குறிக்கோளாக அமைய வேண்டும்.

வடமொழி பெரிதா தென்மொழி பெரிதா என்ற சர்ச்சைகளை எழுப்புகின்றனர் சிலர். பிடில் என்ன செய்ய முடியும்? வீணை என்ன செய்ய முடியும்? அவற்றால் பெறும் பயன் அவைகளை வாசிப்போனுடைய திறமையையும் ஆற்றலையும் பொருத்திருக்கும் அல்லவா? அப்படியே தான்

மனதிலுள்ள கருத்துக்களைத் தெரிவிக்கக் கருவியாகும் பாஷையும்.

ஆகவே, எந்தப் பாஷையிலுள்ள நயங்களையும் நாம் கொள்ளவேண்டும். கருத்திற்கேற்ற சொல் தமிழில் அகப்படாத போது வேறு பாஷையிலிருந்து கொள்வது தவறல்ல. எல்லாம் தமிழில் இருந்தாகவேண்டும் என்ற அபிப்பிராயம் சிறந்ததன்று. தக்க சொற்களை—ஆரியமோ, அல்லது வேறு பாஷையோ இவைகளிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். மொழியாகிய குழந்தையை வளர்ப்பதையே நோக்கமாகக் கொள்ளுதல் கற்றறிந்தவர் கடனாகும். அப்போது மற்ற சச்சரவுகளுக்கு இடமில்லை. பாஷையை ஒரு ஜீவநதியாகக் கருதுதல் வேண்டும். அதில் எல்லா நதிகளுந்தான் விழும். தென் சொற்கடந்தான் வட சொற்கு எல்லை தேர்ந்தான்' என்று கம்பர் கூறிய சொற்றொடர் கம்பருக்கே தகும். இவ்விரண்டு பாஷைகளின் கலப்பிலேதான் கம்பர் சிறந்தார். சாதிப்பற்று, மதப்பற்று, பாஷைப் பற்று, மாகாணப்பற்று இன்னும் எத்தனையோ பற்றுக்களாம் சாயங்கள் ஏறின கண்கள் கொண்டு ஒரு பொருளை நாம் நோக்குகின்றோம். உண்மை விளங்க வேண்டுமானால், நம் கண்களை மாசறக் கழுவ வேண்டும்.

சமரச வேதாந்தக் கவியாய் விளங்குகிற நம்மாழ்வாரின் காம்பீரியமும், தமிழ்நாட்டுக் காவியத்திற்கு ஒரு சிகரம்போல நிற்கின்ற கம்பரின் சொற் சித்திரங்களையும் நோக்கினோமானால் வடசொல், தென்சொல் என்ற பூசலுக்கு இடமே இராது.

ஆர்னல்டு தந்த கருத்துக்கள் எத்தனை பொருத்தமாகத் திகழ்கின்றன பாருங்கள்!

சிந்தியுங்கள். சிந்தித்தால் அறிவுச் சுடர் உங்கள் முன் விரிந்தெழும்.





# பரிவட்டம்

லா. ச. ராமாமிருதம்

1871

அவன் கைகள் உரம் மிகுந்த கைகள். அதுவும் முழங்கையிலிருந்து விரல் நுனி வரை நல்ல வலிவு. தறியில் உட்கார்ந்து நாடாவை ஓட்டி ஓட்டி நரம்புகள் கெட்டிப்பட்டுப் போன கைகள். ஒரோரு சமயம் வெகு வேகமாய் நெய்யும்பொழுது புஜங்களில் நரம்பு முடிச்சு பந்து போல் எழுந்து அழுங்குவதும், கண்ணவிந்து திக்குத் தெரியாமல் தவிக்கும் எலி போல், மூலைக்குமூலை, நாடா முன்னும் பின்னும் ஓடுவதும் வேடிக்கையாயிருக்கும்!

ஒரு நாளைக்கு ஒரு பீஸ் (14 முழங்கள்).

"அந்தப் பையனுக்கென்ன குறைச்சல்? அவன் தறியிலிருந்து தினம் ஒரு பீஸ் எகிறுது! புளைக்கிற பையன்! சும்மாவா மளிகை வீட்டுப் பெண்ணைக் கட்டினுக!—"

அவனுக்குக் கலியாணமான புதிதில் ஊரெல்லாம் இதுதான் பேச்சு. ஊருக்கே ஒரு மளிகை. கொஞ்சம் சொத்துள்ள இடத்திலிருந்து பெண் வந்தால் பேச்சில்லாமல் இருக்குமா?

பெரிய இடத்துப் பெண்ணென்று வீட்டு வேலையில் அவள் ஒன்றும் சோடையாயில்லை. அவன் தாய் தாழ்வாரத்தில் உட்கார்ந்து நூலை பிழைததுக்கொண்டே, பானையையும் சட்டியையும் எடுத்துச் சமையலறையில் நடமாடிக்கொண்டிருக்கும் மருமகளுக்கு சமையலின் பக்குவத்தைப்பற்றி அரறிக் கொண்டேயிருப்பாள். "உப்பு போட்டியா? புளியைப் போட்டியா? நல்லா கொதிக்க வை......."

சமையல் என்னவோ உருப்படியாய் இரவு ஒரு வேளை தான். அதுவும் கார்த்திகை மார்கழியில் பகலில் சமைக்கக்கூட நேரமிருக்காது. வேலை அவ்வளவு மும்முரம். அடுத்தாற்போல் பொங்கல் வருகிறதல்லவா?

"பையனுக்கு வென்னீர் விளாவினையா?"

இரவில் கிணற்றடியில், கொதிக்கும் வென்னீரில் உடலின் வலிதீரக் குளித்துவிட்டு, நடுமுற்றத்தில் நிலவின் வெளிச்சத்தில் வெண்கலக் கிண்ணத்துக்கெதிரில் தாயும் மகனும் உட்கார்ந்து, மருமகள், சோற்றை ஆவிபறக்க வட்டித்து, எள்ளுத்துவையலும் ரஸமும் பரிமாறுகையில், ஆஹா! "வெத்தல் வறுக்கச் சொன்னேனே, வறுத்தியா? மறந்துட்டியா? வறுத்திருக்கையா, பின்னே ஏன் சும்மா வெச்சிருக்கே, கொண்டு வந்துவை....கொழந்தே நல்லாயிருக்கா?"

பின்னே எப்படியிருக்குமாம்?

அறையில் பாவு நூல் அடியில் படுத்துக்கொண்டு அரைத்தூக்கத்தில் கண்ணயருகையில், கனவு காண்பதுபோல் வெளிச்சத்தங்கள் காதில் விழும்.

"மாட்டுக்குத் தவிடு வெச்சியா? கண்ணுக்குட்டியைத் தனியாக் கட்டினையா? நேத்திராத்திரி நீ கட்டின லட்சணம், இன்னிக் காலையிலே கறக்கப் போனால் தாயும் கன்னும் துள்ளி விளையாடுது, காலையிலே நம்ப பாவு நூல் ஓடுதுபோல இருக்குதே, கஞ்சி காய்ச்சினையா? சரி நேரமாச்சு, போய்ப் படு. பாலை எடுத்துக்கோ— அம்மாடி...."

கிழவி தன் உடலை விசுப்பலகையில் நீட்டுகையில் பலகை நொடிக்கும்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் அறைக்கதவு மெதுவாய்த் திறந்து மூடும். 'கிறீச்'சிடும்.

அரிதான பளுவுகளைத் தூக்கியும், 'உடலைக்'கசிர்' வாங்கும் காரியங்களை அநாயாசமாய்ச் செய்யும் அவன் கைகள், அவள் உடலின் மிருதுவைத் தொடக்கூட அஞ்சும். பகலில், வீட்டுக்கும் தொழிலிலும் மன்னனவன் இரவில், இவ்வோலைப்பாயில், மஞ்சளின் மணம் கமழும் அவள் அருகாமையில் தன்னையிழந்து போவது அவனுக்கே ஆச்சரியமாயிருக்கும். அவன் அணைப்பின் வேகத்தில், அவள் கூந்தல் சரிந்து அவன் தோள்மேல் விழும். பல கணிவழி நிலவொளியில், இடையில் நெகிழ்ந்த ஆடையுடன் பற்கள் தெரிய, மௌனச்சிரிப்பு அவள் சிரிக்கையில் அவன் மண்டை கிறுகிறுக்கும். அவன் கைகள் நிறைந்த அவள் ஆலிங்கனத்தில் குளித்துவிட்டு, அவளை அணைத்த கையுடன், மல்லாந்து படுத்து, அவர்களிருவர் மேலும் பரவியிருக்கும் பாவுநூலைச் சிந்திக்கையில், அது ஒரு 'குளிர்தரு நிழல்போல் அவனுக்குப் படும். அவர்கள் ஜீவனமே அதன் குடைகீழ்தான். விழித்தெழுவதும் அதன் கீழே. உழைப்பதும், உண்டு உடுப்பதும் அதனாலே, படுப்பதும், பரம்பரை வளர்வதும் அதன்கீழே. அவனே தான் அவன் தொழில். அவன் தொழிலே தான் அவன்.

அவர்களிருவரும் அதிகமாய்ப் பேசின ஞாபகம் அவனுக்கில்லை. அவர்கள் தொழிலிலேயே பேச்சுக்கு அதிக இடமில்லை. பேச்சில் கவனம் போனால், எந்த சமயம் எந்த இழை எப்படி அறுமோ? மத்தியானம், மாமியாரும் மருமகளும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்துகொண்டு நூல் நூற்பார்கள். மடியில் வைத்திருக்கும் கொட்டாங்கச்சியில் பரிவட்டம் கூத்தாடும். பாவில் குறுக்கே பாயும் கலர்நூலும் வெள்ளைநூலும், நாடாவுக்குத் திட்டமாய்க் கட்டைகளில் ஏற்றியாகவேண்டும். இடையிடையில் வீட்டு அலுவல்கள் காத்திருக்கும். சாப்பாட்டுக்கு நெல் புழுக்கணும் பண்ணையாளுக்குக்கூழ் வார்க்கணும் சாயங்காலம் பரிவட்டத்தைத் தூக்கிக்கொண்டு, பாவுநூல் தடும் ஆலைக்குப் போகணும்.

இழைக்கு இழை நிமிட்டி நெய்தாகணும், இழைக்கு இழை.

இதற்குள் இரவு மறுபடியும் எட்டிப் பார்க்க ஆரம்பித்துவிடும்.

ஆசை வெறியில் ஒருவர் அணைப்பில் ஒருவர் திணறும் மூச்சுத்தான் அவர்கள் பேச்சு.

கிழவி விசுப்பலகையில் படுத்த வண்ணம் முனகுவாள்.

"அடுப்பைப் பார்த்து மூட்டு. உள்ளே பூனைக்குட்டி தூங்கிக் கிட்டிருக்கப் போவுது. என்னிக்கோ, இந்த வீட்டுக்கு வந்த பொண்ணு ஒண்ணு பார்க்காமே மூட்டிப்பிட்டு, ஒரு குட்டியைப் பொசுக்கித் தான் இப்போ மூணு தலைமுறையா வீட்டுக்கு ஒரே புள்ளையா நிக்குது. எனக்குப் பாடை கட்டி சங்கூதினப்பறந் தான் பேரப்பிள்ளை வீட்டிலே நடமாடுவான் போலத் தோணுது. மருமவள் வீட்டுக்கு வந்து ஆறுமாதமாச்சு. இன்னும் ஒண்ணுந் தெரியல்லே ......!"

கிழவியின் நெஞ்சுக் குறையைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அதைத் தீர்ப்பதும் அவர்கள் வசமல்ல. அதெல்லாம் முருகன் அருள். இப்பொழுதைக்கு ஒருவரில் ஒருவர் முழுகியிருந்தனர். அவ்வளவுதான். நெய்ய நெய்ய இடங்கொடுக்கும் பாவுநூல் போல், ஒருவர் இன்பத்தை ஒருவர் நுகர நுகர, அவர்கள் ஆசை இடங்கொடுத்துக்கொண்டே போயிற்று. உடலில் இளமையிருக்கும் வரை அதை தளும்பிக்கொண்டிருக்குமேயொழிய துடிப்பற்று நின்றுகொண்டிருக்குமா?

நாளடைவில், அவனையுமறியாமல் அவனிடம் அவன்விழைந்துபோவதாகத்தோன்றிற்று. அவன் வைத்திருக்கும் ஆசையின் உணர்வே அவனுக்கு ஒரு தனிசோபையை அளித்தது. கண்ணெதிரில் புதுமோஸ்தரில் கட்டான்களுடன் சிக்கலான வர்ணப் பாய்ச்சல்களுடன் உருவாகிக்கொண்டி

ருக்கும் துணிபோதும், அவளிடம் ஒரு தனி அழகு உருவாகிக்கொண்டிருப்பதை அவன் கண்டான். மேனியில் ஒரு தளதளப்பு. பார்வையில் ஒரு வெற்றி பணியில் ஒரு சிறு தாமதம். பகலிலோ, இரவிலோ பரிமாறுகையிலோ, தறியிலிருக்கையில், தாகத்திற்கு, சாதத் தண்ணீர் கொண்டுவந்து தருகையிலோ, ஓரக்கண்ணால் அவளைக் கவனியாமல் அவனால் இருக்க முடியவில்லை.

பகலெல்லாம் ஏன் இரவாயில்லை?

அவள் எதிரில் அவள் உலவாத சமயத்தில் அவள் உரு அவன் கண்முன் எழும். நெற்றியில் வியர்வை கட்டும். இடையில் நெகிழ்ந்த ஆடையும், பல்வரிசைப் பளீர் அடிக்கும் மௌனச் சிரிப்பும் அவிழ்ந்து சரிந்த கூந்தலும்.........

மனமயக்கத்திலிருந்து அவன் தன்னை உதறிக்கொண்டு வேலையில் முனைகையில், நாடா முன்னும் பின்னும் பறக்கும்.

"பையா இறங்குடா—விளக்கு வெச்சுப் போச்சு—பிள்ளையார் கோவிலுக்கு விளக்குப் போட்டுட்டு வரணுமே!—"

"இரு அம்மா, இன்னும் ஒரு முழந்தான்."

அம்மாதம் மொத்தம் முப்பத்தைந்து பீஸ் அறுத்தான். தறியில் புதுப் பாவு பூட்டணும்.

தறியிலிருந்து இறங்குகையிலேயே விளக்கு வைத்தாகி விட்டது. வேலையோடு வேலையாய் இன்னிக்கே பூட்டிவிட்டால், நாளைக்குப் பூட்டும் நேரத்துக்கு ஒண்ணு, ரெண்டு முழம் செய்யலாம். ஒரு முழம் என்றால் ஒரு முழம். ஒரு நிமிஷம் தான் சொல்லு. அதுக்குள்ளே நாடா இரண்டு தடவை குறுக்கே போயிட்டு வருமே!.......

அவர்கள் தொழிலில் அடுத்தடுத்துச் செய்யவேண்டியவற்றைச் சொல்லாமலே அறிந்து செய்வது, அத்தொழிலின் இயல்புடனேயே இழைந்தது. இழையிலிருந்து துணியாகும் ஒவ்வொரு கட்டத்துக்கும் சொல்லிச் செய்வதென்றால் கட்டாது. தாயும் பிள்ளையுமாயோ, புருஷனும் மனைவியாகவோ, இருவரும் சேர்ந்து ஒருருவாக்கும் துணி தான் அது. நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை.

பையன் புதுப் பாவு பூட்டப் போகிறான் என்று கிழவி சொல்லாமலே அறிந்தாள். ஒத்தாசைக்கு மருமகளைச் சமையலறையிலிருந்து அனுப்பினாள். அடுப்பில் குழம்பு காய்ந்து கொண்டிருந்தது.

கையில் தகர விளக்கைப் பிடித்துக் கொண்டு, உயரத்தில் பாவு நூலை அவள் புருஷன் மாட்டுவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வெளிச்சம் அவள் முகத்தையும் மார்பை மூடிய சிவப்புப்புடவையை மாத்திரம் ஏற்றியது. மைதீட்டிய விழிகள், மிருதுவான கன்னங்களுக்கு மேல் ஜ்வலித்தன. மோவாயின் குண்டு, விக்கிரஹத்துக்குச் செதுக்கினாற்போலிருந்தது. குழந்தைச் சிரிப்பில் இரண்டு பற்கள் மாத்திரம் வெளித் தெரிந்தன. ஒரு கணம், கண்ணுக்குக் கண்வாள்போல் ஜ்வலித்தன. அதன் காரணந்தானோ என்னவோ கையில் ஏந்திய விளக்கு நூல் பக்கமாய்க் கொஞ்சம் சாய்ந்தது. சரசர வென்று நூல் பற்றிக்கொண்டது. இழைக்கு இழை அதிவேகமாய்ப் பொசுங்கியது. இழைக்கு இழை உயிரை விட்டுக் கொண்டு நிமிட்டிய இழை. தோளிலிருந்து பாவு நூல் தடாலென்று கீழே விழுந்தது. அவன் மனத்தில் எழுந்த குமுறலில் என்ன செய்தான் என்று அவனுக்கே புரியவில்லை. தன்னையே கொளுத்தினது போலிருந்தது. பளீர்! அவள் கன்னத்தில் அவன் அறைந்ததாக, அறைந்த பின்னர் தான் அறிந்தான். விளக்கு அணைந்து கீழே உருண்டது!

அவன் அடித்த அடியில் அவள் திகைத்துவிட்டாள். வலியைவிடத் திகைப்பு. திகைப்பைவிடக் கோபம். அவள் ஒன்றுமே பேசவில்லை. அறைந்த கன்னத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, அவ்விடம் விட்டு அகன்றாள். வாசற் கதவு தடாலென்று மூடியது.

நடந்ததெல்லாம் நொடிப்பொழுதில் தான். சொல்லத்தான் இன்னேரம்.

சந்தடி கேட்டு, கிழவி சமையலறையிலிருந்து ஓடி வந்தாள். "என்னடா பையா ஒரே இருட்டாயிருக்குது?"

இருளிலிருந்து அவன் குரல் சீறிக் கொண்டு வந்தது. "உன் மருமவளைக் கேளு—"

"எங்கே அவள்?"

"வாசல் பக்கமாப் போனு—பாவை எரிச்சுட்டு—"

"என்ன?"

கிழவி உடலில் பாய்ந்த வீரத்திலும், கோபத்துடன் தெருவைப் பார்க்க நடந்த



வேகத்திலும், அவள் வயதில் பத்தேனும் குறைந்திருக்கும். ஆனல் அவள் போன சுருக்கைவிட திரும்ப ஓடிவந்த சுருக்குத் தான் அதிகமாயிருந்தது.

"வாசல்லே காணபேடா பையா!"

கோபத்தில் அவன் உடல் வியர்த்தது.

"வெள்ளிக்கிழமையும் அதுவுமா பாவு நூலை எரிச்சுட்டு விட்டை விட்டும் வெளியே போயிட்டாளா?"

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியில் கிளம்பினான்.

"என்னான்னு நெனிச்சிட்டிருக்கா, இதென்ன மான ஈனம் ஒன்னும் கிடையாதா? ராத்திரி வேலையிலே போட்டதை அப்படியே போட்டபடி போட்டுட்டு கடையைக் கட்டினாளே! இந்த அக்கிரமம் கண்டதுண்டா, கேட்டதுண்டா!" என்று கிழவி அரற்றிக் கொண்டேயிருந்தாள்.

வாசற் கதவைத் திறந்து கொண்டு அவள் பிள்ளை வரும் சப்தம் கேட்டது. தனியாய்த் தான் வந்தான். விசுப் பலகையில் உட்காருகையிலேயே அவன் மனச் சோர்வு வெளிப்பட்டது. கோபத்தில் முகத்தில் கறு ரத்தம் குழம்பியிருந்தது.

"எங்கேடா போனே?"

"அவங்க வீட்டுக்கு—"

"ஏண்டா போனே, போன சிறுக்கித் தானு வராள். பெரிய இடத்துப் பெண்ணாயிருந்தால் என்ன பெண்டாட்டி யென்பதை மறந்துட்டாளா?"

"பெண்ணின் சமத்து அவங்களுக்குத் தெரியவேண்டாமா, என்று சொல்லத் தான் போனேன்.

"சொன்னியே என்னவாம்?"

"அவங்க பெண்ணை விடமாட்டாங்களாம். அவங்க பெண் வீட்டு வேலை செய்யவேண்டிய அவசியமே யில்லையாம். நம்ம மாதிரி நாலு தறி கூலிக்குப் போட்டு வேலை வாங்க தெம்பு இருக்குதாம்—"

"என்ன, என்ன! பெண்ணின் சமத்துக்கு மேலேன்னு! இருக்குது அவங்க சமத்து?"

'என்னம்மா, அவங்களா பேசறாங்க, பணத்திமிர்னு அப்படி பேசவைக்குது. பெண்ணைக் கொடுத்துட்டா, மருமவனை விலைக்கு வாங்கிட்டதா நெனைச்சுருக்காங்கபோல இருக்குது. மேலே வேலையை ஓட்டு—"

வேலையை ஓட்டு என்று சொல்லி விடலாம். ஆனால்......

அவன் தாய் சமயலறையில் குழம்பைக் கிளறிக்கொண்டே காத்துக்கொண்டிருந்தாள். அவள் வயிற்றின் கொதிப்பை அவன் நன்றாய் அறிய முடியும். ஆயினும் அதைவிட அவன் தீவிரமாக அவனை உறுத்திற்று. சோறு நாக்கு நுனியில் விஷமாய், மாறிற்று.

இன்று அவன் படுக்கையில், பாவு நூல் குடைபோல் அவன் மேல் படர்ந்து இல்லை. ஒரு பாதி எரிந்து, நூல்கள் அறுந்துபோய் ஒரு மூலையில் கிடந்தது.

தூக்கமற்று, முன்னும் பின்னுமாய்ப் புரளுகையில், அவன் கைகள் உயிரற்று வெறும் பாயில் விழுந்தன.

இந்தப் பாழும் பொழுது தான் விடியுமா?

அவன் தாய் முக்கி முனகிக்கொண்டு எழுந்து வாசலில் சாணித் தெளிக்கிறாள்; வயது காலத்தில்........

ஆயினும் அவர்கள் தொழிலில், வயதுக்காரர் வயதானவர் எல்லோருக்கும் வேலை உண்டு. சும்மாயிருக்க முடியாது. இளமையிலிருந்து மூப்புவரை அவர்கள் வாழ்க்கையே, இழைக்கு இழை பின்னி நெய்த துணி போலவே தான். மூச்சுக்கு மூச்சு இழை. இழைக்கு இழை மூச்சு.

ஆயினும், இப்பொழுது அவன் மனைவி வீட்டை விட்டு வெளியேறியதிலிருந்து ஏதோ கைக்கடங்காத சுடாபோல், இளமையின் விகாரங்கள் அவன் மனதில் கட்டுக்கடங்காத கட்டான்களை விழைத்தன. கட்டை விரலும் சுட்டு விரலும் இழையை நிமிட்டிக் கொண்டிருக்கையிலேயே திடீரென்று அவைகளின் செயல் நின்றுவிடும். மனக்கண்ணெதிரில் அவள் உரு எழும். உட்செவியில், அவள் அணைப்பில், ஆசை வெறியில் அவள் திணறும் மூச்சின் ஓசை. உள் வாசனையில்

மனத்தை மயக்கும் அவன் உடல் நாற்றம்.........

“அடே கொழந்தே என்னடா அப்படியே கல்லா சமைஞ்சுட்டே? துணியை எடுத்துக்கிட்டு போகவேணுமாடா....”

இப்பொழுது அவன் மர்மனூர் கடையில் நெய்த துணியைப் போடுவதற்கில்லை. வுசரா வாரம் மூணு மைல் நடந்து பக்கத்து ஊருக்குப்போய் விற்றுவிட்டு நூலை வாங்கிவரணும். போகிற வழியிலும் வருகிற வழியிலும் அவனைக் கண்ணாலும் கையாலும் சுட்டிக்காட்டி, குசுகுசுவென்று பேசுபவர் எத்தனைபேர்! வாயைத்திறந்து அவனை ஏசுபவர் எவருமில்லை. ஊருக்கே அவன் வேண்டியவன் தவிர, அவனை ஏச என்ன இருக்கிறது?

அவனிடம் கொண்டு கொடுத்து சம்பந்தம் பண்ணினவரை தூற்றத் தைரிய முள்ளவருமில்லை. அநேகமாய் எவுலோருமே கூலிக்கு நெய்பவர்கள் தான். ஊரில் முக்கால் வாசித் தறிகள் அவன் மாமனுருக்குச் சொந்தம். ஏறத்தாழப் பேசினுல், அல்லது பேசினதாய்க் காதில் விழுந்தால், வாயில் மண் தான். இந்தப் பணம் பண்ணும் வேலை தான் என்ன? பணம் ஒரு தினுசில் மனிதனை முறியடிக்கிறது. பாசம் ஒரு தினுசினுல் முறியடிக்கிறது.

இப்பவும் அவளை மறக்க, வேலையில் மும்முரமாய் விழுந்து நெய்து கொண்டே போகையில் அவள் செய்த செய்கையும், வீட்டைவிட்டுப் போன விதத்தையும் நினைக்கையில், நெஞ்சில் மூண்டெழும் சினம், அவன் உடலிலும் மனத்திலும் ஒரு பரவசத்தை எழுப்பி வெகு நாழிகை அவனை வேலையில் நிறுத்தி வைக்கும்.

கோபம், குரோதம் இவை யெல்லாம் கெட்ட உணர்ச்சிகளாயிருக்கலாம் ஆயினும் அவை உடலுக்கும் மனதிற்கும் ஒரு தினுசில் தீவிரத்தைக் கொடுக்கின்றன. “அப்படியா செய்தி? எத்தனை நாள் இப்படியே இருக்கப் போகிறுள் பார்த்துடுவோம். ஒரு பெண் பிள்ளைக்கு இவ்வளவு திமிரா, அவள் செய்த காரியத்துக்கு?”

“ஆனுல் அப்படி என்ன செஞ்சுப்பிட்டா?” ஒரு சிறு கேள்வி, அடுத்தாற்போலேயே, காலடியில் மண்ணைப் பறிப்பது போல் எழுந்து, கோபத்தையும் ரோஸத்தையும் கிளப்பிக்கொண்டு திடம்பண்ணிக் கொள்ளும் சித்தத்தைக் கலைத்தது. அன்பும், பிரிவாற்றுமையும் பழைய நினைவுகளும் சஹிக்க முடியாத வேதனைகள்.......

இரவு எப்பொழுது வரும்?

வந்தால், பொழுது எப்பொழுது விடியும்?

இப்படித்தான், நாளுக்கு நாள், இரவுக்கு இரவு, வாரம், மாதம்........

அவன் அத்தெருப் பக்கம் கூடப் போவதில்லை. ஆயினும் அவ்வீட்டார் அவன் தாயையும், அவனையும் தூற்றும் வார்த்தைகள் மாத்திரம் காதில் படாமல் போகிறதா? அத்துடன் இல்லை. அவ்வார்த்தைகள் முதலில் கிளம்பினது எப்படியோ, வாய்க்குவாய் மாறி, அவன் செவிக்கெட்டு முன், மூக்குமுழி யெல்லாம் அவைகளுக்கு ஏற்பட்டு, ராக்ஷஸப் பிண்டங்களாய்த் தான் வருகின்றன.

“வீட்டுக்கு வந்த பெண்ணை, அந்தக் கிழவி அப்படிப் படுத்தினுளாம், இப்படிப் படுத்தினுளாம் பெண் தூக்குப் போட்டுக்கக்கூட இருந்ததாம். அந்தப் பையன் அப்படி சம்பாரிக்கிறுன்னு பேரு. ஒரு வெள்ளிக்கிழமை வந்தால், அவன் பெண் சாதிக்குன்னு ஒரு காலணு பூ வாங்கி வந்தான்னு உண்டா? அவன் கையாலே ஒரு அஞ்சு ரூபாய்க்குப் புடவை வாங்கிக் கொடுத்தான்னு உண்டா? காசைக் கொண்டு வந்து கிழவி கிட்டக் கொடுத்துட்டா ஆய்ப்போச்சா?”

முதன் முதலில், அவன் தாயின் காதில் தான், இவ்வதந்திகள் விழும். குளிக்கப் போன விடத்திலும், கடைக்குப் போன விடத்திலும், பேசப்போன விடத்திலும், பேசவந்தவரிடத்திலும் கேட்டுக்கொண்டு வந்து கிழவி வயிற்றிலும் வாயிலும் அவன் எதிரில் அடித்துக் கொள்வாள்.

“பாருடா உனக்கும் எனக்கும், உன் பெண்சாதி வாங்கி வைக்கிற பேரு.

ஏண்டா என்னைப் பார்த்தால் உனக்கு அப்படித் தோணுதாடா? அடே, என் வயித்திலே நீ ஒண்ணுதாண்டா பொறந்தே. எனக்கு வேறே பொண்ணு கூட இல்லேடா, மருமவளா நினைக்கல்லேடா, மகளாய்த்தாண்டா நெனைச்சேன். ஒங்க இரண்டுபேருக்கு மில்லாத சுகம் எனக்கென்னடா? நீங்க ரெண்டுபேரும் சந்தோஷமாயிருக்கறதைப் பாக்கறதுதானேடா எனக்கு சந்தோஷம். என் வயசுக் காலத்திலே—நான் என்னடா என்னோடே தூக்கிக்கொண்டு போவப்போறேன்!........

வீண் அபவாதம் தாங்காமல் அவள் மனம் முறிந்து அழுகையில், அவன் தோள்களிடையில் தலை குனியும், அந்த சமயத்தில் அவன் மூளையைக் குழப்பும் உணர்ச்சிகள் ஒன்றா, யிரண்டா?

கடைசிலே எல்லாம், சாக்கடையிலே சக்கரம் சாஞ்ச தேர் மாதிரி ஒரு காலணுப்பூவிலே, தான் வந்து நின்னுபோச்சு. தன்னையே அவள் கிட்டக் கொடுத்துவிட்டு அவன் தவிக்கிறதுபெரிசில்லே. ஒரு காலணுப் பூ தான், அவனைவிட, எல்லாத்தையும் விடப் பெரிசு. இதுவரையில் பொட்டலமாயிருந்த குடும்ப கௌரவம், எப்படி சீர்ப்படுகிறது! ஒரு காரணமுமில்லாமே!

நாளடைவில் இன்னொரு சமாசாரம், உடல்மேல் முழுமுழுவென்று ஊறும் எறும்புபோல், அவனுக் கெட்டிற்று; வீட்டைவிட்டு வெளியேறினதிலிருந்து அவள் ஸ்னானம் பண்ணவில்லையென்று. அவன் உடலை ஒரு பெரும் வேகம் ஊடுருவியது. அவளைப் போய்ப் பார்க்கலாமா?

இரவில், படுக்கையில், திடீர் திடீரென்று, தீப்பந்தத்தில் குங்கிலியம் போட்டது போன்று, அவ்வெண்ணம் அவனை வாட்டுகையில், வேதனையில் கைகள் முஷ்டித்தன. உடல் அதிர்ந்தது. ஆசை பெருக்கெடுக்கையில் நியாயம், அநியாயம், சரி, தப்பு ரெண்டுக்கும் வித்தியாசம் கண்டு பிடிக்கிற புத்திகூட அடித்துக்கொண்டு போய் விடுகிறது.

பிறகு திடீரென்று ஓரிரவு ஒரு எண்ணம் அவனுக்கு உதித்தது.

அவன் தாய்வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு, நூலை இழைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தள்ளவில்லை. ஆயினும் நூலை இழைத்தாக வேண்டும். மாவை ஆலையில் கொடுத்து ஓட்டியாக வேண்டும். துணி நெய்தாக வேண்டும். தொழில் நடந்தாகவேண்டும். பரம்பரைத் தொழில்!

அசதியுடன், விசுப்பலகையில் உட்கார்ந்தான்.

“அம்மா! நாம் இந்த ஊரைவிட்டுப் போவோம்; இங்கே இருக்கப் பிடிக்கல்லே—”

கிழவி பொக்கை வாயைத் திறந்து புகைச்சிரிப்புச் சிரித்தாள்.

“நல்லாயிருக்குதே உன் பேச்சு! என்னமோ முட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தணும் என்கிறையா? இதோ பார், நானும் மருமவளாய் இருந்து மாமியாராய் வந்திருக்கிறேன். எங்க நாளிலேயும் எங்க புருஷன் எங்களைக் கோபிக்கறதுண்டு, அடிக்கறதுண்டு. ஆனால் அதுக்காக, வீட்டுக்கு வந்த பொண்ணுங்களெல்லாம் வீட்டைவிட்டுப் போனதில்லே. கொண்டவன் கொலை பண்ணல் கூட, படி தாண்டினதில்லே. அந்தக் காலமெல்லாம், அடிச்சாலும் குத்தினாலும் புருஷன் தான் பெரிசு. என்னதான் காலம் மாறிப்போச்சுன்னாலும் இந்த மாதிரிப் பொண்ணுங்களுக்கெல்லாம் பயந்து ஊரை விட்டு ஓடிப்போறதுன்னா என்னமோ அப்பா, எனக்கு மனம் இடம் கொடுக்கல்லே. நீ வேணுமானால் போ—இந்த புதுக்காலத்துப் புள்ளையா. நான் பழங்காலத்துப் பொம்மனாட்டியாவே இருந்துடறேன். எனக்கு இன்னும் ரொம்ப நாளில்லே. வயசாச்சு. நான் புகுந்த வீட்டிலே செத்துப்பூடறேன். எனக்கு அதுதான் கௌரவம். இந்த வீட்டிலே, உன் தகப்பன், அவருக்கு அப்பா, அவங்க அப்பாவுக்கு அப்பா எல்லோரும் வாழ்ந்து நல்லா ஆய்வந்த வீடு. நேத்திக்கு வந்த ஒரு பெண், இத்தனை நாளாய் இங்கே நிலைச்ச ஒரு குடும்பத்தைக் கலைச்சுடற

அன்று இருந்ததுன்னு, அந்த அக்கிரமத்துக்கு அடங்கிப் போக என்னல் முடியாது. பெண்ணுக்கும் பெண்ணை பெத்தவங்களுக்கும், முன் புத்தி பின் புத்தி, ஈனமானம் இல்லாமல் போனல், நமக்குக் கூடவா இல்லாமே போச்சு? ஊரைவிட்டு ஓடிப்போகும்படி என்னடா பண்ணிட்டோம்?"

கிழவி நூலை இழைத்துக் கொண்டே பேசிக்கொண்டே போனுள். இழைக்க இழைக்க ராட்டினம் 'விர்'ரென்று சுழன்றது, அவர்கள் விதியின் சக்கரமே போல்.

"கோழி கூரை மேலே பறந்து போய் குந்திகிட்டு 'கொக்கரக்கோ' என்று கூவிட்டா, உடனே வீடு அதுக்குச் சொந்தமாயிடுமா? அது அது இருக்க வேண்டிய இடத்திலே இருந்தால்தான் அது அதுக்கு லட்சணம். அவள் இந்த ஊரையே, அரசாளட்டுமே. அதனுலே போனமானத்தைக் கொடுத்துடுமா பணம், இல்லாட்டா புருஷனைத்தான்கொடுக்குமா? வாழாவெட்டி வாழாவெட்டி தானே, எத்தனபேர் தாங்கினுலும்!

"நீயே பார், அவள் வயத்திலே இப்பொழுது வளருதே, நம்ம வீட்டுக் கொழுந்தே, அது பிறக்க வேண்டிய தினுசு இப்படித்தானு? இந்த வீட்டுக்கே மூனு தலைமுறையா ஒரே புள்ளை. என் செல்லப் பேரனை என் மடியிலே வெச்சுக் கொஞ்சனும்னு எனக்கு இருக்காதா? மாதம் ஏழாச்சு, இன்னமும் நம்ம சொத்து நம்ம கிட்ட வந்து சேர்க்கல்லே பாரு! சீமந்தம் பண்ணவேண்டாமா? ஊமைக் கொளந்தே பிறந்தால் என்ன செய்வாங்களோ, தெரியல்லே! இது மாதிரி அக்கிரமமா யிருந்துட்டா, அவங்க செய்யற காரியம் ஜரிச்சுப்போயிடுமா?"

மனிதன் தானே தனக்கு இழைத்துக் கொள்ளும் அவஸ்தையை, என்னென்று சொல்வது?

* * * *

ஒரு நாளிரவு தெருக்கோடியில் வசிக்கும் அம்பட்டன் தாயாருக்கு அவசரமாய் ஆள் வந்தது. உடலின் ஊழைச் சதை குலுங்க அவள் 'லொங்கு' லொங்கென்று ஓடினுள்.

மளிகை வீட்டுப் பெண்ணுக்கு இடுப்பு வலி எடுக்குதாம் என்று ஊரெல்லாம் சமாசாரம் பற்றிக்கொண்டது.

ஒரே சமயம் இரண்டு பக்கமும் பேசும் சாமர்த்தியம், இந்த ஊர் வாய் என்னும் ஒரு வாய்க்குத்தான் உண்டு!

"என்ன மானங்கெட்ட பிழைப்புப் பார்த்தியா, இந்த மளிகை வீட்டுக்காரருக்கு!"

"இந்தப் பையனும் இப்படி வீம்பாயிருக்கானே; சாவற வரைக்குமிருக்க முடியுமா?

அன்று இரவெல்லாம் அவன் தூங்கவேயில்லை. இடுப்பு வலியில் அவள் துவளுவதைப்பற்றி நினைக்கையில், அவன் இதயம் மாரைப்பிய்த்துக்கொண்டு வந்து விடும் போலிருந்தது. இப்பவாவது தன்னைப்பத்தி நினைக்கிருளோ?

அவன் அறையின் வாசற் பக்கத்து ஜன்னல் கம்பிகளை இறுகப்பற்றிக்கொண்டு கற்சிலைபோல் நின்றுன். அதன் வழி பார்த்தால் பக்கத்துத் தெருவின் திருப்பம் தெரிந்தது. வாய்க்காலுக்குப் போகும் வழி.

விடியுமா?

பலபல வென்று புலரும்வேளையில், ஒரு சிறு கூட்டம் அத்திருப்பத்தில் மெது வாய் ஊர்ந்து செல்வதைக் கண்டான். எல்லோரும் மளிகை வீட்டுக்கார மனிதர்கள். அவர்களில் ஒருவன்—அவன் மாமனுர், மஞ்சள் துணி சுற்றிய ஒரு சிறு மூட்டையை ஏந்திச் சென்றுர். முகம் தொங்கியிருந்தது.

அவனுக்குப் பிடரி குறுகுறுத்தது. மாரைப்'பக்'கென்று அடைத்தது.

அன்று அந்தி வேளை, வாய்க்காலுக்கும் கழனிக் கட்டுகளுக்கும் அப்பாலிருக்கும்

சுடுகாட்டுக்குப் போய், அங்கு புதிதாய் எழுப்பியிருக்கும் மேட்டண்டை நின்றான்! திடீரென மனத்தில் ஒரு எண்ணம். பர பரவென்று மண்ணைப் பறித்து, உள்ளே கிடக்கும் பிண்டத்தை எடுத்து ஒரு தட வையேனும் மார்மேல் அணைத்துக்கொண் டால் என்ன? அதன் முகம் தான் எப் படி யிருக்கும்?

அவனை எச்சரிப்பது போன்று, எங்கே யோ ஒரு நரி ஊளையிட்டது.

அச்சமுற்று அவ்விடம் விட்டு அகன் றான்.

* * * *

ஆயினும், நாளுக்கு நாள் புரை ஓடும் புண் போல் ஒரு அசதி அவனைக் கொஞ் சம் கொஞ்சமாய்த் தின்ன ஆரம்பித்து விட்டது. வேலையில் மனம் ஊன்றவில்லை. அதற்கு முதல் அறிகுறியாக, அவன் இழைக்கு இழை ஓட்டுகையில், இன்னம் எத்தனை இழை ஓட்ட இருக்கிறது. நெய் கையில் நாடா குறுக்கே எத்தனை தடவை ஓடுது, என்றெல்லாம் அர்த்தமற்று, அசதி மூட்டும் கேள்விகள் உதிக்க ஆரம் பித்துவிட்டன. "ஓராயிரம், இரண்டா யிரம் பத்தாயிரம் தடவை--பத்தாயிரமா? ஐயோ இன்னமும் எவ்வளவு நெய்யணும் ஒரு பீஸ் அறுக்க? இன்னிக்கு அறுக்க முடியுமா? தோணல்லே—கொஞ்சதூரம் நடந்து வருவோம்—"

மாலை வேளை. மணி நாலாய் விட்ட போதிலும், வெய்யலின் வெப்பம் கடுமை. வாய்க்கால் ஜலத்தில், காலைக்குளிர நினைத் துக்கொண்டு, வயற்புறம் சென்றான். கழ னிக்கட்டுக்களில் நெற்கதிர்கள் ரகசியம் பேசுவதுபோல் சலசலத்தன. காற்றின் குளிமை, கண்களுக்கும் கொதிக்கும் மண்டைக்கும் இதமாய் இருந்தது. ஏற்றக் கிணறில் குளிக்கலாம் போல் தோன்றிற்று.

ஆயினும் கிணற்றில் இறங்குவதற்காக எடுத்துவைத்த கால் அப்படியே நின்றது. அவன் கண்கள் அவன் கண்ட காக்ஷியில் உறைந்து போயின. கிணற்றுள், ஒரு படிக்கட்டில் எவளோ உட்கார்ந்து குளித் துக்கொண்டிருந்தாள்! இருபத்திரண்டு வயதிருக்கும். பட்டு நூல் போல் பள பளக்கும் கட்டான உடல். யாரோ பண் ணையாளின் மனைவி போலும், அந்த சமயத்தில் யாரும் அந்தப் பக்கம் வருவார் என்று எதிர்பார்த்திருக்க மாட்டாள். சௌகரியமாகவே குளித்துக்கொண்டி ருந்தாள! அவன் நெற்றியில் வியர்வை முத்திட்டது. அதுவரை உள்ளே அடக்கி வைத்திருந்த உடலின் வேட்கை திடீ ரென்று வெளிப்படுகையில், அவன் உடலே கிடுகிடென்று ஆடிற்று. வெகு வேகமாய் வீட்டுக்கு ஓடிப்போய்க் கத வைத் தடாலென்று அறைந்து தாளிட் டான். மிருகம்போல் அவனுக்கு மூச்சு இறைத்தது. மிருகத்தின் வாய்ப்பட்ட இரைபோல் அவன் தவித்தான். மனப் புயல்........!

அதன் அலைகள் ஓய ஓய, அவன் மனத்தைக் கவித்துக்கொண்டிருந்த பனிப்படலமும் கொஞ்சங் கொஞ்சமாய் விலகத் தலைப்பட்டது.

இன்று மாதிரி இன்னொரு தடவை நேர்ந்தெனில் அவன் மனத்தை மறு படியும் வெற்றிகொள்வது கடினந்தான். அவன் வயதுக்கு—அதுவும் ஆண்ட— அவனுக்கும் உடல் வேட்கை இயற்கை தான். அதை அடக்க முடியாத சமயத் தில் அதை முடக்குவதில் எவ்வளவோ விபரீதம், இயற்கைக்கு விரோதம், அவன் தொழிலுக்கே ஹானி. அப்பனிட மிருந்து பிள்ளைக்குப் பாரம்பரையாய் வந்து தன்னிகரில்லா தனித்தொழிலான நெச வுத் தொழில். இந்தப் பாரம்பரையைக் காப்பாத்த ஒரு பிள்ளை வேண்டும்.

பெண்டாட்டி மேல் ஆசை இருக்க வேண்டியதுதான். ஆனால் ஆசை அறிஞ் சவதான் பெண்டாட்டி. அன்பை அறி யணும்னு அன்பு இருக்கணும். அன்பில் லாதவள் இடத்திலே அன்பை வெச்சுட்டு அவஸ்தைபட்டால், பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான். அவளுடைய அசட்டுத்தனத்துக்கும் அழுத்தத்துக்கும் எல்லையில்லாமல் போனாலும் அவன் பொறுமைக்கு எல்லையுண்டு. இதே மாதிரி

தன் இடத்தையும் மானத்தையும் மறந்த பொம்மனாட்டி கிட்ட காட்டற பொறுமை பொறுமையில்லே. அசட்டுத்தனம்தான். இத்தனை நாள் அவள் விசாரத்தை அவன் பட்டுக்கொண்டிருந்தது போதும். இனி மேல் அவள் விசாரத்தை அவளே பட்டும். அவன் கஷ்டத்துக்கு விமோசனம் அவன்கிட்ட இருக்குதேயொழிய அவள் கிட்டே இல்லே. உலகத்தை வெறுத் துட்டுப் போற வயசில்லே அவன் வயது. உலகத்தை யேன் வெறுக்கணும்? உல கத்தை ஜயிச்சுட்டுத்தான் அதை வெறுக் கணும். அதுக்கு முன்னாலேயே வெறுத் தால் அதுக்குத் தோற்றால்போல தான்.

அனுமான் தன் பலத்தை மறந்தது போல், தன்னைத்தான் மறந்து இத்தனை நாள் இருந்ததே அவனுக்கு இப்பொழுது ஆச்சரியமாயிருந்தது. சமையலறையில் வேலையாயிருக்கும் தன் தாயிடம் தீர்மா னத்துடன் போனான்.

" அம்மா நாம் இனிமேல் நம்ம வேலை யைக் கவனிக்கணும்" என்றான். "எனக்கு வயசு ஆச்சு வீட்டுக்கு ஒரு மருமவள் வந்தாகணும். நல்ல மருமகள்......."

ஒரு பெரும் மூச்சு கிழவியின் தொண் டையிலிருந்து கிளம்பிற்று. எத்தனையோ நாளாய் வெளிப்பட வேண்டுமென்று காத்திருந்த மூச்சு.

" நல்ல பெண்ணாகக் கட்டறேன். நம்மை நாட்டாமை பண்ணாமே, வீட்டுக் கடங்கின சரக்காய் எனக்குத் தெரியும். நம்ம பக்கத்து வீட்டுக்காரன் தங்கை பெண். நல்ல நூலிழைக்கிறாள். நல்லா சமைக்கிறாள். நல்லா குடும்பத்திலே உயண்டிருக்கா. தன்னை நல்லா காப்பாத் திப்பாள். புருஷனைக் காப்பாத்தினால் தன்னைக் காப்பாத்திக்கிட்டாப் போலத் தானே? ஒரு பொம்மனாட்டிக்குப் புருஷ னைத் தவிர என்ன வேணும். ஆண் பிள் ளைகளுக்குக்கூட பெண்சாதி அவசிய மில்லே. ஆனால் பொம்மனாட்டிக்குப் புரு ஷன் வேணும். புருஷன் இருக்கிற வரைக்கும் தான் அவங்களுக்கு மதிப்பு. நாளைக்கு நல்ல நாளாயிருக்குது. ஆள் விட றேன்."

ஊர் சும்மாயிருக்கிறதா?

" இவன் இன்னொரு பெண்ணைக் கட்டி னால், அந்த மளிகை வீட்டுப் பெண் கதி என்ன ஆவறது?"

" அதுக்கு அவனு என்ன செய்வான்? கட்டின அப்புறம் கூட பெண்டாட்டியா இல்லாமே, மளிகை வீட்டுப் பெண்ணாய்த் தான் இருப்பேன்னு இருந்தால், அப்ப டியே இருந்துட்டு போவட்டும். அதனால் யாருக்கு நஷ்டம்?"

அவன் தறியில் இறங்குகையில் மறு படியும் பழைய உற்சாகம் அவன் உடலில் ஊறியது. ஒரு தீர்மானத்திற்கு வருகிற வரையில் தான் அவஸ்தை வந்துவிட்டால் அப்புறம் அவ்வளவு கஷ்டமில்லை. இத் தனைநாள் அவளில் தன்னை இழந்து விட்டு, இப்பொழுது தன் மதியால் தன் னைத் திரும்பிப் பெற்றதே ஒரு பெரும் ஆறுதல். அவனை அழுக்கிக்கொண்டிருந்த கேள்வியிலிருந்து தான் மீண்டதே ஒரு ஆச்சரியம். அவ்வனுபவம் சென்று கடந்தெனினும், இப்பொழுது பின்னோக் கிப் பார்க்கையில்தான், அதன் பயங்கரம் இன்னும் தெளிவாய்த் தெரிந்தது. அவன் கஷ்டம் தீர்ந்தது. இனி அவள் கஷ்டம் தான், அவளே இஷ்டமாய் வரவழைத்துக் கொண்ட கஷ்டம். இஷ்டப்படி பட்டும்.

போனது போகட்டும். இனி மறுபடியும் ஏமாறமாட்டேன். என்னை இனி யாருக் கும் இழக்க மாட்டேன். இனி வருபவ ளிடம்கூட உஷாராய்த் தானிருப்பேன். என்னில் ஒரு பங்கு தான் கொடுப்பேன். எனக்கு, என்னை பத்திரமாய் வைத்துக் கொள்வேன். கொடுத்தால் என் தொழி லுக்குங் கொடுப்பேன். என் தறி, என் நூல், நான் நெய்யும் துணி.......

" இன்னிக்கு வெள்ளிக்கிழமை. புதுப் பாவு பூட்டணும். விளக்கு வெச்சுப் போச்சு இப்போ, சோம்பல் பட்டால், அப்புறம் நேரமிருக்காது."

அவன் தாய் விளக்கைப் பிடித்தாள். சுருட்டிய பாவைத் தோளில் தாங்கிக் கொண்டு தறி மேடைமேல் ஏறினான்.

வாசற்கதவு திறந்து மூடியது.

"யாரது?"

பதிலில்லை. ஆனால் உள்ளே மாத்திரம் யாரோ.

இருளிலிருந்து விளக்கின் ஒளியின் வீச்சுகள் அவள் வருகையில். அவனுக்கு வாயடைத்துப் போயிற்று. கிழவியின் உடலெல்லாம் வெடவெடவென்று ஆடியது. மாமியாரின் கைவிளக்கை அவள் தன் கையில் வாங்கிக்கொண்டாள். பேச்சு அவளுக்கும் எழவில்லை. கன்னத்தில் கண்ணீர் மாலையாய் வழிந்தது. எப்படி இளைச்சுப் போயிருக்கா?

கிழவி தள்ளாடிப்போய் விசுப்பலகையில் உட்கார்ந்து கொண்டாள். வெளியிலிருந்து அவள் குரல் கணீரென்று அவர்களை எட்டியது.

"பெண்ணே, விளக்கை உஷாராய்ப் பிடி. அடேடையையா, அவள் சரியா பிடிக்காட்டால் கூட நீ அனுவசியமா கையை மிஞ்சிடாதே."

அவன் அவளைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவள் கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாய் உதிர்ந்து கொண்டேயிருந்தது. அதைத் தடுக்க அவன் ஒன்றும் முயலவில்லை. இருவர் மனமும் இன்றிரவில தான் லயித்திருந்தது.

இத்தனை நாள் பட்ட துன்பமெல்லாம் இன்று ஓரிரவில் ஆறிவிடும். பிரிவின் நெருப்பில் கருகி யிளைத்த இருவர் உடலும் மறுபடியும் மலரும். மறுபடியும் நல்லரசின் குடைநிழல் போல் அவர்கள் இருவர் மேலும் இன்றிரவு பாவு நூல் படர்ந்து காக்கும். இன்றிரவு பலகணி வழி சந்திர வெளிச்சம் உண்டு. படுக்கையில் புரளுகையில் அவன் கைகள் இன்றிரவு பொத்தென்று வெறும்பாயில் விழாது, இன்றிரவு.......!



# செயற்கை மருந்துகள்



பேராசிரியர் C. V. ராமகிருஷ்ணன், எம்.எஸ்.ஸி.

உலகிலே மக்களின் எண்ணிக்கையோ கணக்கு வழக்கு இல்லாமல் பெருகிக்கொண்டிருக்கின்றது. ஆனால் அதே சமயத்தில் பயிரிடக்கூடிய நிலம் மிகச் சிறிய அளவில் இருப்பதால், அதனின்றும் கிடைக்கக்கூடிய உணவுப் பொருளின் அளவு ஒரு சிலருக்கே போதுமானதாயிருக்கின்றது. எனவே, அமெரிக்கா முதலிய வெளி நாடுகளினின்றும் கோதுமை மாவு, சோள மாவு முதலிய பொருள்களை இறக்குமதி செய்து உணவுப் பொருள்களாக உபயோகிக்கின்றோம். மேற்கூறிய வகைகளில் கிடைக்கும் உணவுப் பொருள்களை சற்று ஆராய்ந்து பார்த்தால், அவைகளில் சத்துப் பொருள்கள் மிகவும் குறைவு என்று நன்கு புலப்படும். அமெரிக்கர்கள் கோதுமையிலுள்ள சத்துப் பொருளாகிய ‘ரவை’யை எடுத்துக்கொண்டு மிகுதியைத் தான் நமக்கு அனுப்புகின்றார்கள். நம் நாட்டில் கிடைக்கும் அரிசியைக்கூட தீட்டிவிடுவதாலும், கஞ்சியை வடித்துவிட்டு மக்கள் மிகுதியை உண்பதாலும் அரிசியிலுள்ள சத்துப் பொருள்களும் போய்விடுகின்றன. பொதுவில் சத்துள்ள உணவுப் பொருள்கள் போதுமான அளவிற்கு கிடைக்காததாலும் (Malnutrition), கிடைக்கும் உணவுப் பொருள்களையும் சரியான வகையில் சமைத்துப் புசிக்காததாலும் பெருவாரியான மக்கள் இளம் வயதிலேயே பல்வேறுவித வியாதிகளால் பீடிக்கப்பட்டு வருந்துகின்றனர். இதன் காரணமாக பலர் இளமையிலேயே மரித்து விடுகின்றனர்.

வியாதிகளுக்கு முக்கிய காரணம் சத்துள்ள பொருள்களை புசிக்காததால்தான் என்று நன்கு தெரியவருகின்றது. ஆகவே விஞ்ஞானிகள் ஒன்றுசேர்ந்து பல்வேறு உணவுப் பொருள்களில் உள்ள சத்துப் பொருள்களை ஆராய்ந்து, அவைகள் மனிதன் அருந்தும் உணவில் சரியான அளவில் இல்லாததால் உண்டாகும் வெவ்வேறுவிதமான வியாதிகளைப்பற்றி ஆராய ஆரம்பித்தனர். தற்சமயம் மக்கள், உணவுப் பொருள்கள் கிடைக்காததாலும், அதனால் உண்டான வியாதிகளாலும் மிகவும் கஷ்டப் படுகின்றனர். ஆகவே முதன்முதலில் மக்களுக்கு உள்ள வியாதியை நீக்கிவிட்டால், பின்னர் தேவையான சத்துள்ள உணவுப் பொருள்களைக் கொடுத்து சரிகட்டி இனி வியாதி வராது செய்துவிடமுடியும். எனவே பல்வேறுவித வியாதிகளைப் பற்றியும், அவைகளை ஒழிப்பதற்கு வேண்டிய மருந்துகளைப் பற்றியும் முதன்முதலில் இரசாயினிகள் ஆராய ஆரம்பித்தனர்.

நம் முன்னோர்கள் காலத்தில் இந்தியாவில் ஏராளமான காடுகள் இருந்தன. அவைகளில் ஏராளமான தாவர மூலிகைகள் அடர்ந்து வளர்ந்து கிடந்தன. அக்காலத்திலிருந்த நாட்டு வைத்தியர்கள், மூலிகைகளினின்று பலவித சாரங்களையும், தைலங்களையும் தயாரித்து மனிதர்

களுக்கு உண்டான வியாதிகளை நீக்கி வந்தனர். மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகவே, காடுகளை அழித்து அங்கு குடிபுக ஆரம்பித்தனர். ஆகவே, மூலிகைகளும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தன. தவிர பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின்கீழ், மேல்நாட்டு நாகரீகம் நம் மக்களிடம் குடிபுக ஆரம்பித்தவுடன், ஆயுர்வேதம் போன்ற நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கைக் குறைந்து நாட்டு வைத்தியர்களை யாரும் ஆதரிக்காததால், நாளாவட்டத்தில் அவர்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. தற்சமயம் வியாதியஸ்தர்களின் எண்ணிக்கை கணக்கு வழக்கில்லாமல் பெருகியிருப்பதாலும், கிடைக்கும் மூலிகைகளின் அளவு மிகக் குறைவாயிருப்பதாலும், தவிர மூலிகைகள் கிடைத்தாலும் அவைகளைச் சரியான முறையில் உபயோகிக்கத் தெரிந்த ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாலும், மேல் நாட்டு முறையைப் பின்பற்றி இந்திய தேசத்து இரசாயனிகளும் 'செயற்கை மருந்துகள்' தயார் செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

முதன்முதலில் மேல் நாடுகளில்தான் செயற்கை மருந்துகளைப்பற்றிய ஆராய்ச்சி ஆரம்பமாயிற்று. 1886-ம் ஆண்டில் லேடன்பெர்க் (Laddenberg) என்பவர் தாவரங்களிலிருந்தும் எடுக்கப்படும் கோனின் (Conine) என்ற ஆல்கலாயிடை (Alkaloid) இரசாயன சாலையிலேயே தயார்செய்தார். பின் 1899-ம் ஆண்டில் ஆஸ்பரின் (Aspirin) என்ற முதல் செயற்கை மருந்து தயார் செய்யப்பட்டது. இது மூட்டு வியாதியை (Rhuma-tism) நீக்க உபயோகப் படுத்தப்பட்டது.

வியாதிகளை நீக்குவதற்கான மருந்துகளைக் கண்டுபிடிக்குமுன்னர், வியாதிகளைப்பற்றிய ஆராய்ச்சியிலேயே ஈடுபட ஆரம்பித்தனர். மனிதனைப் பிடிக்கும் வியாதிகளை (Functional diseases) இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம் :—(1) உடலில் உள்ள ஏதாவது ஒரு அவயவம் கெடுவதன்மூலம் வியாதி உண்டாவதாகும். இங்கு அந்த அவயவத்தை மறுபடியும் சுத்தம்செய்து சரியாக வேலை செய்வதன்மூலம் வியாதியை நீக்கிவிடலாம். உதாரணமாக ஈரல் (Liver) சரியாக வேலை செய்யாவிட்டால் காமாலை உண்டாகின்றது. ஈரலை சுத்தம் செய்து மறுபடியும் வேலை செய்யும்படி செய்தால் காமாலை தானாகவே போய்விடுகின்றது. (2) வெளியிலிருந்து வரும் விஷக் கிருமிகள் (organisms) உடலைத் தாக்கி பாழ்படுத்துவதால் தொத்து நோய் உண்டாகி உடல் முழுவதும் கெட்டுவிடுகிறது. இங்கு வெளியிலிருந்து வந்த எதிரிகளை ஒழித்தால் ஒழிய, வியாதி நீங்காது. மேற்கூறியவற்றினின்றும் வியாதிகளை சாதாரண வியாதி, தொத்து வியாதி என இரு வகையாகப் பிரிக்கலாம் என்று தெரிகிறது. இதில் தொத்து வியாதிதான் அபாயகரமானதாகையால், இரசாயினிகள் அதைப்பற்றிய ஆராய்ச்சியில் அதிக ஊக்கம் காட்ட ஆரம்பித்தனர்.

தொத்து வியாதி மூன்று வித எதிரிகளின்மூலம் மனித உடலில் பரவுகின்றது என்று கண்டுபிடித்திருக்கின்றனர். முதலாவது எதிரி, பேக்டீரியா (Bacteria) என்பவைகளாகும். இவைகள் வெகு வேகமாக பெருகி மனித உடலைத் தாக்குகின்றன. இரண்டாவது ப்ரோடோசாக்களாகும் (Protozoa). இவைகள் அதிகம் அபிவிருத்தி அடைந்த பேக்டீரியாக்களாகும். இவைகள் ஆரம்பத்திலும், கடைசியிலும் பெருகுகின்றன. மூன்றாவது விரஸுகளாகும் (Virus). இவைகள் பாதி உயிருள்ளனவும், பாதி உயிரில்லாதனவுமான பொருள்களாகும். உயிருள்ள பொருளில் போட்டவுடன் இவைகள் பெருகுகின்றன. இவைகளைப்பற்றி நிச்சயமாக இதுவரையில் ஒன்றும் தெரியவில்லை. முதலாவது, இரண்டாவது எதிரிகளை வடிகட்டி விடலாம். ஆனால் விரஸை (Virus) வடிகட்டி நீக்க முடியாது. தவிர மக்னீஸியம், சர்க்கரை, தண்ணீர் முதலியன கலந்த செயற்கை இடைநிலையில் பேக்டீரியாவையும், ப்ரோடோசாவையும் வளரும்படி செய்யலாம். ஆனால் விரஸைப்பற்றி எவ்வளவோ முயன்றும், இதுவரையில் நிச்சயமாக

ஒன்றும் புலப்படவில்லை. ப்ரோடோஸோவா தான் மலேரியா, தூக்கும்வியாதி (Sleeping sickness) முதலியன பரவக் காரணமாகும். பேக்டீரியா மூலமாகத்தான் நிமோனியா, கொனோரியா, காலரா, ப்ளேக் முதலியன பரவுகின்றன. வைரஸ் மூலமாக டைபாயிட், பொன்னுக்குவீங்கி, அம்மை முதலியன பரவுகின்றனவாம். இவைகளில் பேக்டீரியா, ப்ரோடோஸோ இரண்டையும்பற்றி நன்கு தெரியுமாதலால் அவைகளைக் கொல்வதற்கு வேண்டிய மருந்துகளைத் தயார் செய்வதன்மூலம் அந்த இரண்டு எதிரிகளாலும் உண்டாகும் வியாதிகளை நீக்கிவிடலாம். ஆனால் மூன்றாவது எதிரியான வைரஸைப்பற்றி ஒன்றுமே தெரியாததால் அதைப்பற்றிய ஆராய்ச்சி முடிகிற வரையில் அதனால் உண்டாகும் வியாதிகளுக்கு மருந்து கண்டுபிடிப்பது சிரமமான காரியமாகும். ஆகவே வியாதிகள் வராமலிருப்பதற்காக ஊசிக்குத்திக்கொள்ளலாமே ஒழிய அவைகள் வந்துவிட்டால் தாங்களாகவே நீங்க வேண்டும். வைத்தியம் செய்து அவைகளைக் குணம் செய்ய முடியாது.

---

பேக்டீரியா, ப்ரோடோஸோ இரண்டையும் கொல்வதற்கான மருந்துகளைத் தயார் செய்யும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட ஆரம்பித்தனர். 1935-ம் ஆண்டில் டொமெக் (Domagk) என்பவர் ப்ரான்டோஸில் (Prontosil) என்ற இரசாயனப் பொருளைக் கண்டுபிடித்தார். இது நைட்ரஜன், ஹைட்ரஜன், கந்தகம், கரி முதலியவைகளினால் ஆனப் பொருளாகும். இது பேக்டீரியாவைக் கொன்று, நிமோனியா என்ற வியாதியை நீக்குகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் இந்த பொருளில் உள்ள முதல் பாகம் அவசியமில்லை என்று தெரிந்தது. ஆகவே மிகப் பழைய காலத்திலிருந்து உபயோகத்திலிருந்துவரும் ஸல்பானிலமைட் (Sulphanilamide) என்ற இரசாயனப் பொருளையே உபயோகப்படுத்தலாம் என்று தெரியவந்தது. இந்தப் பொருளினின்றும் ஒரு அட்ஜனக (Hydrogen) அணுவை நீக்கி இதர இரசாயனப் பொ[illegible]களை சேர்ப்பதன்மூலம் அநேக அத்தி[illegible]வசியமான மருந்துகளைக் கண்டுபிடித்தனர். உதாரணமாக ஸல்பாபிரிடின் என்ற பொருள் எம் and பி 693 என்ற நாமத்தில் உலாவுகிறது. அமினோதையோஸால் என்ற பொருள் சிபஜால் (Cibazol) என்ற பெயருடன் உலாவுகின்றது. இவைகள் நிமோனியா, சொரி, சிரங்கு முதலியவைகளுக்கு மருந்துகளாக உபயோகப்படுகின்றன. இந்த இரசாயனப் பொருள்களில் உள்ள கந்தகம் (Sulphur) பேக்டீரியாக்களை கொன்றுவிடுவதால்தான் வியாதி குணமாகிறது. பேக்டீரியாக்களைக் கொல்ல கந்தககாமிலத்தை (Sulphuric acid) ஏன் உபயோகிக்கக்கூடாது என்று சிலர் கேட்கலாம். கந்தககாமிலம் பேக்டீரியாக்களைக் கொல்வதல்லாமல் மனிதனையே எரித்துக் கொன்றுவிடும். ஆகவே உடலை பாதிக்காமல், பேக்டீரியாக்களை மட்டும் கொல்லும் செயற்கை மருந்துகளைத்தான் (Mild Antiseptic) கண்டுபிடிக்கவேண்டும். டாக்டர் திக்ஷித் (Dr. Dixit-Medical College, Bombay) ப்ளேக்கை பற்றி ஆராய்ச்சி நடத்தி, அதை நீக்கத் தகுந்த மருந்துகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் வெற்றியடைந்ததின் பயன் தான், இன்று பிளேக்கை நீக்க உபயோகப்படும் மருந்தாகிய ஸல்பாடையஸின் ஆகும். (Sulphadiazine)

மேற்கூறிய செயற்கை மருந்துகளெல்லாம் பேக்டீரியாவைக் கொல்லும் விஷப் பொருள்களாகிய கந்தகப் பொருள்களாகும். பொதுவில் அவைகள் அபாயகரமான பொருள்களாகும். ஆகவே அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் இரத்தத்தால் உறிஞ்சப்பட்டு, உடலில் உள்ள வெள்ளை அணுவுடலிகள் (White corpuscles) கெட்டு, சில சமயங்களில் உயிருக்கு அபாயங்கூட ஏற்படலாம். ஆகவே, வெகு குறைந்த அளவில் அவசியத்திற்கு ஏற்பதாக அவைகளை உட்கொள்ளவேண்டும்.

தற்காலத்தில் க்ஷயம், குஷ்டம், புரைநோய் (Cancer) இவைகள் அதிகமாகப் பரவியிருக்கின்றன. தற்சமயம் இந்த வியாதிகளைத் தவிர மற்ற வியாதிகளுக்கெல்லாம் மருந்துகள் கண்டுபிடித்துவிட்டனர். சமீப காலத்தில் பெனிஸிலின்

(Penicilin) என்ற அபூர்வமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அது அநேகமாக எல்லா வியாதிகளையுமே (மேலே கூறிய மூன்று வியாதிகள் தவிர) குணப்படுத்திவிடுகின்றது என்று கண்டு பிடித்திருக்கின்றனர். க்ஷயம், குஷ்டம், இரண்டையும் ஆராய்ந்ததில் அவைகள் அமில பேக்டீரியாக்களால் (Acid fast bacteria) உண்டாகின்றன என்று தெரிய வருகின்றது. இந்த பேக்டீரியாக்கள் எண்ணெய் பசையால் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே அவைகளைத் தண்ணீரில் கரையும் மருந்துகள் (Watersoluble Drugs) தாக்க முடியாது. க்ஷயம், குஷ்டம் இவைகளை ஒழிக்கவேண்டுமாயின், பசையைத் தகர்த்து உள்ளே செல்லக் கூடியனவாயும், தண்ணீரில் கரையக் கூடியனவாயும் உள்ள மருந்துகள் கண்டு பிடிக்கப்படவேண்டும். சமீபத்தில் 'நோபல்' பரிசு பெற்ற, இங்கிலாந்திலுள்ள ராபர்ட் ராபின்ஸன் (Robert Robinson) செய்த ஆராய்ச்சிகளெல்லாம் இதுவரையில் ஒன்றும் பலன் தரக் கூடியதாயில்லை. தற்சமயம் புனாவிலுள்ள புரொபஸர் பி. வி. பிடே (Prof. B. V. Bhide) என்பவர் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். அவர் மருந்துகளில் கந்தகத்திற்கு பதிலாக பாஸ்பரஸ் (Phosphorous) இருக்கும்படி செய்தால் அது அதிக தீவிரமாக வேலைசெய்யும் என்று நினைத்து பாஸ்பரஸ் பொருள்கள் செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். அதில் அவர் வெற்றி யடைவாராயின் இரண்டு பெரிய அரக்கர்களை இந்தியாவிலின்றும் ஒழித்துவிடலாம்! மூன்றாவது அரக்கனாகிய புற்று நோயைப்பற்றி இன்னும் சரியாக ஒன்றுமே விளங்காமல் இருக்கின்றது. அவைகளைப் பரப்பும் பேக்டீரியாக்களைக் கண்டுபிடித்த பின்னர் தான், செயற்கை மருந்துகள் தயார் செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட முடியும்.

மேலே, செயற்கை மருந்துகளைப் பற்றிய விவரங்களை அறிந்தோம். நம் நாட்டிலே இமயமலைச் சாரல்களிலே ஏராளமான மூலிகைகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. அவைகளைக் கொணர்ந்து இரசாயன சாலைகளில் ஆராய்ந்து அவைகளில் உள்ள பொருள்கள் வியாதியைக் குணமாக்கக்கூடியது என்று கண்டுபிடித்தால் செயற்கை மருந்துகள் தயார் செய்வதில் வாழ்க்கையை வீணாக்காது, கிடைக்கும் தாவர மூலிகைகளின்மூலமே வியாதிகளை குறுகிய காலத்தில் குணப்படுத்திவிடலாம்.

"வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது" தான் மேலாகும். நம் முன்னோர்கள் அதிகமாக வியாதியால் பீடிக்காததற்குக் காரணம் புஷ்டியான ஆகாரங்களை அருந்தி வந்ததேயாகும். தற்சமயம் இந்தியாவில் ஏராளமான தரிசல் நிலங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தார் பெரிய நீர்பாசன கால்வாய்கள் கட்ட திட்டம் போட்டிருக்கின்றனர். ஆகவே, ஒவ்வொருவரும் முனைந்து விவசாயத்தில் ஈடுபட்டால் ஐந்து வருட காலங்களில் நம் நாட்டை பொன்னாடாக்கி விடலாம். ஆகவே, அனைவரும் தகுந்த உணவை அளவுக்கு உண்டு, உழுது, உறங்கி, சுத்தமான பழக்க வழக்கங்களை அனுசரித்து, சுகாதார வாழ்வு வாழ்வார்களாயின், வியாதியாகிய அரக்கன், அந்நியன் வழியை பின்பற்றி ஓடி கடலில் விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டு விடுவான் என்பதில் ஐயமில்லை! எனவே, வியாதியை நீக்க வழிதேடுவதைவிட வியாதி வராமல் தடுத்துக்கொள்வதே நலமாகும்.



# மறக்க முடியுமா?

கு.நா. சிவராமகிருஷ்ணன்

“ஊர் எனப்படுவது உறையூர்” என்பது ஒரு பழைய வழக்கு. சோழ அரசர்களுக்குத் தலை நகராகக் காவிரிப் பூம்பட்டினம் இருந்து வந்தது. கடற்கரை நகரத்தோடு உள் நாட்டிலும் ஓர் நகரம் வேண்டும் என்று எண்ணிய கரிகால் வளவன் உறையூரை உண்டாக்கினான். வேண்டும் என்று விரும்பி அமைத்த நகரம் ஆதலால் ராஜதானிக்கு வேண்டிய எல்லா லட்சணங்களும் நிறைந்த ஊராக விளங்கியது அது.

கரிகாற் சோழனுக்குப் பின்னால் பல சோழ மன்னர்கள் அந்த உறையூரில் இருந்து அரசாண்டு வந்தனர். கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னன் அங்கே வாழ்ந்தவர்களுள் ஒருவன். குளமுற்றம் என்ற ஊரில் அவன் இறந்தமையால், பிற்காலத்தில் அவனைச் ‘சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்’ என்று புலவர்கள் வழங்கினார்கள்.

கிள்ளி வளவன் வீரம் மிக்கவன். அவனிடம் நால்வகைப் படையும் இருந்தன. முக்கியமாக அவனுடைய யானைப்படை அவனுடைய பகைவர்களுக்கு எப்போதும் உள்ளத்தில் பயம் இருக்கும்படியாகப் பண்ணிவந்தது. அவனுடைய வீரம் எப்போதுமே வெளிப்பட வகையில்லை. போர் நிகழும் போதுதான் அது மலர்ச்சி பெறும். ஆனால் அவனுடைய கொடை நாள்தோறும் நிகழ்ந்து வந்தது. அவன் பெரு வள்ளல் என்பதைத் தமிழ் உலகம் முழுவதும் அறிந்திருந்தது. தமிழ்ப் புலவர்களிடத்தில் அவன் வைத்திருந்த அன்பு உவமைக்கு அப்பாற்பட்டது. அவனே சிறந்த தமிழ்க் கவிஞன். கவிஞனுக்குத்தான் கவிஞர்களுடைய உண்மை மதிப்புத் தெரியும், புலவர்களுடைய கவிச்சுவையை நுகரும் தன்மையும், அதற்கேற்ற பரிசளிக்கும் செல்வமும் உடைய கிள்ளி வளவனிடத்தில் ஒவ்வொரு நாளும் புலவர்கள் வருவதற்குக் கேட்க வேண்டுமா? புலவர்களை உறவினர்களைப்போல எண்ணி உபசரித்து விருந்தூட்டி இன்புறச் செய்யும் குரிசில் அவன்.

ஒரு நாள் ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் கிள்ளி வளவனைக் காணவந்தார். அவ்விருவரும் முன்பே பழகினவர்கள். மூலங்கிழார் சிறந்த புலவர். தமிழ்நாடு முழுவதும் நண்பரை உடையவர். அடிக்கடி கிள்ளி வளவனைக் கண்டு சில நாள் தங்கி அளவளாவியிருந்து விட்டுப் போவார்.

சிலகாலமாக வளவன் அவரைக் காணவில்லை. மற்ற புலவர்கள் எல்லாம் வழக்கம்போல் வந்துகொண்டிருக்க, அவர் மாத்திரம் வராமல் இருப்பது ஏன் என்று சோழன் யோசித்தான். அவருடைய சல்லாபம் இல்லாது இருந்தது ஒரு குறையாகவே பட்டது. அவரைக் காண வேண்டும் என்ற ஆவல் அதிகமாயிற்று.

இத்தகைய சமயத்தில்தான் மூலங்கிழார் வந்து சேர்ந்தார். அவருக்கும் கிள்ளி வளவனைப் பார்த்து நெடுங்காலம் ஆயிற்றே என்னைப்பிடிற் இருந்தது

புலவரைக் கண்டவுடன் கிள்ளிவளவன் முந்திக் கொண்டான். "வரவேண்டும்! வரவேண்டும்!" என்று உபசரித்து உட்காரச் செய்து, "பல நாளாக உங்களைக் காணவில்லையே! நம்மை அடியோடு மறந்து விட்டீர்களே! எங்காவது வேறு நாட்டுக்குப் போயிருந்தீர்களோ?" என்று கேட்டான்.

புலவர் உண்மையில் பாண்டி நாட்டுக்குப் போய்ப் பாண்டிய அரசனையும், வேறுபல நண்பர்களையும் பார்த்து வந்தார். பல நாட்கள் ஆனதற்கு அதுதான் காரணம்.

"மன்னர் பிரானை மறப்பதா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் புலவர்.

"ஆம். நீங்கள் சிறந்த புலவர். எங்கே சென்றாலும் சிறப்பை பெறுவீர்கள் உலகமும் விரிந்தது. எத்தனையோ மன்னர்கள் இருக்கிறார்கள். வந்தவர்களுக்கு இந்திர போகம் போன்ற இன்ப வாழ்வை அளிக்கும் வள்ளல்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பார்க்கும் போது என்னுடைய நினைவு எங்கே வரப் போகிறது?"

புலவர் மன்னனை நிமிர்ந்து நோக்கினார் "இந்திர போகமா! அது பெரிய இன்பமா என்ன? கற்பக விருட்சம் உள்ளதாகத்தான் இருக்கட்டும். பொன்னாடு என்ற சிறப்பும் இருக்கட்டும். அதற்கு என்ன புகழ் இருக்கிறது? பணத்தைக் கொடுத்துப் பண்டத்தை வாங்குகிறோம். அந்தப் பண்டம் தருபவனை நாம் புகழலாமா? கொடுத்த பணத்திற்கு அவன் தருகிறான். சொர்க்கத்திலும் இந்த வியாபாரந்தானே நடக்கிறது? புண்ணியம் பண்ணினவர்கள் சொர்க்க போகத்தை அடைகிறார்கள். புண்ணியம் என்ற விலை கொடுத்துப் பெறுவது அந்தப் போக வாழ்க்கை. விலை கொடுக்காமல் அதை அடைய முடியாது. எல்லாம் வியாபாரம். தர்மம் என்பது சிறிதும் இல்லை. உடையவன் கொடுத்து மகிழ்வதும், இல்லாதவன் கேட்டுப் பெற்று மகிழ்வதும் அங்கே உண்டா? அத்தகைய இடத்திலே மனிதனுக்கு என்ன வேலை? அந்த வேலையற்ற நாடு கிடக்கட்டும். அங்கே உள்ள சுகம் இங்கே, மன்னர் பிரானுடைய நாட்டிலேயும் உண்டு. விலை கொடுக்காமல் பெற்றுக் கொள்ளலாம்.

புலவர் இப்படிச் சொல்வார் என்று கிள்ளி வளவன் எதிர்பார்க்கவில்லை. அவன் புன்முறுவல் பூத்தான்.

"படையாலும், பலத்தாலும், ஆணையாலும், ஆற்றலாலும் சிறந்தவர்கள் உலகத்தில் பலர் இல்லையா? அத்தகையவர்களை நீங்கள் பார்த்து என்னை மறந்திருக்கலாம்" என்று அடுத்தபடி சொன்னான் வளவன்.

படையால் சிறந்த அரசரை நான் அறிவேன். பெரியபடை, யானைப்படையாலே சிறந்தபடை அதையும் அறிவேன். மலையைப் போல யானை நிற்கும்; அதன் மேலே வானத்தைத் துடைப்பது போலக் கொடி பறக்கும். இத்தகைய காட்சியைக் கண்டிருக்கிறேன். படையென்றால் அது வல்லவா படை? அதை உடைய மன்னரை நான் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்."

"அப்படியா! அந்த மன்னன் யார்?" என்று ஆவலோடு கேட்டான் வேந்தன்.

"இப்போது யாருடைய முன்னிலையிலே இருந்து பேசுகிறேனோ, அந்த மன்னரிடம் இன்றி வேறு யாரிடம் இந்தப் படையைக் காணமுடியும்?" என்று புலவர் கூறிய போது சோழன் பேச்சிழந்தான்; ஆனாலும் அவன் முகம் பொலிவு பெற்றது, அங்கே குறு முறுவல் அரும்பியது.

"படை யென்றும் பலமென்றும் சொன்னால் இங்கேதான் சிறந்து நிற்கின்றன. வியன்தானை விறல் வேந்தன் நீதான். உன்னுடைய வெற்றித் திறம் புலவர்களுக்குத் தியானப் பொருள் அல்லவா? நீகோபித்து எந்தத் திசையைப் பார்க்கிறாயோ, அங்கே உடனே எரி தவழுமே! நீ விரும்பிப் பார்க்கும் இடத்திலோ பொன் விளையும். உன் ஆணையின் பெருமையை என்னவென்று சொல்வேன். சூரியன் காய்கிறான்;

அப்போது நிலவு வேண்டுமா? நீ உன் ஆணையால் நிலவை உண்டாக்குவாய். வெண் திங்களுள் வெயில் வேண்டுமா? அதுவும் கிடைக்கும். வேண்டியது விளைக்கும் ஆற்றல் உள்ள பிரான் நீ!!"

"எல்லாம் சரிதான்; நீங்கள் என்னை மறந்து விட்டது என்னவோ உண்மை தான்." என்று இடை மறித்தான் அரசன்.

"மறப்பதாவது! இந்திர போகத்தையே புறக்கணித்து இந்த நாட்டை விரும்புவார்கள் பரிசிலர். உன்னுடைய பகைவர் நாட்டிலே வாழும் புலவர்கள்கூட உன்னையே நினைக்கிறார்கள். அப்படி இருக்க உன்னுடைய நிழலிலே பிறந்து உன்னுடைய நிழலிலே வளர்ந்த என் போன்றவர்கள் விஷயத்தைச் சொல்லவா வேண்டும்?"

மேலே சோழன் பேச வகையில்லை!

[புறநானூறு 38 ஆம் பாட்டின் விரிவு]



# நான் ஒரு குருவியானால்....!



வெள்ளி



இரவ லாயேனும்—ஒரு சிறு
இமைப்பி னளவேனும்
குருவியாய் வாழ்ந்தால்—அதுவே
கோடி சுகமாகும்!

மெய்ம றந்திடவே—இதய
மின்ன லா மொலியை,
வைக றைதனிலே—இசையால்
வடித்து வழங்கிடலாம்!

தேனின் மலர்களையே—வண்டு
தேடித் திரிகையிலே
வான் வெளிதனிலே—அழகாய்
வட்டம் சுற்றிடலாம்!

துள்ளும் கன்றெனவே—மண்ணில்
துகளெ ழுப்பி வரும்
பள்ளிப், பிள்ளைகளுக்—கினிய
பழங்க ளுதிர்த்திடலாம்!

காத லர்வரவு—காணக்
கற்புக் கன்னியர்க்காய்த்
தூது சென் றிடலாம்—பிரிவுத்
துன்பம் தீர்த்திடலாம்!

குளிர்வ னங்களிலே—அசையும்
கொடிகள் மீதினிலே
தளிர்ப்ப டுக்கையிலே—அயர்ந்து
தனித்து றங்கிடலாம்!

பூவியில் மானிடராய்ப்—பிறந்து
போது மென்றாச்சு
கவலை காணாத—குருவி
கடவு ளேயாக்கு!

# அவள்



சரோஜா ராமமூர்த்தி

சாயங்கால வேளைகளில் தினம் தவறாமல் நல்ல ஜலம் எடுப்பதற்காக இடுப்பில் குடத்துடன் அந்தப் பெண் எங்கள் வீட்டுக்கு அருகாமையில் உள்ள கிணற்றுக்கு வருவாள். ஊரில் பல சௌகர்யங்கள் இருந்தும் ஜல சௌகர்யம் குறைவாகவே இருந்தது. பெரும்பாலான கிணறுகளில் ஜலம் நன்றாகவே இருக்காது. எல்லோரும் அந்தக் கிணற்றுக்குத்தான் குடி தண்ணீருக்காகப் போயாக வேண்டும். அவள் ஊருக்குப் புதிதாக இருந்தாள். ஆனால் நெடுநாள் பழகி நடுவில் பிரிந்து போய்விட்ட உறவினர் யாருடைய முகத்தையோ அது எனக்கு நினைவூட்டியது. அவளோடு நான் பேசாவிட்டாலும், ஏதோ ஒருவித அன்பு அவளிடம் எனக்கு ஏற்பட்டிருந்தது.

'கல்கல்' என்று அவள் கால்களில் சதங்கை கட்டிய கொலுசுகள் ஒலிக்க வருவதைப் பார்ப்பதற்காகத் தினம்தெருவில் போய் நிற்பேன். இந்தக் காலத்துப் பெண்களில் அநேகர் கொலுசுகள் அணிவதில்லை. அது நாகரிகமில்லை. இருந்தாலும் எனக்கு என்னவோ அவை அழகாகத்தான் இருந்தன. கொடி போன்ற தேகமும், அழகிய உருண்டை முகமும், அதில் குவிந்து மருட்சியைக் காட்டும் நீண்ட விழிகளும், அமர்ந்த நடையும் எல்லாமாகச் சேர்ந்து அவள் அழகியாக இருந்தாள். இயற்கை அவளுக்கு வைத்திருந்த ஒரே குறை தலையில் கூந்தலைக் குறைவாக அளித்திருந்தது தான். ஆனால் அதையும் அவள் சாதுர்யமாக வளைத்துக் கட்டி, அழகு படுத்தி இருந்தாள்.

கிணற்றங்கரையிலும், ஆற்றங்கரையிலும் தான், கிராமாந்திரப் பெண்கள் கூடுவது வழக்கம். வீட்டு வேலைகள், கணவன்—மனைவி சண்டை, மாமியார் படுத்துவது, ஊரைப் பற்றி அக்கப்போர் எல்லாவற்றையும் கொட்டி அளப்பார்கள். அவ்விதமே, கோடி வீட்டு சாதை என்னிடம் கேட்டாள்.

"என் மாமி, அந்தப் பெண் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று.

"தெரியாதே அம்மா! யாராவது ஊருக்குப் புதிதாகக் குடி வந்திருப்பார்கள்" என்றேன்.

"ஆமாம், குடி தான் வந்திருக்கிறார்கள். ஆனால், வீட்டில் அவளைத் தவிர வேறு யாரையும் காணோமே?" என்றாள்.

"நீ கவனித்திருக்க மாட்டாய். காலையில் வீட்டுக்கார் ஆபீஸுக்குப் போய் விட்டிருப்பார். சிறுசுகள் போலிருக்கிறது. புதிதாகக் கலியாணமாகித் தனிக் குடித்தனம் ஆரம்பித்திருக்கலாம்" என்றேன்.

"அது என்னவோ மாமி. வீட்டில் அவளோடு யாருமே இல்லையென்று தான் பின்கட்டில் அவள் வீட்டில் இருக்கும் மாமி சொன்னாள். காலையில் சமைத்துச்

சாப்பிட்டு விட்டு 'டிரஸ்' செய்து கொண்டு எங்கோ போகிறாள். சாயந்திரம் வருகிறாள். மறுபடி மாலை ஏழு மணிக்கு 'டிரஸ்' செய்து கொண்டு எங்கோ போகிறாள். இரவு நேரம் கழித்து வருகிறாள். நாள் தவறாமல் யார் யாரோ வந்து பேசிவிட்டுப் போகிறார்கள். சிறு பெண். இப்படியெல்லாம் இருக்கலாமா?'' என்றாள் ராதை.

எனக்கும் கொஞ்சம் யோசனையாகத்தான் இருந்தது. அதற்கேற்றாற்போல் என் கணவரும் முதல் நாள் தான் என்னைக் கேட்டார். "ஊருக்கு யார் யாரோ புதிதாக வந்திருக்கிறார்கள். ரொம்ப ரொம்ப நாகரிகமானவர்கள், அழகான வர்கள் எல்லாம் வந்திருக்கிறார்களே நீ பார்த்தாயா?''

"நான் பார்த்தேனோ இல்லையோ. நீங்கள் கவனித்தீர்கள் இல்லையா?'' என்று சற்றுக் கடுமையாகக் கேட்டேன் அவரை. பிறகு எனக்கே நான் கேட்டது தவறு என்று தோன்றியது. நாம் தினம் தவறாமல் அவள் ஜலம் எடுக்க வரும் போது ஓடிப்போய்த் தெருவில் நின்று பார்க்கிறோமே, அதைப்போல் இவரும் ரயிலில் பார்த்திருப்பார். அவள் தான் வேலை தவறாமல் ஊர் சுற்றுகிறாளே என்று நினைத்துக் கொண்டேன். பாவம்! தாயார் தகப்பனார் யாருமில்லை போல் இருக்கிறது. எங்கோ வாத்தியார் வேலையோ, நர்ஸ் வேலையோ ஏதாவது இருக்கும். ஆனால் யார் யாரோ வந்து எதற்காக இவளைப் பார்க்கிறார்கள்?

ராதையுடன் கிணற்றங்கரையில் பேசி விட்டு, வீட்டுக்கு வந்தவுடன் என் கணவர் வாயிற்படியில் நின்றிருந்தார்.

"உன்னைப் போலப் பெண் தானே அவளும். அவளையே பார்த்துக்கொண்டு வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறாயே'' என்றார் அவர்.

"இருங்கள். அவள் போட்டுக் கொண்டிருந்த ரவிக்கை ரொம்ப நன்றாக இருந்தது. பார்த்துக்கொண்டிருந்தேன். நீங்கள் மட்டும் பார்ப்பது நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தேன்.

"ஒரு புது விஷயம் சொல்லப் போகிறேன் உனக்கு. அவள் சினிமாவில் நடிப்பவளாம். புருஷனைத் 'தனி' வைத்துவிட்டு வந்துவிட்டாளாம்'' என்றார்.

"கிணற்றங்கரை வம்பை விட ஆபீஸ் வம்பு அபாரமாக இருக்கிறதே'' என்றேன் நான்.

* * * * *

அஞ்சுகம்—அது தான் அவள் பெயர்—நாள் தவறாமல் ஜலம் எடுத்துக் கொண்டு போவாள். அவளுடன் பேச வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருந்தது. ஏனெனில், அவளுடன் கிணற்றங்கரையில் கூடும் பெண்கள் யாருமே பேசவில்லை. அவள் வந்தவுடன் எல்லோரும் ஏதோ அசுத்தத்தைக் கண்ட மாதிரி விலகிப்போய் நிற்பார்கள். ஒருத்தி முகத்தை ஒருத்தி பார்த்துக் கொள் வாள். புன்சிரிப்பு சிரித்துக் கொள்வார் கள். அவள் அங்கிருந்து போகிற வரைக் கும் நயன பாஷையிலேயே பேசிக்கொள் வார்கள். அவள் போனவுடன் "பார்த் தாயா, அவளும் அவள் புடவையும்!'' என்று ஒருத்தி ஆரம்பிப்பாள்.

"இந்தப் பஞ்சகாலத்தில் எங்க வீட் டுக்காரருக்கும் தான் சம்பளம் இருநூறு வருகிறது. பனிச்சென்று ஒரு சில்க் புடவை வாங்கிக்கொள்ள முடிகிறதா? பத்து தேதிக்குள் பணப் பை காலி ஆகி விடுகிறதே. இவளுக்கு மட்டும் ஏது; வேளைக்கு ஒரு புடவை, வேளைக்கு ஒரு அலங்காரம் என்று செய்து கொள்ளப் பணம்?'' என்று அம்புஜம் ராதையைக் கேட்பாள்.

"போடி! மானங் கெட்ட பிழைப்பு பிழைக்கிறவளுக்கு இதெல்லாம் கிடைக் காமல் என்ன? என்ன வேண்டியிருக் கோ?''

ராதை தலை பின்னிக்கொண்டு நான் பார்த்ததில்லை. பகவான் நல்ல சௌந்தர்

யத்தை அவளுக்குக் கொடுத்திருந்தும், அவளுக்கு அதைக்கவனிக்கவே அவகாசமில்லை. வீட்டில் இரண்டு குழந்தைகள், கணவன். வேறு யாரும் இல்லை இருந்தபோதிலும், அவளுக்கு அலங்காரம் செய்து கொள்ளக்கூட அவகாசம் இல்லை என்று என்னிடம் சொல்லிக்கொள்வாள். வீட்டுக்காரர் ஆசையுடன் வாங்கி வந்த பூவைப் பாத்திரத்துக்குள் போட்டு மூடி வாடி வதங்க வைக்கும் சுபாவமுடையவள். "ஐயையோ! நேற்று ராத்திரி பூ வாங்கி வந்தார். காலையில் வைத்துக் கொள்ளலாம் என்று வைத்திருந்தேன். வேலைத் தொந்திரவில் மறந்துவிட்டது" என்று சொல்லிப் பூவை எடுத்து என் எதிரில் தூர எறிவாள். கணவனின் அன்பை அறிந்து நடந்து கொள்ளப் பாவம், அவளுக்குத் தெரியாது. அஞ்சுகத்தின் அலங்காரத்தை அவள் வெறுத்ததில் ஆச்சரியமில்லை.

## 2

அஞ்சுகம் வழக்கம் போல் ஜலமெடுக்க வந்தாள். அன்று கிணற்றங்கரையில் பெண்கள் கூட்டம் அதிகமில்லை. அஞ்சுகம் ஜலத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். தயங்கித் தயங்கி நான் நிற்பதைக் கவனித்துக்கொண்டுக் போக ஆரம்பித்தாள்.

"வாயேன் அம்மா!" என்று நானும் தயங்கிக்கொண்டே கூப்பிட்டேன்.

அவளும் நானுமாகச் சென்று உள்ளே ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டோம்.

"இந்த ஊருக்கு வந்த நாளாய் என்னுடன் யாருமே பேசவில்லை அம்மா!" என்றாள் என்னிடம். அவள் குரலில் வருத்தம் தொனித்தது.

"அப்படியா? பேசாமல் என்ன? பேசுவார்கள். எல்லாம் நாளடைவில் சகஜமாகப் பழகுவார்கள்" என்று அவள் மனம் ஆறுதலடையும் வண்ணம் சொல்லி வைத்தேன்.

சாதையும் அம்புஜமும் அவளைப் பற்றி அடுக்கும் சொற்களைப் பாவம், அவளிடம் வர்ணிப்பானேன்? இவ்வளவு வெறுப்பு ஏற்படும்படி அஞ்சுகத்தினிடம் என்ன தான் கெட்ட குணம் இருக்கப் போகிறது? அவள் வரலாற்றையும் தான் கேட்டு வைப்போமே என்றும் தோன்றியது. இருந்தாலும் என்ன நினைத்துக் கொள்வாளோ என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

"நான் போய் வருகிறேன் அம்மா பொழுது போகாவிட்டால் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். நீங்களும் எல்லோரையும் போல என்னை ஒதுக்கி வைத்துவிடாதீர்கள்!" என்று கூறிவிட்டு அவள் புறப்பட்டுச் சென்றாள்.

அஞ்சுகம் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டுப் போனது ஊரில் எல்லோருக்கும் தெரிந்து விட்டது!

"உனக்கென்னடியம்மா குறைவு! நல்லவளாகப் பார்த்துத்தான் சிநேகம் பிடித்திருக்கிறாய்" என்று அம்புஜம் பரிகாசம் செய்தாள்.

"இனிமேல் உன் பெண்ணுக்கு அவளைக் கொண்டே நாட்டியம் சொல்லிக் கொடுப்பாய்!" என்றும் கூறினாள்.

"அப்படித்தான் இருக்கட்டுமே" என்று நானும் விட்டுக் கொடுக்காமல் அவளிடம் கூறினேன்.

அஞ்சுகம் அநேகமாக ஒவ்வொரு மாலையும் வருவாள். சிறிது நேரம் என்னிடம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போவாள். அவள் வாங்கிக்கொண்ட புடவைகள், நகைகள் எல்லாவற்றையும் கொண்டுவந்து காண்பிப்பாள். என் பெண் கிரிஜாவுக்கு ரிப்பன்கள் வாங்கி வருவாள். இதையெல்லாம் அவளுக்கு எப்படிக் கிடைக்கின்றன? யார் வாங்கிக் கொடுக்கிறார்கள்? ஒரு தினமாவது அவள் ஏன் தன் கணவனைப் பற்றியோ, கூடப் பிறந்தவர்களைப் பற்றியோ, நம்மிடம் பேசவில்லை என்றெல்லாம் சந்தேகங்கள் என் மனதில் எழுவதுண்டு. ஆனால் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறாள் என்று மட்டும் எனக்குத் தெரிந்தது. மற்ற விஷயங்களை நாம் கிளறிக் கேட்பானேன் என்று பேசாமல் இருந்துவிட்டேன். வழக்கம்போல் அவள்

அன்று வந்ததும் என்னுடன் கலகல வென்று பேசவில்லை.

"என்ன அஞ்சுகம்! பேசாமல் யோசனை செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன் நான்.

அவள் மளமளவென்று கண்ணீர்ப் பெருக்கினாள். எனக்கும் வருத்தமாக இருந்தது. அவளாகவே சிறிது நேரம் கழித்து "இந்த ஊர் எனக்குப் பிடிக்க வில்லை" என்றாள்.

"ஏன் ?" என்றேன் நான்.

" என்னைக் கண்டால் உங்கள் ஊர்க்கா ரர்களுக்கு இளப்பமாக இருக்கிறது!" என்றாள்.

"என்ன நடந்தது சொல்லேன்" என்று அவளை வற்புறுத்திக் கேட்டேன். அவள் கண்களிலிருந்து நீர் பெருகியதேயொழிய பதில் ஒன்றும் வரவில்லை.

என் மனம் அவளுக்காக வருந்தியது. "சமூகம் முன்னேறவேண்டும் என்று தான் எல்லோரும் ஆசைப் படுகிறோம். இளம்பெண் ஒருத்தி துணை இல்லாமல் அவள் பிழைப்புக்கு ஏதோ தொழில் செய்துகொண்டிருந்தால் அதை ஏன் தவறுதலாக நாம் நினைக்க வேண்டும்? அவள் நடிகையாகத்தான் இருக்கட்டுமே. அவளுக்கும் விருப்பு, வெறுப்பு உண் டல்லவா? அவள் மட்டும் சமூகத்தில் மானமாக வாழ உரிமையில்லையா?" என்று எண்ணமிட்டேன்.

நானும் அஞ்சுகமும் ஒருவரோடொரு வர் பேசாமல் வெகுநேரம் உட்கார்ந்திருந் தோம்.

## 3

அவள் என்னிடம் தன் குறையைச் சொல்லி அழுத பிறகு ஒருவாரம் வரைக் கும் அவளை நான் பார்க்கவில்லை. திடீ ரென்று ஒரு தினம் மாலை பெட்டி படுக் கையுடன் என் வீட்டுக்குள் நுழைந் தாள்.

"என்ன அஞ்சுகம்! இந்தப் பக்கமே காணோமே?" என்றேன்.

"வாராமல் என்ன அம்மா! வேறு ஒரு ஊரில் இடம் பார்த்தேன். இனி மேல் இந்த ஊரில் நான் இருக்கக் கூடாது அம்மா. உங்கள் ஊர்க்காரர்கள் என்னை அடித்துத் துரத்தினாலும் பரவாயில்லை. ஆனால் ..."

அவள் மறுபடியும் தேம்பித் தேம்பி அழுதாள்.

"போகிறது! நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். அடிக்கடி வந்துவிட்டுப் போ" என்றேன்.

அதற்குப் பிறகு வாரம் ஒரு முறை இருட்டிய பிறகு வருவாள். எங்கள் ஊரை வெளிச்சத்தில் பார்ப்பதற்கே அவள் பயந்ததாகத் தோன்றியது! கொஞ்சகாலம் அந்த ஊரில் அவள் வாழ்க்கை நிம்மதியாகத் தான் இருந் திருக்கவேண்டும். ஏனெனில் அவள் வந்துபோகும் பொழுதெல்லாம் சந்தோ ஷமாகத் தான் இருந்தாள். எங்கள் வீட் டுக்கு அவள் வருவதைப் பற்றி ஊரில் பலவிதமாக விவாதம் நடந்தது. பிறகு அதுவும் ஓய்ந்து விட்டது. ஒரே விஷயத் தைப் பற்றிப் பேசிப்பேசி எல்லோரும் சலித்து விட்டார்கள்.

பழையபடி ஒரு தினம் அவள் முகத் தில் வருத்தம் தோன்றியது.

"என் நிழல் என்னை விடமாட்டேன் என்கிறதே அம்மா. அங்கேயும் என்னை விரட்டி அடிக்கிறார்களே" என்றாள் என் னிடம். எனக்குத் தூக்கி வாரிப் போட் டது. "நல்ல உலகமம்மா இது" என்று நினைத்துக் கொண்டேன். அஞ்சுகத்தை அதற்குப் பிறகு நான் ஆறு ஏழு மாதங் கள் வரை பார்க்கவில்லை. அநேகமாக அவளை நான் மறந்துகூடப் போய் விட் டேன். கிரிஜா மட்டும் அடிக்கடி, "ஏன்?" அம்மா அந்த மாமி வருவதில்லை இப்போ" என்று கேட்பாள்.

அஞ்சுகத்தைப் பார்த்து எட்டு மாதங்கள் கழித்து ஒரு தினம் குழந் தைக்குத் துணி வாங்க சென்னைக்குப் புறப்பட்டேன். அடக்கமே உருவாக அஞ்சுகம் பெண்கள் வண்டியில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள்.

“என்னடியம்மா, சௌக்கியமாக இருக்கிறாயா?” என்று கேட்டேன்.

“இருக்கிறேன் அம்மா” என்றாள் அவள். அவளுடைய ஆடை அலங்காரமெல்லாம் எங்கோ போய்விட்டது. சாதாரண மில் புடவை ஒன்றைக் கட்டியிருந்தாள்!

“என்ன இது அஞ்சுகம், இப்படி மாறி விட்டாய்?” என்றேன்.

அவள் லேசாகச் சிரித்துவிட்டு “இப்படி இருந்தால்தான் நான் மானமாக சமூகத்தில் வாழமுடியும் அம்மா. என் வயிற்றுப் பிழைப்புக்காக நான் சினிமாவில் நடித்தால் அதற்காக, என்னை படாதபாடெல்லாம் படுத்தி வைத்திருக்கிறார்களே. நல்ல புடவையும், நகையும் போட்டுக் கொண்டால் அவர்களுக்குக் கண் பொறுக்கவில்லையே. இப்போது நான் இருக்கும் ஊரில் என்னை அங்கே தாழ்வு படுத்தவும் இல்லை. எதற்கு இந்த வீண் அலங்காரமெல்லாம்?” என்றாள் அஞ்சுகம்.

அதுதான் சரி, அஞ்சுகம்! துணை இல்லாத ஸ்திரீக்கு வீண் பகட்டெல்லாம் எதற்கு?” என்றேன் நான்.

அதற்குள் அவள் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்து விடவே, ஒரு புன் சிரிப்புடன் நான் சொல்வதை ஆமோதித்தபடியே இறங்கிச் சென்றாள்.



55

# பஞ்சாமிர்தம்



## இவ்வளவுதானா!

**நண்பன்** :—'முதலாளிகள் ஒழிக!' என்று ஏகமாகக் கூச்சல் போடுகிறீர்களே, அது என்னப்பா?

**தொழிலாளி** :—பின்னே, நாங்களெல்லாம் முதலாளிகளாவது எப்போ?

## தர்மசங்கடம்.

**கணக்கு உபாத்தியாயர்** :—பக்கத்து ஸ்தானத்தில் கடன் வாங்கிக்கொள் என்றால் ஏன் விழிக்கிறாய்?

**மாணவன்** ;—எங்கப்பாவுக்கு கடன் வாங்குவது என்றால் பிடிக்காது, ஸார். பக்கத்து ஸ்தானத்தில் நான் கடன் வாங்கியது தெரிந்தால் அவர் என் தோலை உரித்து விடுவாரோ என்று பயமாயிருக்கிறது!




## ஆச்சர்யம்தான்!

ஒரு பைல்வான் தபாலாபீஸினுள் வந்து, தம் கையில் வைத்திருந்த பார்ஸலை தரையின் மீது ஓங்கி அடித்தார்! அங்கிருந்தவர்கள் சிறு கூட்டமாகச் சேர்ந்து அவர் செய்கையை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வந்தவர், அவர்களை நோக்கி, "வேறொன்றுமில்லை, என்னைப் போன்றவர்களாலும் உடைக்க முடியாத பார்ஸலை, இந்த தபாலாபீஸ்காரர் மட்டும் எப்படி உடைத்தோ, பிரித்தோ கொண்டு வந்து தருகிறார்கள் என்று ஆச்சரியமாகயிருக்கிறது!" என்றார்.

# மைசூர் கப்



(ஜாம்பவான்)

சனிக்கிழமை பகல் இரண்டு மணிக்கு என்னைச் சந்தித்த நண்பர், "வருகிறீர்களா ஸார், நீங்களும்?" என்று கேட்டார். "எங்கே?" என்று கேட்டதற்கு "குதிரைப் பந்தயம்" என்றார். சர்க்கார் இந்தக் குதிரைப் பந்தய விளையாட்டைக் கூடிய சீக்கிரம் நிறுத்தப் போகிறபடியால் "இந்தத் தமாஷை ஒரு தரமாவது இப்பொழுதே பார்த்துவிட்டு வந்து விடுவோமே" என்று நினைத்துக் கொண்டு நண்பருடன் போக ஒப்புக் கொண்டேன்.

பார்க் ஸ்டேஷனில் ஒரே ஜனத்திரள். திணறி அடித்துக்கொண்டு கிண்டிக்கு 'டிக்கட்' வாங்குகிறார்கள். வாங்கினதுதான் தாமதம், நடையும் ஓட்டமுமாகப் பிளாட்பாரத்திற்கு ஓடி ஸ்பெஷல் வண்டியில் ஏறுகிறார்கள். ஒவ்வொருவர் கையிலும் பச்சையும், சிகப்புமாகச் சிறிய 'ரேஸ்' புத்தகங்கள் காட்சி அளிக்கின்றன. இந்தச் சமயத்தில் அவர்கள் ஆகாயம் இடிந்து கீழே விழுந்தாலும் கவனிக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் கவனத்தையெல்லாம் அன்று பந்தயத்தில் ஓடும் குதிரைகளிடம் பறிகொடுத்திருக்கிறார்கள்.

* * * *

இதோ வண்டியும் புறப்பட்டு விட்டது.

"ஏன் ஸார், ராதா தேவி எப்படி?" என்கிறார் ஒருவர், பக்கத்தில் இருக்கும் நண்பரிடம்.

"அதுதான் ஸார், என் கணக்குப்படியும் வருகிறது. ஆனால் 'வெயிட்டை'ப் பற்றித்தான் யோசிக்க வேண்டியிருக்கு!" என்கிறார் அவர் நண்பர். பாவம்! கலியாணத்திற்கு நிற்கும் தம் பெண்ணைப் பற்றிக் கூட அவருக்கு யோசிக்க நேரம் இல்லை.

"வெயிட்"டைப் பற்றி யோசிக்காதீர்கள் ஸார். அது இன்னும் போட்டாலும் தூக்கிக் கொண்டு வரும்! அப்படிப்பட்ட குதிரையாக்கும்! பூனாவில் நீங்கள் பார்க்கவில்லையா?" என்று பூனா ரிகார்ட்டை அவரிடம் காண்பிக்கிறார் முதல் ஆசாமி.

அந்தண்டை மூலையில் இரு சாயபுகள் பேசுவது காதில் கேட்கிறது.

தாடி சாயபு:—(வழுக்கையிடம்) ஐந்தாவது ரேஸில் நம்பர் நாலு கோடா எப்படி?

வழுக்கை:—நாலு என்னமோ நல்லாத்தான் இருக்கான். ஆனால் எனக்கு

என்னமோ 'பைலா' நம்பர்தான் ஜரூர். அவன் இத்னி நாளாய்ப் போய் போய் அடிபட்டான், இன்கி அவனுக்கி நல்ல 'சான்ஸ்' இருக்குது. அத்துடன் சொந்தக்காரன் பங்கனபள்ளி வேறே வந்திருக்கான். எதுக்கும் நீ ரெண்டு டிக்கட் வாங்கிப்பாரு.

* * * *

கிண்டியில் வண்டி நின்றதுதான் தாமதம் ஜனங்கள் ஏன் இப்படி விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்! ஆஹா என்ன காட்சி! பந்தய மைதானம் ஓரே கார் மயமாகக் காட்சி அளிக்கிறது. சென்னையிலுள்ள கார்களையெல்லாம் அன்று அங்கே பார்க்கலாம். எங்கு பார்த்தாலும் மோட்டார்களின் சத்தமும், கடைகளில் கூச்சலிடும் சத்தமும் காதைத் துளைக்கிறது. பந்தய புஸ்தகம் விற்கும் பையன்கள், ஒவ்வொருவரிடமும் புஸ்தகத்தின் பெயரைச் சொல்லி வாங்கச் செய்கிறார்கள். கொஞ்ச நாழிகை ஜனங்களைக் கவனியுங்கள். வண்டியை விட்டிறங்கினதும் ஒன்றுமே அவர்களுக்குப் புரிவதில்லை. நேராக மைதானத்திற்குள் சென்று அடைகிறார்கள். அவர்கள் கவனம் எல்லாம் எந்தக் குதிரை ஜயிக்குமோ என்கிற யோசனையில் இருக்கிறதே ஒழிய மற்றதொன்றிலும் செல்லவில்லை.

இந்தக் கூட்டத்திலும் என் சிநேகிதன் ஒருவனைப் பார்த்து விட்டேன். அவன் ஒரு டாக்டர். தன் நோயாளிகளைப் பற்றிக் கூட அக்கரை யில்லை! கவனமெல்லாம் இப்பொழுது, தான் விளையாடும் ரேஸைப் பற்றித்தான். "டாக்டர்கள் கூடவா ரேஸ் ஆடுகிறார்கள்? அவர்களுக்கு எங்கே நேரம்?" என்று கேட்காதீர்கள். பெரிய பெரிய வக்கீல்களிலிருந்து சர்க்கார் கெஜட்டட் ஆபீஸர்கள், ஸர்ஜன்கள், ஆஸ்பத்திரி நர்ஸுகள், வியாபாரிகள், குமாஸ்தாக்கள், பெரிய வீடுகளில் சமையல் செய்யும் பாட்டிமார்கள், எல்லோரையும் அங்கு பார்க்கலாம்!

நண்பன் என் காதோடு, "பாரிஜாதம்" என்று சொல்லிவிட்டு முதுகில் ஒரு 'ஷொட்'டும் கொடுத்து என்னை ஒரு பார்வை பார்த்தான். அவன் பார்த்த தோரணையானது "எப்படி என் யோசனை?" என்று கேட்கிறது போல் இருந்தது. நான் உடனே புஸ்தகத்தைப் புரட்டினேன். அது வரைக்கும் அவன் அங்கு இருப்பானா? போயே போய் விட்டான்!

* * * *

பந்தய மைதானத்தில் பணம் கையாளப் படுவது போல் வேறு எந்த இடத்திலும் நாம் பார்க்க முடியாது. சுமார் நாலு மணி நேரத்திற்குள் ஆயிரக் கணக்கானவர்களின் பணம் கை மாறும் காட்சியை குதிரைப் பந்தய மைதானத்தை விட வேறெங்கும் காண முடியாது!

இதோ குதிரைகள் நம்முடைய பார்வைக்காகச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

ரயில் ஏறினதும் இருவர்பேசிக்கொண்ட ராதா தேவி, அதோ முதலில் வருகிறான்! கனம் அதிகம் இருப்பதால் தான் அப்படித் தலையை குனிந்து கொண்டாளோ என்னவோ! அடுத்தபடியாக தாடி சாயபு சொன்ன நம்பர் 4 கறுப்பு குதிரை வருகிறது. பிறகு தாடிக்கு பதிலளித்த வழுக்கை சொன்ன 'பைலா' நம்பர் கோடாவைப் பாருங்கள். பார்வைக்கும் நன்றாக இராமல் தள்ளாடிக் கொண்டு வருகிறது. பாவம்! வயதான குதிரை. இதை நம்பியா பங்கனபள்ளி வந்திருப்பான்! எனக்கென்னமோ நம்பிக்கையில்லை. பிறகு மற்றக் குதிரைகளையும் பார்த்தேன். கடைசியாக வந்தது டாக்டர் நண்பன் சொன்ன 13-ஆம் நம்பர் வெள்ளைக் குதிரைதான். "பாரிஜாதம்" ஆஹா! என்ன அழகு! என்ன ஒய்யாரம் என்ன நடை! நர்த்தனம் ஆடிக் கொண்டல்லவோ வருகிறாள்!

* * * *

கணகணவென்று மணி அடிக்கும் சப்தம். உடனே டிக்கட் கொடுக்கும் கதவுகள் மூடும் ஓசை. ஜனங்கள் திபுதிபுவென்று படிகளில் ஏறிப் பார்ப்பது. வறட்டுத் தவளைகளைப்போல் கத்திக் கொண்டிருந்த 'புக்கி'களின் சப்தமும் ஓய்ந்து எங்கும்

ஓரே நிசப்தம் நிலவியது. இதோ குதிரை கள் ஓடிவரும் காலடிச் சத்தம். நாங்கள் போய்ப் பார்த்தோம். ஜனங்கள் எல்லோ ரும் 'பாரிஜாதம்!' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். 'பாரிஜாதம்' எல்லாக் குதிரைகளையும் ஒவ்வொன்றாகத் தாண்டி முதலில் ஸ்தானத்துக்கு வந்தாள். நானும் சந்தோஷமிகுதியால் 'ஸபாஷ் பாரிஜாதம்!' என்றேன்.

* * * *

குதிரைகள் எல்லாம் ஓடிப்போன சற்று நேரம் கழித்து, நமது 'பைலா' நம்பர் மெதுவாக வருவதைப் பார்த்து அதிசயப் பட்டு முகத்தைத் திருப்பினதும், பாவம், வழுக்கை சாயபு தமது கையால் வழுக் கைத் தலையில் அடித்துக் கொண்டதைப் பார்த்தேன். அவர் வருத்தப் படுவது போலத் தோன்றியதால் அவரைச் சமா தானப்படுத்த விரும்பி, "பாருங்கள், ஸார் இந்தக் குதிரை மட்டும் மற்றக் குதிரை களை இப்படித் துரத்தியிராவிட்டால் அதுகள் எல்லாம் அவ்வளவு வேகமாக ஓடி வந்திருக்க முடியுமா?" என்று கேட்டேன். சாயபு கோபத்தோடு என்னை விழித்துப் பார்த்தார். நன்றி கெட்ட உலகம்!

* * * *

சாயபு தமது கோபத்தை 'வழுக்கை' யிடம் காண்பித்துக் கொண்டார்: மற்றவர் கள் தங்கள் கையிலிருந்த ரேஸ் புஸ்தகத் தின் மேல் காண்பித்தனர்.

புத்தகங்கள் ஆயிரம் சுக்கலாகக் கிழிந் தன!



# பாரதியாரின் கனவு

மக்கள், சுதந்திர புருஷர்களாகத் திகழ வேண்டும். புதுமைப் பெண் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும். நாட்டில் கலைச் செல்வமும், வாணிபமும் பெருகவேண்டும் என்று அமரகவி சுப்ரமணிய பாரதி இன்பக் கனவு கண்டார். “தனி யொருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று கர்ஜித்தார்! தம் கனவு நினைவாக;

“நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்,
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்,
அதுவும் அற்றவர் வாய்ச் சொல் அருளீர்,
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்,”

என்று தமிழர்களின் ஒத்துழைப்பைக் கோரினர்.

“அசோகா” பாரதியார் காட்டிய சீரிய வழியில் தொண்டாற்ற முன்வந்திருக்கிறது. அதன் வளர்ச்சிக்குத் தமிழர்களின் ஆதரவு தேவை. நீங்கள் உங்கள் சந்தாவை அனுப்பி எங்கள் முயற்சிக்கு ஊக்கமளிப்பீர்களா?

### சந்தா விவரம்

| | |
|---|---|
| 1 வருஷம் .... .... | ரூ. 6 |
| 6 மாதம் .... .... | ரூ. 3 |
| தனிப்பிரதி .... | அணா எட்டு |

### * விளம்பர விகிதம்

| | |
|---|---|
| சாதாரண பக்கம் .... .... | ரூ. 75 |
| அரைப் பக்கம் .... .... | ரூ. 40 |
| கால் பக்கம் .... ... | ரூ. 20 |
| அட்டை வெளிப் பக்கம் | ரூ. 200 |
| ,, உள் பக்கம் | ரூ. 150 |

* இவை ஒரு முறை விளம்பரம் செய்வதற்கு உண்டான விகிதம்.

நீடித்த ஒப்பந்தங்களுக்கு தனி சலுகை உண்டு.




# பரம்பரைக் குணம்

(டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்.)

அழகிய சிற்றம்பலக் கவிராயர் நல்ல செல்வர்.

ஒரு நாள் எங்கேயோ நெடுந்தூரமுள்ள ஓரூருக்கு ஒரு கலியாணத்திற்கு அவர் போயிருந்தார். மீண்டும் ஊருக்குத் திரும்ப எண்ணி ஒரு வண்டிக்காரரிடம் வண்டி பேசி அமர்த்திக் கொண்டார். இரவு முழுவதும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. வண்டிக்காரன் மூன்று ரூபாய் வாடகை கேட்டான்; அன்றியும், "ஊருக்குப் போகையில் பொழுது விடிந்து விடுமாகையால், எனக்கு நாளைக் காலையில் சாப்பாடு போட்டு அனுப்ப வேண்டும்" என்றும் தெரிவித்துக் கொண்டான். அவ்வாறே செய்விப்பதாக அவர் உடன்பட்டார்.

இராத்திரியில் வண்டி புறப்பட்டது. கவிராயர் அதில் படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. பின்பு வண்டிக் காரன் மெல்ல அவருடைய குடும்ப நிலையைப் பற்றி விசாரித்தான். அவர் தம்முடைய குடும்ப வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்.

"நான் இருப்பது மிதிலைப்பட்டி. எங்கள் முன்னோர்களெல்லாம் பெரிய வித்துவான்கள், அவர்களில் ஒருவராகிய அழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு இந்த மிதிலைப் பட்டி என்னும் கிராமமானது அக்காலத்தில் இந்தப் பக்கத்தில் ஜமீன்தாராக இருந்த வெங்களப்ப நாயக்கரென்பவரால் கொடுக்கப் பட்டது. இப்பொழுது ஜீவனாதாரமாக இருப்பதும் எங்கள் குடும்பத்தில் லக்ஷ்மீ கடாக்ஷம் குறையாமல் இருக்கும்படி செய்வதும் அந்த

வெங்களப்ப நாயக்கர் கொடுத்த கிராமமே. அவருடைய அன்னத்தைத்தான் இப்பொழுது நாங்கள் சாப்பிட்டு வருகிறோம். என்ன, கேட்கிறாயா?

"வெங்களப்ப நாயக்கருடைய பரம் பரையில் யாரேனும் இப்போது எங்கேயாவது இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. அவர்களுடைய நிலை எப்படி இருக்கின்றதோ! காலச் சக்கரமானது இப்படி மாறிக் கொண்டே வருகிறது!"

விடியற்காலையில் வண்டி மிதிலைப்பட்டி வந்து சேர்ந்தது. வீட்டை அடைந்த கவிராயர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டார். தம்முடைய வேலைக்காரனை அழைத்து வண்டிக்காரனுக்குப் பழையது போடும்படி சொன்னார். அப்பொழுது வண்டிக்காரன், "எனக்குச் சாப்பாடு வேண்டாம். நான் போய் வருகிறேன். உத்திரவு கொடுங்கள்" என்று சொன்னான்.

மேலும் அவன் சொன்னதாவது:

"ஐயா! நேற்று இராத்திரி உங்கள் முன்னோர்கள் கதையைச் சொல்லி வந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையிற் பிறந்தவன் அடியேன். ஏதோ தலைவிதி இப்படி என்னை வண்டியோட்டச் செய்தது 'என்ன செய்தாலும் கொடுத்ததை மட்டும் வாங்கக் கூடாது' என்று பெரியவர்கள் சொல்வார்கள். எங்கள் முன்னோர்களால் கொடுக்கப் பட்டவைகளில் ஒரு துரும்பையாவது உங்களிடமிருந்து வாங்கிக் கொள்ள என் மனம் சிறிதும் துணியவில்லை. மன்னிக்க வேண்டும். இவ்வளவாவது தங்களுக்கு நான் உபயோகப் படும்படி கடவுள் கூட்டி வைத்தது என் பாக்கியம் தான்," என்று சொல்லி விட்டுக் கவிராயர் மேலே பேசத் தொடங்குவதற்குள் வண்டியை அவன் ஓட்டிக் கொண்டே போய்விட்டான்!

'நான் கண்டதும் கேட்டதும்'



# இரு சகோதரிகள்



சிரஞ்சீவி..

### 12

கோபு :—ராஜி, நான் ஆபீஸ் போயிட்டு வரட்டுமா?

ராஜி :—சரி....

கோபு :—சுந்தரி, வேறொன்றும் விசேஷமில்லேயே?

சுந் :—ராஜியைக் கடைக்குக் கூட்டிண்டு போகலாம்னு வந்தேன்.

கோபு :—ஏது ?

சுந் :—கொஞ்சம் துணி மணி எடுக்கணும்.

ராஜி :—நான் போகலாமோ இல்லியோ?

கோபு :—போயிட்டு வாயேன். இதுக்குக் கூட என்னைக் கேட்கணுமா ராஜி.

ராஜி :—நேத்திப் போல ஆயிட்டதனு எப்படின்னு கேட்டேன்.

சுந் :—நேத்திக்கு போலயா? அது என்ன ராஜி?

ராஜி :—இல்லே, நேத்தி சினிமாவுக்குப் போகலாம்னு ஹேமா வந்து கூப்பிட்டா. இவர் போகக் கூடாதுன்னு உத்திரவு போட்டுட்டார்!

கோபு :—சுந்தரி, ஏன் அப்படிச் சொன்னேன்னு நீயே அவளைக் கேளு.

ராஜி :—அதையும் தான் சொல்றேன். அவளோட புருஷனும் வந்திருந்தானாம். அது குத்தமாய்ப் போச்சு!

கோபு :—அக்கா பேச்சை நீயே பாரு. அன்னியப் புருஷாளோட போறது நல்லதா? நீயே சொல்லு.

சுந் :—அத்திம்பேர் சொல்றது நியாயம் தானே ராஜி?

ராஜி :—நீயும் ஒரு கர்நாடகம்!

கோபு :—நல்லது சொன்னா கர்நாடகம்.

சுந் :—அத்திம்பேரே, அக்கா சொல்றதும் சரிதான். இத்தனை நாளா தேமேனு இருந்த உங்க ஷட்டகர்கூட நான் நாகரீகமா,சோஷலா இருக்கணும்னு சொல்றார். இந்தக் காலத்து நாகரீகம் அப்படி இருக்கு. அப்படித் தானே நாம்பளும் இருக்கணும்.

கோபு :—அவாவா இருக்கிறபடி இருந்தாத்தான் நல்லது. இதுனாலே மனுஷா குணமே மாறிப்போயிடறது சுந்தரி. அப்புறம் நல்லது கெட்டதே ஒண்ணும் தெரியறதில்லே.

ராஜி :—உங்க வேதாந்தமெல்லாம் போதும், ஆபீஸ் போயிட்டு வாங்கோ.

கோபு :—போறேம்மா....!

ராஜி :—இந்தாங்கோ.

கோபு :—என்ன ராஜி?

ராஜி :—சாயங்கிரம் வரப்போ, நீங்க போட்டுண்டு இருக்கிற அறுந்த செறுப்பைத் தலையைச் சுத்தி எறிஞ்சிட்டு, நல்ல பூட்ஸா வாங்கி மாட்டிண்டு வந்து சேருங்கோ!

கோபு :—ஹூம்....

### 13

சங் :—சுந்தரி!

சுந்தரி :—இதோ வரேன்.



சங் :—சீக்கிரமா வா....யாரு வந்திருக்கா பாரு

சுந் :—யாரு?........ஓ........ அத்திம்பேரா! வாங்கோ....வாங்கோ....நீங்க மாத்திரம் தான் வந்தீளா? ராஜி வல்லே?

கோபு :—போற வழிலே இறங்கிப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். சௌக்கியமா இருக்கயோ?

சுந் :—சௌக்யமா, சந்தோஷமாத்தான் இருக்கேன்.

சங் :—சுந்தரி, உங்கள் அத்திப்பேர் முன்னப்போல அத்திம்பேர் இல்லே. ஒரேயடியா மாறிப் போயிட்டார் பார்த்தியோ இல்லியோ?

கோபு :—சுந்தரி கூடத்தான் முன்னத்திய சுந்தரி இல்லே. அடியோட மாறிப் போயிட்டாளே. நவயுவதின்னு நவயுவதிதான்!

சுந் :—அத்திம்பேர் பேசறத்தைப் பார்த்தேளா. பேசறத்துக்குக்கூடக் கத்துண்டார். முந்தியெல்லாம், என் கூட பேசறப்போ, நான் வடக்கேப் பார்த்து நின்னு அவர் கிழக்கே திரும்பிண்டு சட்டைப் பித்தானைத் திருகிக்கொண்டே பேசுவார்! இப்பப் பாருங்கோ. பேச்சும், பரிகாசமும்.... !

சங் :—சூட்டும் ஹாட்டும் போட்டுண்டா தன்னாலே எல்லாம் தெரிஞ்சுடாதா?

கோபு :—சந்துரு, மட்டம் தட்டறியே!

சுந்தரி :—நிஜத்தைத்தானே சொல்றா.

கோபு :—எங்க ராஜிகூடத்தான் ஒரு நெஜத்தைச் சொன்னா. " என் நாகரீகத்தை குப்பைலே கொண்டுதான் கொட்டணும், சுந்தரி என்னையும் 'மிஞ்சிட்டா' அப்படிங்கறா!

சுந் :—இதுதான் காலத்துக்கு ஏத்த வேஷம். அது சரி அத்திம்பேரே,



இப்ப உங்ககிட்ட ராஜிக்கு ரொம்ப வாஞ்சை இல்லையா?

கோபு :—சரி, சரி....புருஷன் பெண் டாட்டி இரண்டு பேருமாச் சேர்ந்து மண்டகப்படி பண்ண ஆரம்பிச்சுட் டேளா. நான் கிட்டறேன் கம்பி!

சுந் :—அடடே....என்னயிது. சும்மா உட்காருங்கோ கோபு. சுந்தரி, அவருக்கு ஒரு கப் காப்பி கொடு.

சுந் :— இதோ்....அத்திம்பேருக்கு இல்லா ததா?

சுந்:—என்ன கோபு, மாசா மாசம் பட்ஜட் எப்படி அபிவிருத்தி?

கோபு :—செலவைத்தானே கேட்கி றேள். "டிரிபிள்" தான். வேறே என்ன?

சுந்:—கோபு, உங்களண்டே ஒன்று கேட்க னும்னு ஆசை. ஹேமா ஹேமாங்க றேளே ! அது யாரு ?

கோபு :—ஏன் ?

சுந் :—உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமோ ன்னு கேட்டேன்.

கோபு :—தெரியும் .... இவாக்வேஷன்லே பர்மாவிலே இருந்து வந்தவ. அவ "ஹஸ்பண்ட்" எங்கேயோ அங்கே பாங்க்லே சீப் அக்கவுண்டண்டா இருந்தாராம். எனக்கு அவ்வளவு பரிச்சயமில்லே. நம்ப ராஜிக்கு அவ ரொம்ப நெருங்கிய ஸ்நேகிதம்.

சுந் :—உங்களுக்கு அவளைத் தெரியாதே?

கோபு :—ஹூம்.

சுந் :—சரிதான்.

கோபு :—ஏன், எதுக்குக் கேட்டேள்?

சுந்:—அவளைப்பத்தி என்னவோ காதிலே விழுந்தது. அதுதான் கேட்டேன்.

கோபு :—எதைப் பத்தி?

சுந்:—உங்களுக்கும் தெரிஞ்சிருக்கவேண் டியதுதானே. என்னிக்கோ ஒரு நாளைக்கு நீங்களும், அவளும் கிளப்லே கலாட்டா பண்ணிண்டு இருந்தேள்னு யாரோ சொன்னு!....

கோபு :—சேச்சேச்சே....நீங்களும் இதை நம்பறீளா என்ன? நல்ல கதை இது!

சுந் :—நான் கேட்டதைப்பத்தி உங்க ளுக்கு ஒண்ணும் வருத்தமில் லையே?

கோபு :—அதனுலே என்ன. சந்தேகம் நிவர்த்தியாச்சு. "ராங் இன்பர் மேஷன்" தானே.

சுந்தரி :—எது "ராங் இன்பர்மேஷன்?"

சுந் :—உனக்கொண்ணுமில்லே. நாங்க என்னவோ பேசிண்டு இருந்தோம்.

சுந் :—இந்தாங்கோ அத்திம்பேரே, சாப் பிடுங்கோ.

கோபு :—நான் போயிட்டு வரட்டுமா சுந்தரி.

சுந் :—ராஜியை நான் வரச்சொன் னேன்னு சொல்லுங்கோ.

கோபு :—சொல்றேன் சுந்தர். போய் வரட்டுமா.

சுந் :—சரி....

## 14

சுந்:—அத்திம்பேர் வந்தமாதிரி இல்லையே போறப்போ. நீங்க ஏதாவது தத் துப் பித்துன்னு சொல்லித் தொலைச் சேளா ?

சுந் :—நான் என்ன குழந்தையா!

சுந் :—நீங்களும் எதையோ மறைக்கி றேள். உங்களுக்குள்ளே ஏதோ பேச்சு நடந்திருக்கு.

சுந் :—ஒன்ணுமில்லே.

சுந் :—என் கிட்டக்கூட பொய் பேச ஆரம் பிச்சுட்டேளா?

சுந் :—எதையாவது சொன்னுலொழிய நீ விடமாட்டே. உன் அத்திம்பேர் இப்ப குடிக்கப் பழகிண்டு இருக் கார்னு கேள்விப்பட்டேன். அதைத் தான் கேட்டேன். வேறொன்று மில்லே.

சுந் :—என்ன?

சுந் :—ஆரம்பிச்சுட்டயே. இதுக்குத் தான் நான் எதுவுமே உன் கிட்ட சொல்றதில்லே!

சுந் :—உங்களுக்கு யாரு சொன்னா?

சந் :—யாரோ சொன்னா. நீ அந்தப் பேச்சை விடமாட்டே?

சுந் :—ராஜி சொல்லிக்கொடுத்த நாகரிகம் இப்படியா போய், முடிஞ்சுது!

சந் :—இதெல்லாம் கண்டும் காணாமயுமா ஒதுங்கணும். பேச்சு வாக்கிலே ராஜிட்டே சொல்லி வைக்கப் போறேன்!

சுந் :—இதோ பாருங்கோ. உங்களைப் பத்தி இதைப்போல பேச்சுக் கீச்சு வந்ததோ சொல்லிக்காம கொள்ளாம எங்கேயாவது ஓடியே போயிடுவேன்! அது மாத்திரம் நிச்சயம்.

சந் :—இத்தனை நாளா இல்லாதது இனிமே வந்துடப்போறது. சரி சரி ...கிளம்பு சீக்கிரம். இன்னிக்கு சினிமா போகணும்னு சொன்னேனே, மறந்துட்டாயா?

சுந் :—மறப்பேனா என்ன!

சந் :—சுந்தரி. என் சிநேகிதன் வரதனும் அவன் மனைவியோட வரான். அவாளோட அசட்டுப் பிசட்டுன்னு பழகாம, ரொம்ப கலகலப்பா இருக்கணும். அவன் சம்சாரம் ரொம்ப "டீக்". அவ உன்னைப் பரிகாசம் பண்ணாமப் பார்த்துக்கோ!

சுந் :—என் மனஸிலே இருக்கறத்தைச் சொல்லட்டுமா? கோவிச்சுக்கமாட்டேளே?

சந் :—சொல்லு.

சுந் :—தேமேனு இருந்த அத்திம்பேரை, ராஜி நாகரீகம், நாகரீகம்னு சொல்லி சந்திலே இழுத்து வைச்சுட்டா. வீட்டிலே மூலையிலே முடங்கிக் கிடந்த என்னை, நான் அப்-டு-டேட்டா இருக்கணும்னு நினைச்சு அப்படியே நீங்க செஞ்சும் காட்டிட்டேள். சோஷலா இருக்கணும்கிறேள். நானோ பெண் ஜன்மம். நாளைக்கு ஏதாவது தப்புத் தண்டாவா பேச்சு வந்தா, நான் காந்துக்க வேண்டிவரும்........

சந் :—என்ன பேச்சு இது? அசடு........ வா. நாழியாறது. சினிமா ஆரம்பிச்சுடப்போறது.

## 15

கோபு :—ராஜி.

ராஜி :—என் கிட்ட நீங்க பேசவேண்டாம்.

கோபு :—என்ன வந்துடுத்து?

ராஜி :—உங்களுக்கு வீடு வாசல்னு ஏதாவது இருந்தாத்தானே.

கோபு :—ஏன் இப்படி எகிறிப் பாயறே!

ராஜி :—வீட்டுக்குள்ளே அடைச்சிக் கிடக்கறவதானேன்னு நினைச்சுட்டேள், இல்லே?

கோபு :—என்னத்தைக் கண்டுட்டே?

ராஜி :—காணவேற வேணுமா! ஹேமாவை இன்னிக்கு எந்த சினிமாவுக்கு கூட்டிண்டு போனேள்?

கோபு :—உனக்கென்ன பைத்தியமா ?

ராஜி :—இரண்டு நாளைக்கு முன்னாலே நீங்களும் அவளும் சினிமாவுக்குப் போகலே ?

கோபு :—ஏன் இல்லாத பழியைச் சுமத்தறே!

ராஜி :—பழி என்ன பழி. ஊரெல்லாம் தான் சந்தி சிரிக்கிறதே. இல்லேன்னு சத்யம் பண்ணிச் சொல்வேளா?

கோபு :—..........

ராஜி :—வாய்கூட அடைச்சுப் போச்சா?

கோபு :—என் இஷ்டம். நான் போவேன். நீ என்ன செய்யப் போறே?

ராஜி :—அவ்வளவு துணிச்சல் வந்துடுத்தா?

கோபு :—பின்னே என்ன? அன்னிக்கு அர்த்த ராத்திரியிலே ஹேமா அவ புருஷனோட வந்து உன்னை சினிமாவுக்குக் கூப்பிட்டப்போ, நீயும் போயிருந்து, நான் இதைப்போல சண்டை போட்டிருந்தா, நீ கேட்

ண்டுஇருப்பாயா? அது தப்பில்லேன்னு அப்போ உடதேசம் பண்ணினே! இப்போ நான் போனதிலே தான் தப்பு வந்துடுத்து, இல்லே?

ராஜி :—நாம் நடுச் சந்திலே நிற்கறத்துக்குக் காலம் வந்துடுத்து. வேறே ஒன்றுமில்லே!

கோபு :—என்னைச் சந்திலே இழுத்து விட்டுட்டு அழ வேறெ செய்யறயா?

சுந்தரி :—ராஜி....ராஜி....

## 16

ராஜி :—(அழுகிறாள்)

சுந் :—ராஜி....ஏன்.....,....ஏன் .... அழறே? சொல்லு ராஜி....சொல்லேன்!

ராஜி :—என் மனஸிலே நான் என்னெல்லாமோ கோடிச்சிண்டு இருந்தேன். சிவனேன்னு இருந்தவரை நாகரீகம், நாகரீகம்னு சொல்லி நாசம் பண்ணிட்டேன். என் தலைக்கே கல் வந்துடுத்து சுந்தரி....!

சுந் :—என்ன?

ராஜி :—ஹேமா, ஹேமான்னு எப்பப் பார்த்தாலும் அவளோடயே சுத்திண்டு இருக்காராம். ஆயிரம் பேர் என் கிட்ட சொல்லிட்டா!

சுந் :—உன் கிட்ட சுமுகமாகத்தானே, இருக்கார் ?

ராஜி :—முன்னப்போல இல்லே அவர். ஏதாவது சொன்னா தூக்கி எறிஞ்சாப்பலே பேசறார். ரேஸுக்குப் போறாராம், குடிக்கக் கூடச் செய்யறார்னு நாலுபேர் சொல்றப்போ........

சுந் :—அழாதே ராஜி, அழாதே. எல்லாம் நீ பண்ணிண்டது தான். அழுது, அழுது, நீ ஏன் சாகரே?

ராஜி :—சுந்தரி, உம் மனசுக்கு எப்படித் தோன்றது? இதெல்லாம் நிஜமா இருக்குமா?

சுந் :—நீ எப்பவாவது கண்ணாலே பார்த்தயோ?

ராஜி :—கேள்விப்பட்டதுதான்.

சுந் :—பின்னே பேசாம இரு. ஊர்லெ இருக்கிறவா வம்பு பேசத்தான் செய்வா. இப்படியெல்லாம் கூத்தடிச்சா, குடும்பம்னு சீரழிஞ்சுப் போயிடும்! ஊர் ரெண்டுபட்டா கூத்தாடிக்கு என்ன?

ராஜி :—அப்படில்லாம் இருக்காதுங்கறியா?

சுந் :—என் மனசுக்கு அப்படித்தான் தோன்றது. வெகுளித்தனமா நடந்துண்டுடரோம். பார்க்கிறவர்களுக்குக் குத்தமாப் படறது. நாலு பேர் நாலு தினுசாச் சொல்லிடரா. என் சமாசாரத்தைத் தான் கேளேன். அவரோட "க்ளாஸ் மேட்" வரதனை உனக்குத் தெரியுமோ இல்லியோ. அவர் அடிக்கடி எங்காத்துக்கு வருவார், போவார். தான் இல்லாட்டாக் கூட அன்னிய மனுஷாளா பாவிக்காம, இருக்கச் சொல்லி, உபசாரம் பண்ணி அனுப்பணும்னு அவர் எங்கிட்டே சொல்லியிருக்கார். எப்பவாவது வருவார். புருஷா இல்லேயேன்னு பேசாமலிருக்க மாட்டேன். சில நாளைக்கு, "வரதன் வந்தான்னா நான் வர வரைக்கும் அவனை இருக்கச் சொல்லு"ன்னு சொல்லிட்டுப் போவார். அப்படியும் நடக்கும். ஒரு நாளைக்கு, போது போகலேன்னு "காரம்" விளையாடிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்திலே வந்த வரதன் எதிர்த்து உட்கார்ந்திட்டார். வேளையைப் பாரு! சுந்தரின்னு கூப்பிட்டுண்டு வந்த அடுத்த வீட்டுக் காமு எங்களைப் பார்த்துட்டா. அதிலேயிருந்து அக்கம் பக்கத்திலே இருக்கிறவா என்னை ஒரு தினுசாத்தான் பார்க்கிறா! என் மனசிலே கல்மிஷம் இல்லே. நான் ஏன் பயப்படவேணும்? வெறும் வாயை மெல்லறவாளுக்கு ஒரு பிடி அவல் அகப்பட்டா போறுதா!

## 17

சுந் :—சுந்தரி. எதேச்சையா ராஜியைப் பார்த்துட்டு வரலாம்னு போனேன்.

விடு நிர்த்துளிப்படறது! உனக்கு ஏதாவது தெரியுமா, தெரியாதா?

சுந் :—தெரியாம என்ன ? எல்லாம் தெரிஞ்சுதான் இருக்கு!

சந் :—எப்படி இருந்த மனுஷன் எப்படி ஆயிட்டான் பார்த்தியா?

சுந் :—அடி பிடி பலமா இருக்கா?

சந் :—சாமான் எல்லாம் மூலைக்கு மூலை பறக்கிறது!

சுந் :—என்ன ?

சந் : —ஆமா. இப்போ அந்த மனுஷன் ரொம்பத் துணிஞ்சிட்டான்.

சுந் :—ராஜியை அடிச்சிக்கிடிச்சு....

சந் :—வைத்யம் பிடிச்சவளாட்டமா ராஜி தான் அவர் சட்டை, அங்க வஸ்தி ரத்தையெல்லாம் கிழித்து எறிஞ் சிண்டு இருக்கா.

சுந் :—நான் ராஜியைப் போய் பார்த்து விட்டு வரட்டுமா?

சந் :—உன்னை ஏதாவது தாறுமாறுப் பேசிட்டா?

சுந்:—வேறெ ஒருத்தருமில்லேயே; அக்கா வும் அத்திம்பேருந்தானே ? பேசிறு பேசிட்டுப் போகட்டும்! அதுக்காக போகாம இருக்க இருப்புக் கொள் ளுமா? நீங்களும் கூட வரீளா?

சந் :—நான் வந்தா ஜாஸ்தியாயிடும். நீ போ....பின்னாலே நானும் வரேன்.

சுந் :—சரி.

## 18

சுந் :—அத்திம்பேரே!

கோபு :—யாரு....சுந்தரியா?....

சுந் :—இதெல்லாம் என்ன கூத்து ?

கோபு :—சுந்தரி.........இது உன் அக்கா எனக்குப் போட்டுவிட்ட வேஷம்.

(ராஜி அழுகிறாள்).

சுந் :—அழாதே ராஜி. பொறுமையா இரு....ஒரு குறையும் வராது.

அத்திம்பேரே, உங்க மனஸுக்கு இதெல்லாம் நல்லதாப் படறதா?

கோபு :—ஆமம்மா....ஆமாம். நான் இப் படித்தான் இருக்கணும்னு ராஜியும் தான் ஆசைப்பட்டா! இப்போ ஏன் அழுது சத்தருளேன்?

சுந் :—ராஜி உங்களை இப்படி இருக்கச் சொல்லலை, அத்திம்பேரே.

கோபு :—ராஜி சொன்னபடி நான் இருக்க ணும்னு இப்படித்தான் இருப்பேன்.

சுந் :—அத்திம்பேரே!

கோபு :—அதட்ட வேறே வந்துட்டயா?

ராஜி :—சுந்தரி, என் தலைவிதியை நான் அனுபவிச்சிக்கிறேன். நீ ஏன் பேச் சுக் கேட்கணும், பேசாம இரு.

சுந் :—நான் ஏன் பேசக்கூடாது ராஜி? எனக்கு சொந்தம் இருக்கக்கொண்டு தானே நான் கேட்க வந்தேன்? என்னை அவர் அடிச்சாலும் பாதக மில்லே.

கோபு :—நன்னாக் கேட்டுக்கோ....நீயும் துணிஞ்ச கட்டைதானே!

ராஜி :—நான் இல்லே அவ....உதாசீன மாப் பேசறதுக்கு....

கோபு :—நீயின்னு யார் சொன்னா? அவ வேறே தான். வரதன் இல்லே வர தன்—அவனுக்குத் தான் பெண் டாட்டி!

சுந் :—ஆ!

ராஜி :—இப்படியெல்லாம் பேசினா உங்க வாய்தான் புழுத்துப் போகும்.

கோபு:—சாவித்திரி தேவி!

## 19

சந்—சுந்தரி!

கோபு :—சந்துருவா........ மத்யதஸ்துக்கு நீயும் வந்துட்டாயா! முதலிலே உன் சமாசாரத்துக்கு மத்யஸ்தம் பண் ணிட்டு........

ராஜி:—இதெல்லாம் வெறி பிடித்தவன் பேச்சு. நீங்க ஒன்றும்....

சுந்:—தெரியும், தெரியும்!

கோபு:—தெரியாமயா இருக்கும்?

ராஜி:—(தலையில் அடித்துக்கொண்டே) வாயைப் பொத்திண்டு இருப்பேளா இல்லையா?

சந்:—சுந்தரி, நீ வீட்டுக்குப் போ....

சுந்:—நீங்க.

சந்:—போன்னு, நீ போறியா இல்லியா?

சுந்:—உங்களுக்கு என்ன வந்துடுத்து இப்போ?

சந்:—வாயை மூடிண்டு போறயா இல்லையா?

கோபு:—அவளை எங்கே போகச்சொல்றே சந்துரு? வாதன் வீட்டுக்கா!

சுந்:—ஆ!

## 20

சந்:—சுந்தரி, ஊரிலே இருக்கறவா எவ்வளவோ சொல்லுவா. நான் ஏதாவது சொன்னேனா? உன் சுபாவம் எனக்குத் தெரியாதா? ஏன் அழறே ....அழாதேம்மா....அழாதே!

சுந்:—அதை நீங்களும் நம்பறீளா? நான் தப்பு பண்ணிட்டேன்னு....

சந்:—தப்பு உன் பேரிலே இல்லை சுந்தரி, என் பேரிலேதான்....... வீட்டிலே அடைச்சுக் கிடந்தவளை நான் தானே சந்திலே இழுத்துவிட்டேன்! இப்படியெல்லாம் பேச்சு வரதுன்னு அதுக்கு நான் தான் காரணம். நீ அழாதே. நான் எதுவும் சொல்லலியே!

சுந்:—இந்த மட்டுமாவது புத்தி வந்தது.

சந்:—ஹீல் ஷூவையும், லிப் ஸ்டிக்கையும் சுத்தி எறி! இனிமே நீ சுங்குடிப் புடவைக் கட்டிண்டாப் போதும். அப்போ கிடைச்ச சந்தோஷம் மறுபடியாவது கிடைக்கட்டும்!

சுந்:—அவா அவா இருக்கிற இடத்திலே இருந்தாத் தான் சந்தோஷமும் சுகம் எல்லாம்! இந்த நாகரீக கோஷ்டத்திலே யிருந்து நல்ல வேளை, இம்மட்டோடே தப்பிச்சிண்டேன். ....ஆனா....நம்ப ராஜிதான்....பாவம் ....இனிமே அவளுக்கு விமோசனமே இல்லை!

சந்:—அவளுக்கும் விமோசனம் வராமப் போகாது சுந்தரி. இந்த நாகரீகத்துக்கும், அதோட சேஷ்டைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. அத்திம்பேர் கிட்ட இருக்கிற காசும் கரைஞ்சு, உடம்பிலே இருக்கிற தெம்பும் குறைஞ்சா ராஜிக்கும் விமோசனம் கிடைக்கும்!

முற்றும்.





# கண் திறந்தது!

"ஸௌம்யா"

18711

சுசிலாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. கோபாலனைச் சுட்டு விடுபவள் போல் முறைத்துப் பார்த்தாள், "ஆமாம், ஏன் ஒன்றரை ரூபாய் குறைகிறது? கம்பெனியிலேயே பிடித்துக் கொண்டு விட்டார்களா? அல்லது நீங்கள் தான் 'சமர்த்தாய்' எங்கேயாவது கை நழுவ விட்டு விட்டீர்களா?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

கோட்டைக் கழற்றி 'ஸ்டாண்டில்' மாட்டிக் கொண்டிருந்த கோபாலன் சாவதானமாகத் திரும்பி பார்த்தார். ஒருவித அசட்டுச் சிரிப்புடனே, "பணம் எங்கேயும் போய்விடவில்லை. உனக்குப் பிடித்ததாக இந்த இரண்டு வஸ்துக்களையும் வாங்கினதில் தான் செலவழித்து விட்டேன் சுசி" என்று கூறியபடியே, இரு பொட்டலங்களை எடுத்து அவள் எதிரிலிருந்த மேஜையின் மேல் வைத்தார்.

சுசிலாவின் செவ்விதழ்கள் அலட்சியமாக நெளிந்தன. அவசரத்தோடு பொட்டலங்களைப் பிரித்து பார்த்தாள்: ஒன்றில், அவளுக்கு மிகவும் பிடித்தமான பாதம் ஹல்வா; இன்னொன்றில் அவள் எப்பொழுதும் ஆசைப்படும் வாசனையான கதம்பம். அவற்றைப் பார்த்ததும், சுசிலாவின் முகம் கோபத்தினால் இன்னும் அதிகமாகவே சிவந்து போய்விட்டது.

"ஆமாம், உங்களை யார் இப்படிக் கண்ட பொருள்களிலெல்லாம் காசை வாரி இறைக்கச் சொன்னார்கள்? பெரிய ஆபீஸர் என்று தான் நினைப்போ! கொஞ்சமாவது காசின் அருமை தெரிந்தால் தானே? இந்த ஒன்றரை ரூபாய்க்குக் குழந்தைக்கு எத்தனையோ உபயோகமான சாமான்களை வாங்கியிருக்கலாமே? இங்கே யார் கதம்பம் இல்லை யென்று அழுதார்கள்?" என்று கடுமையாகக் கேட்டாள்.

உடைந்த தேன் கூண்டிலிருந்து ஆத்திரத்தோடு கிளம்பிச் சீறும் தேனீக்களைப் போல், அவளிடமிருந்து சுடச்சுடக் கிளம்பிய சொல்லம்புகள் அவர் மனதைத் தைத்தன. ஆனாலும், அதைப் பாராட்டவில்லை. காரணம், அவருக்கு அது பழக்கமாகி விட்டிருந்தது தான்!

பேச்சை மாற்ற வேண்டுமென்றோ என்னவோ அவர், "ஆமாம், இன்று டிபன் ஒன்றுமில்லையா?" என்று நயமாகவே கேட்டார்.

"டிபனும் கிடையாது, காபியும் கிடையாது. தினம் தினம் டிபன் பண்ண இந்த நாளில் கட்டுப்படியாகுமா? இதோ நீங்கள் தான் வாங்கி வந்திருக்கிறீர்களே; அருமையான டிபன்; சாப்பிட்டுக் கொள்ளுங்கள் நீங்களே அத்தனையையும். நான் அதைத் தொட்டுக்கூடப் பார்க்கப்போவதில்லை" என்று கூறியபடியே அந்த இரண்டு பொட்டலங்களையும் அவர் பக்கத்தில் விட்டெறிந்துவிட்டு, 'விர்'என்று அப்பால் போய்விட்டாள்!

கண்களைக் கவரும் பல வர்ணங்களும், கருத்தைக் கவரும் நறுமணமும் ஒருங்கே அமையப் பெற்ற அந்த கதம்பத்தைக் கையிலெடுத்து முகர்ந்து பார்த்தார் கோபாலன். ஆழ்ந்த நெடுமூச்சொன்று

அவர் மார்பைப் பிளந்துகொண்டு சென்றது.

பலவித மலர்கள் சேர்ந்த கதம்பம் அது. அழகும், பகட்டும் உள்ள ரோஜா, மனதை மயக்கும் மணமுடைய மல்லிகை, வாசனை இல்லாவிட்டாலும் அழகை அபரிமிதமாகப் பெற்ற கனகாம்பரம், கம்மென்ற வாசனையைத் தரும் கதிர்ப்பச்சை இவ்வளவும் அதிலிருந்தன. கோபாலனைப் பொறுத்த வரையில், சுசீலாவும், விதவிதமான குணங்கள், நடவடிக்கைகள் என்கிற மலர்களால் ஆன ஒரு கதம்பமாகவே இருந்தாள்.

## 2

கண்ணைக் கவரும் வனப்பு. அமர்ந்த நடை. மலர்ந்த முகம். அடக்க ஒடுக்கமான சுபாவம். இவை தான் அவர் முதல் முதல் கண்ட சுசீலா. பிறகு அவர் தனிக் குடித்தனம் வைத்த பிறகு கண்ட சுசீலாவோ, இதற்கு மாறுபட்டிருந்தாள்.

முதன் முதலில் குறும்புச் சிரிப்புடன் எடுத்ததற்கெல்லாம் அவரை வம்புக்கிழுக்கும் சுபாவமும் ஸரஸமான கேலிப்பேச்சும், விளையாட்டும் கலந்து கொள்ளவே, பாவம், கோபாலன் உண்மையில் திக்கு முக்காடித்தான் போனார், அவள் அன்புச் சுழலில் சிக்கி.

வருவாய் குறைவானதாகவே இருந்தாலும், அவர்கள் வாழ்க்கையில் அன்புக்குக் குறைவில்லாமல் இருந்தது. பெண்மையும், அழகும் அன்பாகப் பரிமணித்த, ஓர் உருவாக விளங்கினாள் அவள். அவரும் அவள் மனம் நோகாமல் நடந்து கொள்வதே தம் வாழ்க்கையின் லட்சியம் என்று எண்ணி, அதைச் செய்கையிலும் காட்டி வந்தார்.

இப்படியே கலப்பற்ற ஆனந்தத்திலேயே மூழ்கியிருந்தால், ஒருவேளை அவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடுமோ என்னமோ என்று தான், விதி அவர்கள் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்படும்படி செய்தது. அந்த மாறுதல் குழந்தை பிரபாகரனின் ரூபத்தில் வந்தது! ஆம். பிரபாகரின் வரவே சுசீலாவின் மனதும், நடவடிக்கைகளும் அடியோடு மாறுவதற்குக் காரணமாயிருந்தன.

கோபாலனின் மனக் கண்களின் முன் பழைய சம்பவங்கள் ஒன்றன் பின்னொன்றாக வரிசையாக படக் காட்சி போல் தோன்ற வாரம்பித்தன. "சுசீலா அன்று எப்படியிருந்தாள்? இன்று எப்படியிருக்கிறாள்?" என்று அவர் மனம் ஆராயத் தொடங்கியது.

பிறந்தகத்திற்குச் செல்லும்போது கள்ளங்கபடற்ற குழந்தை சுபாவத்துடனும், குறும்புச் சிரிப்புடனும் தான் சென்றாள் சுசீலா. ஆனால், அங்கிருந்து சில மாதங்கள் கழித்துத் திரும்பி வந்த போதோ 'பணம்' 'பணம்' என்று பணத்துக்கே பேயாகப் பறக்கும் பெண்மணியாகவும், முகத்தில் எப்போதும் ஒரு சிடுசிடுப்புடனிருக்கும் வயதான ஸ்திரீயாகவும் மாறிப் போயிருந்தாள். இந்த திடீர் மாறுதலுக்குக் காரணம் என்னவென்று தெரியாமல் திகைத்துப் போனார் கோபாலன்.

சுசீலாவின் மேலும் குறை சொல்வதற்கில்லை. அதாவது மாறுதலுக்கும் காரணம் ஒன்று இருக்கத்தான் இருந்தது. அது அவளுடைய சகோதரி யமுனாதான். யமுனாவுக்கு அதற்கு முந்தின வருஷம் தான் கல்யாணமாகி யிருந்தது. அவளும் சுசீலாவைப் போலவே பிரசவத்திற்குத் தாயார் வீட்டிற்கு வந்திருந்தாள். அவளுக்கும் ஒரு ஆண் குழந்தை தான் பிறந்தது. ஆனால், எவ்வளவு வேற்றுமை, சுசீலாவின் பிரபாகருக்கும், யமுனாவின் சங்கருக்கும். யமுனாவின் கணவன் நிறைய வருமானமுள்ள பெரிய டாக்டர். ஆகவே, குழந்தைக்காகப் பணத்தை வாரி இறைத்தாள் யமுனா.

தங்கையின் எதிரில் தன் கௌரவத்தைக் குறைத்துக்கொள்ள இஷ்டமில்லாத சுசீலாவும், அவள் செய்வதை யெல்லாம் தானும் செய்யத் தொடங்கினாள். பிறந்தகம் பசையுள்ள இடம். அதனால், அங்கு இருந்த வரையில் யமுனாவுடன் போட்டி போட்டிக்கொண்டு ஹார்லிக்ஸும், புட்

டிப் பாலும் வாங்க முடிந்தது. ஆனால், கணவன் வீட்டிற்கு வந்ததும் தான் அவள் கையைக் கடிக்க ஆரம்பித்தது. அவளுக்கும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"ஆமாம், உங்களுக்கு சம்பள உயர்வு என்பது இந்த ஜென்மத்திலேயே கிடையாதா? என்றைக்கும் இந்தச் சம்பளம் தானா? உங்கள் சம்பளம் குழந்தைக்கே போதாது போலிருக்கிறதே?" என்று அவள் தன் கணவனைச் சண்டை பிடித்தாள்.

"அதற்கென்ன பண்ணுவது சுசி? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான் என்று திருப்தி பட்டுக்கொள்ள வேண்டியதுதான். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்தல்லவா? வேண்டுமென்றால், எதாவது அவசியச் செலவைக் குறைத்து கொஞ்சம் இழுத்துப் பிடித்துப் பார்ப்போம்" என்று அவர் சிரித்தபடியே அவளுக்குச் சமாதானம் கூறினார்.

சுசீலாவும் அப்படியே செய்ய ஆரம்பித்தாள். பலன், அவர் தலையில் தான் விழுந்தது! அவர் "அனாவசியச் செலவு" என்றது பிரபாகருக்காக அவள் கண் மூடித்தனமாக செலவழிப்பதைத்தான். ஆனால், அவள் அப்படி நினைக்கவில்லை. அவளுக்கு அது மிகவும் அவசியமாகவே பட்டது. அவளுக்கு அனாவசியச் செலவாகத் தோன்றியது, தினம் அவருடைய டிபனுக்காக ஆகும் செலவுதான்! அதனால் அதை உடனே நிறுத்தி விட்டாள்.

கோபாலனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர் என்றைக்குமே வயிற்றை வஞ்சனை செய்யமாட்டார். மணமான புதிதில் சுசீலாவும் அவருக்கு விதம் விதமான பக்ஷணங்களை வெகு ருசியாகச் செய்து தருவாள். அவருடன் கூட வருபவர்கள் எல்லாம் புளித்த தோசையையும், ஆறின உப்புமாவையும் இட்டிலியையும் கஷ்டப்பட்டு தின்றுகொண்டிருக்கும்போது, அவர் "மோஹன் தாலையும், 'ஸாரத்காரியையும்'', 'வாழைப்பூ கட்லெட்டையும்" சப்பு கொட்டிக்கொண்டு சாப்பிடுவார். ஆனால், இப்போதோ அவருக்குத் தம் நண்பர்கள் பாடே தேவலை என்றாகிவிட்டது. ஏனெனில், அப்போது அவர் அலட்சியமாக நினைத்த தோசை, அடை கூட அவருக்கு இப்போது கிடைப்பதில்லை! தினம் தவறாமல் 'தயிர்' என்ற பெயருடன், தண்ணீரைவிட மோசமாக இருப்பதான தண்ணீருஞ்சாதமும், நாரத்தங்காய் ஊறுகாயும் தான் அவர் இப்போது கண்ட டிபன்!

"டிபன் வேளை" எப்போது வரப்போகிறது என்று ஆவலாய் முன்னெல்லாம் காத்திருந்தது போக, இப்போது டிபனைச் சாப்பிட அலறவேண்டி வந்து விட்டது அவருக்கு. இதே ஏக்கத்திலேயே அவர் உடம்பு கூட இளைத்துவிட்டது!

## 3

"இதோ பார், சுசீ! கம்பெனியிலே எல்லோரும் நான் ரொம்ப இளைத்துவிட்டேன் என்கிறார்களே. கொஞ்ச நாளைகாவது இந்தத் தயிர் சாதத்தை விட்டுவிட்டு, வேறு எதாவது டிபன் பண்ணிக் கொடேன்" என்று அழுமாட்டாக் குறையாக ஒருநாள் அவளைக் கேட்டார் கோபாலன்.

ஆனால் சுசீலா அசைந்து கொடுக்கவில்லை. "நன்றாயிருக்கிறது. உங்கள் பேச்சு. நீங்கள் இளைத்து விட்டீர்களென்று யார் சொன்னது? இத்தனை நாளாய் 'பொத பொத'வென்று 'பூஷணிக்காய்' மாதிரி இருந்தீர்கள். இப்போதுதான் சற்று பார்வையாய் நன்றாய் இருக்கிறது. ஊளைச் சதையில்லாமல், ஒல்லியாய், கம்பீரமாய் இருப்பது தான் புருஷாளுக்கு அழகு. வெறுமனே ஏன் டிபன், டிபன் என்று எதையாவது கேட்கிறீர்கள். அத்தனையும் உடம்புக்குக் கெடுதல். தயிர் சாதம் மாதிரி ஆகுமா? இப்படிச் செட்டு மட்டுமாகக் குடித்தனம் பண்ணினால் தான் நாம் பிரபாகரனைப் பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்க முடியும். நாளைக்கு ஜில்லா ஜட்ஜ் பிரபாகருடைய அப்பா என்றால் உங்களுக்குத் தானே

பெருமை?" என்று மூச்சு விடாமல் பேசி அவரை வாயடி அடித்துவிட்டாள்.

பிள்ளையைப் பற்றிய மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தவளுக்கு, அந்த இன்பத்திற்குக் காரணமான கணவனைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமாகவே படவில்லை.

பிளக்கும் கோடாலியின் கூரான முனை, தன்னால் தாக்குண்டு தவிக்கும் பசுமரத்தின் வேதனையை எங்காவது அறிவதுண்டா? அல்லது, அறியத்தான் முயற்சி செய்ததுண்டா? அப்படித்தான் இருந்தது சுசீலாவின் நிலைமையும்.

அவளது சூடான மொழிகளைக் கேட்டு மனம் வெதும்பிப்போன கோபாலன் அதற்குப் பிறகு அவளை ஒன்றுமே கேட்பதில்லை. தன்னுடைய சௌகரியங்களைப் பற்றியும் கவனிப்பதில்லை.

ஃட்டு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, அவளையும் மீறித்தான் அன்று அந்த ஒன்றரை ரூபாயைச் செலவழித்து விட்டார்.

மணமான புதிதில் ஒவ்வொரு மாதம் முதல் தேதியன்றும் அவர் அவ்விரண்டையும் வாங்கத் தவறியதேயில்லை. அவை சுசீலாவுக்கு மிகவும் பிடித்தமானவைகள் என்று அவர் நன்றாக அறிவார். நடுவில், அவள் மன மாற்றத்திற்குப் பிறகு அவர் அவைகளை இன்றுவரை வாங்கவே இல்லை.

மறைந்து, மயங்கி தாயன்பின் கீழே புதைந்து கிடைக்கும் அவளுடைய அன்பைத் தூண்டி மீண்டும் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்யும் என்ற நம்பிக்கையோடு தான் அவர் இன்று அந்த ஹல்வாவையும், கதம்பத்தையும் வாங்கி வந்தார்.

ஆனால், அவரது ஆசையில் மண் விழுந்தது. அவளுடைய அன்பிற்குப் பதிலாக கோபத்தைத் தான் அவர் பெற முடிந்தது. உள்ளத்தின் ஆழத்திலே பொங்கியெழும் சிந்தனைகளை எதிரொலிப்பதே போல், நீண்டப் பெருமூச்சு விட்டார்.

ஏக்கமும், ஏமாற்றமும் தேங்கி நின்ற கண்கள் சூனியத்தைப் பார்த்தபடி இருந்தன. கதம்பத்தின் 'கம்'மென்ற வாசனையை அனுபவித்த நாசி இப்போது உள்ளே அவருக்கெனத் தயாராகும் வேப்பம் பூ ரசத்தின் வாசனையை அவருக்கு முன் கூட்டியே அறிவித்து, ருசியுள்ள உணவைச் சுவைக்கக் காத்திருக்கும் அவர் நாக்கு ஏமாற்றமடைவதைத் தடுக்கப் பார்த்தது!

## 4

இதற்கடுத்த சில மாதங்களுக்குப் பின் ஒரு நாள், சாய்வு நாற்காலியில் சாய்ந்து சிரம பரிகாரம் செய்து கொண்டிருந்த கோபாலன் 'சில்' லென்ற குளிர்ந்த ஸ்பரிசம் பட்டதும் கண்களைத் திறந்து பார்த்தார். வழக்கத்திற்கு மாறாகக் கையில் வெற்றிலைத் தட்டுடன் [illegible]சியளித்தாள் சுசீலா: "என்ன, அதற்குள் தூங்கி விட்டீர்களா?" என்று புன்னகையோடு கேட்டபடி.

கண்களை உருட்டி உருட்டி திக்பிரமையோடு நோக்கினார் கோபாலன். "ஏது. நான் ஒருவன் இந்த வீட்டில் இருக்கிறேன் என்ற நினைவு உனக்கு இன்றைக்காவது வந்ததா?" என்று அவர் வாய் திறந்து சொல்லவில்லை. ஆனால், அந்த 'பாவம்' அவரது சுருங்கிய முகத்தில் தோன்றத்தான் செய்தது.

சுசீலாவுக்கே தன் செய்கை நாணத்தைத் தந்தது போலும்; அவளது பளிங்கு வதனத்தில் செம்மை படர்ந்தது. மெதுவாகப் பேச்சைத் தொடர்ந்தாள். "வந்து........ஒரு சமாச்சாரம் உங்களிடம் சொல்ல வேண்டுமென்று மத்தியானமே பிடித்து நினைத்துக் கொண்டிருந்தேன். வ—ந்து, உங்க கூட வேலை செய்துகொண்டிருந்தாரே ராகவன் அவருக்கு இப்போ உதவி மானேஜர் வேலை ஆயிருக்காமே. கமலா, மத்தியானம் வந்தபோது சொன்னாள். நீங்கள் அதைப் பற்றி சொல்லவேயில்லையே என்று பார்த்தேன். நிஜந்தானா அது?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டாள். ஆவலும், ஆர்வமும். ஒரு.

விதமான பரபரப்பும், பொறுமையும் கொந்தளித்தபடி இருந்தன அவளது அகன்ற கருவிழிகளில்.

பாக்கை மென்றபடியே அலட்சியமாகவும், அஸ்வாரஸ்யமாகவும், அவளுக்குப் பதிலளித்தார் கோபாலன். "ஆமாம், ஆமாம், அவனும் என் மாதிரி குமாஸ்தா வேலையிலே முண்டியடித்துக் கொண்டிருந்தவன் தான். ஏதோ சில பரீக்ஷையெல்லாம் கஷ்டப்பட்டுப் படித்துப் பாஸ் பண்ணினான். அதனாலே சட்டென்று உயர்வு கிடைத்து விட்டது. இல்லாவிட்டால் கிடைத்து விடுமா?" என்ற அவரது யதார்த்தமான மொழிகள் ஏற்கனவே சுசீலாவின் உள்ளத்தில் மூட்டப்பட்டிருந்த் ஆசைத் தீயைப் பின்னும் கொழுந்து விட்டெரியச் செய்தன.

கோர்ட்டில், சாட்சியின் வார்த்தையைக் கொண்டே அவனை மடக்கும் கெட்டிக்கார வக்கீல் போல அவள், "ஏன், நீங்களும் தான் அப்படிப் படிக்கிறது தானே? நாளைக்கே பிரபாகரன் பெரியவனாய் விடுவான். நாலு காசு கூட வந்தால் தானே அவனைச் சந்தோஷமாய் வைத்துக் கொள்ள முடியும். இல்லாவிட்டால், அவனும், நம்மோடு திண்டாட வேண்டியது தான்" என்று ஒரு மாதிரியாகக் கூறினாள்.

அசட்டுச் சிரிப்புடன் தலையைச் சொறிந்து கொண்டார் கோபாலன். பரீக்ஷையென்றால் சிறு வயதிலிருந்தே அவருக்கு வேப்பங்காய் தான். படிப்புக்கு மூட்டை கட்டி வைத்துவிட்டு ஹாய்யாக உத்தியோகம் பார்க்கும்போது கூடவா பரீக்ஷைத்தொல்லை என்றெண்ணினார். அதோடு, குழந்தை, குழந்தை யென்று அவனுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்வதோடு, உழைத்து ஓடாகவும் போக வேண்டுமென்று அவள் கொண்டிருந்த மனோபாவமும் அவருக்கு எரிச்சலையே மூட்டியது. கட்டிய கணவனை விட, பிள்ளை ஒசத்தியாய்ப் போய்விட்டானோ என்ற ஓர் அசட்டுக் கோபமும் கூடவே தோன்றியது.

"அது சரிதான் சுசி. ஆனால், பரீக்ஷைக்குப் படிப்பதென்றால் லேசா? ஏகப்பட்ட புத்தகங்கள் வாங்க வேண்டுமே? அதற்கெல்லாம் எவ்வளவோ பணம் தேவையாயிருக்குமே" என்றார் அவர். அப்பாவி மனிதர் தான் அவர். ஆனாலும், இப்போது அவர் சுசீலாவின் மனதை நன்றாய் தெரிந்து கொண்டிருந்தார். அதனால் தான், இந்த மாதிரி பணச் செலவு என்று கூறி, அவளை அடக்கப் பார்த்தார்.

உண்மையில் சுசீலாவும் முதலில் ஒரு கணம் திகைத்துவிட்டுத் தான் போய் விட்டாள். ஆனால் மறுகணமே அவள் முகம் பிரகாசமடைந்தது. உற்சாகத்துடன் அவள், "புத்தகங்களுக்காக, நீங்கள் ஒரு தம்படி கூடச் செலவழிக்க வேண்டாம். அதற்கு ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன். எனக்கு மிஸஸ். ராகவனைத் தெரியும். அவளிடம் கேட்டுப் புத்தகங்களை வாங்கித் தருகிறேன். உங்களுக்குப் படிக்க வேண்டியதை அவற்றிலிருந்து மளமளவென்று எழுதி வைத்துக் கொண்டு விடுங்கள். பிறகு புத்தகங்களைத் திருப்பித் தந்து விட்டலாம். என்ன சொல்கிறீர்கள்? எப்படி என் யோசனை?" என்று அவள் ஏதோ செயற்கரிய செயலைச் செய்து விட்டவன் போல் கேட்ட போது, அவருக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை!

ஆயிரம், இரண்டாயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட புத்தகங்களை எப்படிப் பார்த்து எழுதுவது என்று அவர் மலைத்துப் போய் உட்கார்ந்துவிட்டார். ஆனால், சுசீலாவோ அவர் தன் யோசனையைக் கேட்டு பூரிப்பினால் வாயடைத்துப் போய்விட்டார் என்று எண்ணிக் கொண்டு, அடுத்த நாளே புத்தகங்களை இரவல் வாங்கிக்கொண்டு வந்து விட்டாள்!

அன்றிரவிலிருந்து கோபாலனின் இரவுத் தூக்கத்திற்கும் பங்கம் ஏற்பட ஆரம்பித்து விட்டது!

## 5

விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு, அதன் முன் நோட்டுப் புத்தகத்தைத்

திறந்து வைத்துக் கொண்டார் கோபாலன். ஆனால், அவரால் ஒரு வரி கூடப் படிக்க முடியவில்லை. பகலெல்லாம் ஆபீஸில் கடுமையான உழைப்பு. மத்தியானம் சிறிதும் அவருக்குப் பிடிக்காத டிபன், இரவில் வற்றக் குழம்பு, அல்லது வேப்பம் பூ ரசம் மட்டும் கூடிய சாப்பாடு, இவைகளோடு இரவு முழுவதும் கண் விழித்துப் படிக்க வேண்டுமென்றால் வஜ்ர சரீரம் பெற்றவர்க்கும் இயலாததாகவே யிருக்கும். அப்படியிருக்கையில், சுக புருஷராக இருந்த கோபாலனைப் பற்றிக் கேட்க வேண்டுமா? அவருக்குக் கடுமையாக இருமல் ஆரம்பித்து விட்டது.

கண்களில் நீர் வர, விழிகள் பிதுங்க, அவர் 'கண்' 'கண்' என்று பரிதாபகரமாக இருமிக் கொண்டிருந்த சமயத்தில், அறைக் கதவு திறந்தது. தூக்கத்தினால் சிவந்த கண்களுடனும், கோபத்தால் குங்குமம்போல் சிவந்த முகத்துடனும் அங்கு தோன்றினாள் சுசீலா. அவ்வளவு நேரம் வரை பிடிவாதம் பிடித்து அழுதபடியிருந்த பிரபாகரனை ஒருவாறு சமாதானப் படுத்தி, தூங்க வைத்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தவள், அவருடைய இருமலின் சப்தம் வந்து காதைத் துளைக்கவே, எழுந்து வந்து விட்டாள், விடுவிடென்று.

“ஆமாம், இன்று நீங்கள் ஒருவரையுமே தூங்க விடப் போவதில்லையா? பரீக்ஷைக்கு இன்னம் மூன்று மாதங்கூட இல்லையே என்று உங்களைத் தொந்தரவு பண்ணிப் படிக்கச் சொன்னால், இப்படி இருமிக் காதைத் துளைக்கிறீர்களே? ஆனாலும், என்றைக்குமே உங்களுக்கு மாய்மாலம் ஜாஸ்திதான். அது உங்கள் கூட்டத்து வாசியே ஆச்சே. மணி என்னமோ பதினொன்று கூட ஆகவில்லை. அதற்குள் உங்களுக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்ற ஆரம்பித்து விட்டதாக்கும். அதனால் தான் இப்படி இருமுகிறீர்கள்! எனக்குத் தெரியாதா உங்கள் ஜாலமெல்லாம்” என்ற சுசீயின் விஷந்தோய்ந்த சொற்கள் கோபாலனின் ஏற்கெனவே நொந்து கிடந்த உள்ளத்தை மேலும் புண்ணாக்கின.

இருமி இருமி அவருக்கு இறைப்பு வாங்கியது. அதனால் அவருக்குச் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் பொறுத்து, சிறிது சமாளித்துக்கொண்ட அவர் என்ன சுசீ, அப்படிச் சொல்லுகிறாயே? வேண்டுமென்று கூட ஒருவன் இருமுவானா? இதோ பார் இருமி இருமி நெஞ்சு கூடப் புண்ணாகிவிட்டது. கொஞ்சம் சூடாக பால் இருந்தால் கொண்டு வாயேன். நெஞ்சிலே விட்டுக் கொள்கிறேன்” என்று ஆயாசத்தோடு கூறியவர் சற்றுநேரம் மேஜையின் மேலேயே கவிழ்ந்து படுத்துக் கண்களை மூடிக்கொண்டார்.

முகத்தை ஒரு திருப்பு திருப்பிக் கொண்டு அப்பால் போன சுசீலா, சற்று நேரம் பொறுத்து ஒரு சிறு டம்ளரில் ஒருவாய் பாலைக் கொண்டு வந்தாள். டம்ளரே உடைந்து விடுமோ, அல்லது மேஜை தான் விரிந்து விடுமோ என்னும் படி, அதை 'டக்' என்று மேஜையின் மேல் வைத்தாள். “இந்தாருங்கள், பால். குழந்தைக்கென்று ஒரு வாய் வைத்திருந்தேன். இப்போது அவன் வாயிலே மண்ணு தான். ராத்திரியிலே விழித்துக் கொண்டு கத்தப் போறானே என்று பயமாயிருக்கு. சரி, உங்களுக்கென்ன அதைப் பற்றி வந்தது? உங்கள் சௌக்கியம் ஒன்றும் குறையாமலிருந்தால் போதாதா? பாலைக் குடித்து விட்டு, ஹாய்யாகப் படுத்துக்கொண்டு தூங்குங்கள்! அதற்காகத் தானே இத்தனை நாழி ஆர்ப்பாட்டம் பண்ணினீர்கள்! பரீக்ஷை எக்கேடாவது கெட்டுப்போகட்டும். இப்போ சத்திக்கு நீங்கள் இருமி, இருமிக் குழந்தையை எழுப்பாதிருந்தால் அதுவே போதும்!” என்று மூச்சுவிடாமல் பேசி விட்டுப் போனாள்.

பொழுது விடிந்தது. இருமல், சுசீலா, பாடம் இந்த மூவரிடமும் போராடியதில் களைப்படைந்திருந்தார் கோபாலன். கண்களை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே அவர், சுசீலா வழக்கமாகக் கொண்டு வரும் சூடான காப்பியை அவர் எதிர் பார்த்தது போலவே, கைவளைகள் குலுங்க, கால் மெட்டிகள் கிலுங்க சுசீலா வந்தாள். ஆனால் காப்பி வரவில்லை.

அதற்கு பதிலாகக் கொக்கோ தான் வந்தது! அதைத் தொடர்ந்து, "பாருங்களேன் உங்கள் பிள்ளை பண்ணின அக்கிரமத்தை! உங்கள் காப்பி, என் காப்பி இரண்டையும் எடுத்துக் குடித்து விட்டான் போக்கிரிப்பயல்! ஏண்டா யென்றால் 'களுக்' 'களுக்' என்று சிரிக்கிறான்! ஆனாலும் வரவர ரொம்ப விஷமம் பண்ணுகிறான்!" என்று பெருமையோடு கூறினாள் சுசீலா.

அவளுடைய பேச்சை ரஸிக்கும் நிலைமையில் கோபாலன் இல்லை. காப்பி இல்லை என்றதும் அவருக்கு எரிச்சல் தான் வந்தது. அதோடு அவருக்கு எப்போதுமே கொக்கோ பிடிக்காது. அதனால் அவர் முகத்தைத் திருப்பிக்கொண்டு, டம்ளரைக் கூடத் தொடாமலிருந்து விட்டார்.

சுசீலாவோ அவர் கோபத்தைக் சிறிதும் சட்டையே செய்யவில்லை. "சரி சரி, காப்பியில்லை யென்றதும் கோபம் வந்துவிட்டதாக்கும்! ஒருநாளைக்கு ஏறுமாறாகப் போனால் இப்படித்தான். உங்களுக்கு வேண்டாம்விட்டால் போங்களேன். நானே குடித்துக் கொள்கிறேன் இந்த கொக்கோவை. உங்களுக்கு இதோ சமையலாகிவிடும். ஒரேயடியாகச் சீக்கிரமாகச் சாப்பிட்டு விடலாம். காப்பியில்லாவிட்டால் போகிறது. அதற்காக என்ன பண்ணுகிறது குழந்தையை?" என்று தானே ஆக்ஷேபம், சமாதானம் எல்லாவற்றையும் கூறிவிட்டு, கொக்கோ டம்ளரையும் கையிலெடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

காப்பி யில்லாமல் இருமலோடு, தலைவலியையும் சேர்த்து அனுபவித்துக் கொண்டிருந்த கோபாலனுக்குக் கடைசியில் கிடைத்தது வற்றல் குழம்பு சாதம் தான்!

6

கோபாலனின் பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதந்தான் பாக்கி யிருந்தது. அதற்காக அவரைவிடச் சுசீலா தான் அதிகமாகக் கவலைப் படுபவள் போலக் காணப்பட்டாள்! அத்துடன் அவளுக்கு வேறுவிதமான கவலையும் ஏற்படச் செய்தார், அன்று அவளைக் காண வந்திருந்த அவளுடைய மாமா.

அவர் ஒரு டாக்டர். அந்த ஊரிலேயே தான் அவரும் இருந்தார். அவளிடம் மிகுந்த அன்புடையவர். பெற்ற தகப்பனாரைப் போல அவளை உரிமையுடன் கண்டிக்கவும் கண்டிப்பார்.

அன்றும் அவர் அப்படித்தான் எடுத்த எடுப்பிலேயே, "என்ன சுசி. நீ கோபாலனை வரவரக் கவனித்துக் கொள்கிறதே யில்லையா என்ன? ஆள் ஒரேயடியாய் 'வாங்கிப்' போய்விட்டானே! என்னடா என்றால் ஒன்றுமில்லை என்கிறான். என்னமோ பரீட்சைக்குப் படிக்கிறேன் என்றான். பரீட்சையாவது, மண்ணாங்கட்டியாவது? சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுத வேண்டும் என்று அவனை நன்றாய்த் திட்டி அனுப்பினேன். உனக்கு சதா சர்வதா பிரபாகரனைக் கவனிக்கிறதைத் தவிர, அவனைக் கவனிக்க நேரமேது? பாதிப்பேருக்குமேல் பொம்மைக்குட்டிகள் பண்ணுகிற தவறே இது தான். வட்டியை நம்பிக்கொண்டு அசலைக் கை நழுவ விடுகிற சமாசாரந்தான். நீ கூடவா இப்படி இருக்க வேண்டும்" என்று நேரடியாகவே கேட்டுவிட்டார்.

சுசீலாவின் முகம் பயத்தினாலும், திகிலினாலும் இருண்டு விட்டது. அவருக்கா? உடம்பா? அவள் கவனிக்காததினாலா? அவளுக்கு ஒரே திக்பிரமையாயிருந்தது. "ஏன் மாமா, அவருக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையே. எப்போதும் போல் தானே இருக்கிறார்? நீங்களாக வீணே கலவரப்படுகிறீர்களா? அவர் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே" என்று சொல்லும்பொழுதே, அவளை யறியாமலேயே அவளது கண்கள் சற்றுக் கலங்கத் தான் செய்தன.

அவளது இமைகள் கண்ணீரின் கனத்தால் துடிப்பதை அவள் மாமாவும் பார்த்தார். பார்த்தும் பாராதவர் போலவே

அவர் சொல்லிக்கொண்டே போனார்; "உண்மையில் அவன் உடம்பு ரொம்பத் தான் கெட்டுப்போயிருக்கிறது. ஆனால், அப்படிப் பயப்படும்படியாக ஒன்றும் இல்லை. ரொம்பப் பலவீனமாயிருக்கிறதாலே எந்தக் கெட்ட வியாதியும் சட்டென்று வந்து பிடித்துக்கொண்டு விடும் என்கிற பயந்தான். இந்த ஊரை விட்டுவிட்டு, திருக்கழுக்குன்றம், மதனபள்ளி போன்ற ஊரில் போய் இரண்டு மூன்று மாதங்கள் தங்கி, ஓய்வெடுத்துக் கொண்டு நல்ல ஆகாரம், நிறைய பால், தயிர் சாப்பிட்டு வந்தால், உடம்பு தானாக சரியாகப் போய்விடுகிறது. நானும் ஒரு நல்ல டானிக் எழுதித் தருகிறேன். அதையும் வாங்கிச் சாப்பிடச் சொல். நாம் ஜாக்கிரதையாயிருந்தால், எந்த வியாதிக்கும் பயப்பட வேண்டிய அவசியமே ஏற்படாது."

"அப்பாடா! இவ்வளவு தானே! ஒரேயடியாகப் பயப்படுத்தி விட்டீர்களே மாமா" என்றாள் சுசீலா. இதற்குப் பிறகு தான் அவளுக்கு மூச்சு ஒழுங்காக வரத் தொடங்கியது. மாமாவின் வார்த்தைகளைக் கேட்டதும் முதல் முதல் உண்டான பயமும், திகிலும் அவளை விட்டு நீங்கின. "வேலை யென்ன இந்த டாக்டர்களுக்கு! ஒன்று மில்லாததற் கெல்லாம் பிரமாதப் படுத்துகிறது! மாமா மட்டும் இதற்கு விலக்கா என்ன? அதுதான் அப்படிக் கலவரப்படுத்திவிட்டார் என்னை" என்று நினைத்து விட்டாள் சுசீலா.

## 7

அன்றிரவு, மாடி வராந்தாவில் பனியனையும் கழற்றி விட்டுக் காற்று வாங்குவதற்காகப் படுத்திருந்த கோபாலனைக் கண்டதும் தான், அவளுக்கு மாமா சொன்னது மறுபடி நினைவில் வந்து உறுத்திற்று. ஆஜானுபாகுவாகக் கம்பீரமாக இருந்தவர் இப்படிக் கறுத்து இளைத்துக் கயிறாகப் போய்விட்டாரே! உருண்டு திரண்ட புஜங்களா இப்போது எலும்பை எண்ணிக் கொள்" என்றாகி விட்டன? ஒருவேளை மாமா சொன்னது போல் அவரை ஏதாவது கெட்ட வியாதி தான் பிடித்துக் கொண்டிருக்கிறதா? அது தெரியாமல் அஜாக்கிரதையாயிருந்துவிட்டோமா இவ்வளவுநாளும்?" இப்படியாக மூண்டன சுசீலாவின் சிந்தனைகள்.

பல நாட்களாக, எங்கோ பாதாளத்தில் ஆவி புகையக் கொதித்துக்கொண்டிருந்த எரிமலைக் குழம்பு, ஒருநாள் குபீரென்று வெளியே பொங்கி வழிவது போல, இத்தனை நாட்கள் அவள் இருதயத்தின் அடியிலே மறைந்து கிடந்த அன்பு இன்று பொங்கி வழிய ஆரம்பித்தது!

"ஏன் இப்படிச் சோர்ந்து படுத்திருக்கிறீர்கள்? அதிக அலுப்பா யிருக்கிறதா? உங்கள் பனியனையாவது கொண்டு வரட்டுமா?" என்றெல்லாம் அவள் குழைந்து பேசியது, அவள் பழைய சுசீலாவாக மாறிவிட்டாள் என்பதை அவருக்கு எடுத்துக் காட்டுவது போலிருந்தது.

மறு தினம் சுசீலாவும் கோபாலனும் குழந்தை பிரபாகரனுடன் மதனப்பள்ளியை நாக்கி ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். சுசீலாவின் மனம் அலைகடலைப்போல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. "ஸ்வாமி. பகவானே! அவருக்கு ஒன்றும் நேராமல் நீதான் காப்பாற்ற வேண்டும்," என்று பிரார்த்தித்தாள். "இப்பொழுது எனக்குக் கண் திறக்கச் செய்தாயே. இப்பொழுது கண் திறந்தும் ஒருவேளை பிரயோஜனமில்லாமல் போய் விடுமோ?" என்று திகிலுடன் அவள் மனம் இந்தக் கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டே இருந்தது.

# வாத்தியார்

(ருஷ்யக் கதை மொழி பெயர்ப்பு)

## கு. அழகிரிசாமி

சாடிகன் கம்பெனியின் பொருளாதார உதவியினால் நடந்து வருகிறது அந்தப் பள்ளிக்கூடம். அதன் தலைமை ஆசிரியராகிய பயரீடார் லூகிச் ஸைஸோவ் வருஷாந்திர விருந்துக்குப் போவதற்குத் தம்மைத்தயார் செய்து கொண்டிருந்தார். ஒவ்வொரு வருஷமும் பரீக்ஷை முடிந்ததும் பள்ளிக்கூட மேனேஜர்கள் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்வார்கள். அதில் ஆரம்பப் பாடசாலைகளின் இன்ஸ்பெக்டர், பரீக்ஷாதிகாரிகள், மானேஜர்கள், கம்பெனியில் வேலைசெய்யும் மேஸ்திரிகள் ஆகிய எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வார்கள். இவர்களுடைய உத்தியோக அந்தஸ்துகள் எப்படியிருந்த போதிலும் இந்த விருந்துமட்டும் எப்போதும் மிகவும் மேன்மையாகவும் உற்சாகமாகவும் நடைபெறும். விருந்துக்கு வந்தவர்கள் வெகு நேரம் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். அப்போது தங்கள் அந்தஸ்துகளின் ஏற்றத் தாழ்வுகளை மறந்துவிட்டு, தங்கள் தொழிலைப்பற்றிப் பிரமாதமாய் நேசபாவத்துடன் பேசிக்கொண்டு வயிறு புடைக்குமட்டும் சாப்பிடுவார்கள். ஒரே கூப்பாடாகிற நிலை வரும்மட்டும் பேசிக் கொண்டிருந்துவிட்டு, வீட்டுக்கு மிகவும் காலதாமதமாகிப் புறப்படுவார்கள். அப்போது அவர்கள் பாடும் பாட்டும், முத்தமிடும் சப்தமும் அந்தக்கம்பெனிக் கட்டிடத்தின் சுற்றுப்புறங்களை யெல்லாம் செவிடாக்கிவிடும்!

ஸைஸோவ் இந்தப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகிப் பதின்மூன்று வருஷங்களாகிறபடியால் இவர் இப்படிப் பதின்மூன்று விருந்துகளில் பங்கெடுத்திருக்கிறார். இப்போது பதினாலாம் விருந்துக்குப் புறப்படத் தயார் செய்து கொண்டிருக்கிறார். கௌரவமாகப் பிறருக்குப் படும்படியாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு தம்மை அலங்கரித்துக்கொள்ள முயன்று கொண்டிருக்கிறார். புதிதாக வாங்கிய தம் கறுப்பு உடையை ஒருமணி நேரம் சுத்தம் செய்தார். அப்புறம், கண்ணாடிக்கு முன்னால் ஒருமணி நேரம் நின்று ஒரு புது மாதிரியான சட்டையைப் போட்டுக் கொண்டார். பொத்தான் துவாரங்களில் அந்த அலங்காரப் பொத்தான்கள் நுழையாது. அப்போது அவர் மனைவி மேல் சரமாரியாக குற்றச்சாட்டுகளையும் வசவுகளையும் பொழிந்து தள்ளுவார்.

அவர் மனைவி, பாவம், இங்குமங்கும் 'பரபர'வென்று ஓடி அலுத்துப் போவாள். அவரும்கூடக் கடைசியில் ரொம்பவும் அலுத்துப்போய் விட்டார். சமையலறையிலிருந்து அவருடைய 'பாலிஷ்'போட்ட பூட்ஸுகளை அவர் மனைவி கொண்டுவந்தபோது, அவருக்கு அவைகளை வாங்கிப் போட்டுக்கொள்ளக் கூடச்சக்தியில்லை. ஆகவே, கொஞ்சம் படுத்துக் கொஞ்சம் தண்ணீரும் குடிக்க வேண்டியிருந்தது.

"மிகவும் பலஹீனமாகப் போய் விட்டீர்கள்! இந்தவிருந்துக்கே நீங்கள் போக வேண்டாம்" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள் அவர் மனைவி.

"புத்திமதி போதும்!" என்று வெடுக்கென்று கோபத்துடன் சொல்லி அவள் வாயைப் பொத்தி விட்டார்.

அவருடைய மனசே சரியான நிலையில் இல்லை. சமீபத்தில் நடந்த பரீக்ஷைகளில் அவருக்கு ஓரே மனவருத்தம். பரீக்ஷைகளெல்லாம் நன்றாகத்தான் நடந்தன. மேல் டிவிஷன் பையன்களெல்லாம் பாஸாகி சர்டிபிகேட்டுகளும், பரிசுகளும் வாங்கிவிட்டார்கள். பள்ளிக்கூட மானேஜர்களுக்கும், சர்க்கார் அதிகாரிகளுக்கும் பரீக்ஷை முடிவுகளைக் கண்டு பரம சந்தோஷம்; ஆனால் இதெல்லாம் அவருக்குத் திருப்தியளித்து விடவில்லை. அவர் மனவருத்தத்துக்குக் காரணம் என்னவென்றால் எப்போதுமே தப்புப் போடாத பாப்கின் என்ற பையன் டிக்டேஷனில் மூன்று தப்புகள் போட்டு விட்டான்; ஸெர்கியேவ் என்ற இன்னொரு பையன் அவசரத்திலும் படபடப்பிலும் 17 × 13எவ்வளவு என்பதை மறந்து போய்விட்டான்; இன்ஸ்பெக்டர்—அவர் அனுபவமில்லாத ஓர் இளங்காளை—டிக்டேஷனுக்கு ஒரு கடுமையான வியாசத்தை எடுத்துப் பக்கத்துப் பாடசாலையின் வாத்தியாராகிய வியாபுனேவ் என்பவரிடம் கொடுத்துவிட்டார். அவர் வைலோவுக்கு ஒரு நல்ல சகபாடியாக நடந்து கொள்ளவில்லை. டிக்டேஷன் போடும்போது அவர் புஸ்தகத்தில் உள்ளபடி வாசிக்காமல், வார்த்தைகளை விழுங்கிக்கொண்டே வாசித்தார்!

வைலோவ் தம் மனைவியின் ஒத்தாசையோடு பூட்ஸுகளை மாட்டிக்கொண்டு பழையபடியும் தம்மை ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக்கொண்டார். முடிச்சு முடிச்சாக இருக்கும் தம் கைப்பிரம்பை எடுத்துக்கொண்டு விருந்துக்குப் புறப்பட்டு விட்டார். பள்ளிக்கூடத்தை நடத்தும் கம்பனி மானேஜரின் வீட்டுக்கு முன்பாகஇவர் போகும்போது, அசந்தர்ப்பமாக ஒன்று நடந்து விட்டது. அதாவது, ஓரே தொடர்ச்சியாக இவருக்கு இரும்பல் கிளம்பிவிட்டது!.

அதனால் அவர் உடம்பெல்லாம்குலுங்கி, தலையிலுள்ள தொப்பியும் கீழே விழுந்தது. கையிலிருந்த தடிக்கம்பும் நழுவி விழுந்து விட்டது. பள்ளிக்கூட இன்ஸ்பெக்டரும், வாத்தியார்களும் இவர் இருமும் சப்தத்தைக்கேட்டு வீட்டை விட்டு வெளியே ஓடிவந்தார்கள். இவர் எல்லாவற்றிற்கும் அடியில் உள்ள படிக்கல்லில் உட்கார்ந்து வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தார்.

"இதுயார், வைலோவா? நீங்கள்......... வந்திருக்கிறீர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'ஏன் வரக்கூடாது?"

"நீங்கள் வீட்டில் இருக்கவேண்டும். இன்று உங்கள் உடம்பு ஒன்றும் சரியாயில்லை."

"நான் நேற்றிருந்ததைப் போலத்தான் இன்றும் இருக்கிறேன். நான் வந்திருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் திரும்பிப் போய் விடுகிறேன்."

நீங்கள் இப்படிப் பேசக்கூடாது, வைலோவ். உள்ளே வாருங்கள். இந்த விருந்துக் கொண்டாட்டமே உங்களைக் கௌரவப்படுத்தத்தானே? எங்களுக்காகவா? உங்களைப்பார்த்ததில் எங்களுக்குப் பரம சந்தோஷம்...."

உள்ளே, விருந்துக்கு எல்லாம் தயாராக இருந்தன. விருந்து மண்டபம் ஜெர்மானிய ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூஞ்செடிகளின் வாசமும் வார்னிஷ்களின் வாசமும் ஜமாய்த்துக் கொண்டிருந்தது. உள்ளே இரண்டு மேஜைகள் போடப்பட்டிருந்தன. ஒரு பெரிய மேஜை விருந்துசாப்பிட; சிறியது விருந்துப் பக்ஷணங்களை வைக்க.

மத்தியான வெய்யிலின் வெளிச்சம் கண்ணாடி ஜன்னல்களின் வழியாக வந்து

உள்ளே மங்கலாக விழுந்து கொண்டு இருந்தது. ஒளியும் இருளும் கலந்த இந்த அறையின் சூழ்நிலே, கண்ணுடி ஜன்னல்களில் இருந்த ஸ்விட்ஜர்லந்துக் காட்சிகளின் சித்திரங்கள், பூஞ்செடிகள், தட்டுக்களில் இருந்த உணவுகள் எல்லாம் சேர்ந்து ஒரு பெண்மை தேங்கிய கர்பனூர்த் தமான காட்சியாக இருந்தது. எல்லாம் அந்த வீட்டுக்காரராகிய அடால்வ் ஆண்ட்ரீயிச் ப்ளூனியின் ஏற்பாடுகள். அவர் ஒரு ஜெர்மானியர். நல்ல சுபாவமுடையவர்; குள்ளமாக இருப்பார். அவருடைய வயிறு வட்ட வடிவமாகவும் சின்னதாகவும் இருக்கும்; சிறு கண்கள். அன்பு ததும்பி, குளுகுளு என்று இருக்கும். அவர் மேஜையைச்சுற்றி, திப்பிடித்த வீட்டில் ஓடுவதைப்போல அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்தார். கிண்ணங்களில் ஒயினை நிரப்புவதும், தட்டுகளில் பண்டங்களைக் கொண்டுபோய் வைப்பதும், ஒவ்வொரு வகையிலும் வந்தவர்களை உற்சாகப்படுத்தி சந்தோஷப்படுத்துவதுமாக இருந்தார். விருந்தினர்களைப் புஜங்களில் தட்டிக்கொடுத்து அவர்களை உற்றுப்பார்த்துக்கொண்டு 'களுக்'கென்று சிரிப்பார்; கைகளைத் தேய்த்துக் கொள்ளுவார். உண்மையிலேயே மிகவும் அன்புடன் நடந்து கொண்டார்.

அவர், ஸைஸோவைப்பார்த்ததும் சட்டென்று, "இது யார்? ஸைஸோவ்! ஆஹா, உங்களுக்குச் சுகமில்லாமல் இருந்தும்கூட வந்துவிட்டீர்கள். கனவான்களே, உங்களுக்கு நான் வாழ்த்துக் கூறுகிறேன். ஸைஸோவ் இதோ வந்து விட்டார்!" என்று வந்திருந்தவர்களுக்கு தெரிவித்தார்.

பள்ளிக்கூட வாத்தியார்கள் முன்பாகவே வந்து மேஜையைச்சுற்றி உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஸைஸோவ் கொட்டாவி விட்டார்; அவருடைய சகபாடிகள் அவர் வரும்வரை காத்திராமல் சாப்பிட ஆரம்பித்ததைக்கண்டு அவருக்கு வருத்தம். அந்த ஆசாமிகளில் வியாபுனேவும் இருப்பதைப் பார்த்துக்கொண்டார். அவர் தான் பரீக்ஷையில் டிக்டேஷன் போட்டவர். ஸைஸோவ் அவருக்குப் பக்கமாகப்போய்; "நீங்கள் என் சகபாடியைப்போல நடந்து கொள்ளவில்லை! உண்மையாகச் சொல்லுகிறேன், நல்ல கௌரவமான மனிதர்கள் அப்படி 'டிக்டேஷன்' போடமாட்டார்கள்!" என்றார்.

"அட கடவுளே! இன்னும் அந்தப் பல்லவியைத்தானு பாடிக் கொண்டிருக்கிறீர்கள்! அதையே சொல்லிக்கொண்டிருக்க உங்களுக்குச் சகிக்கிறதா?" என்று சொல்லிவிட்டு வியாபுனேவ் ஒரு கொட்டாவி விட்டார்.

"ஆமாம். இன்னும் அந்தப் பல்லவியைத்தான் பாடிக்கொண்டிருக்கிறேன். என்னுடைய பாப்கின் எப்போதுமே தப்புப் போட்டது கிடையாது. நீங்கள் ஏன் அப்படி டிக்டேஷன் போட்டீர்கள் என்று எனக்குத்தெரியும். என் மாணவர்களைக் கீழே விழத்தட்டிவிட்டால் உங்கள் பள்ளிக்கூடத்துக்கு நல்ல பெயர் கிடைக்குமென்பது தான் உங்கள் நோக்கம். எல்லாம் எனக்குத் தெரியும்!" என்று விருவிருப்புடன் பேசினார் ஸைஸோவ்.

"ஏன் சண்டையை இழுக்கிறீர்கள்? என்னை ஏன் நீங்கள் இப்படி விடாப்பிடியாய் அரிக்க வேண்டும்?" என்று உருமினார் வியாபுனேவ்.

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு, கஷ்டங்களை மறந்தவர் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, "ஒரு சின்ன விஷயத்துக்காக இப்படிக் கோபப்படுவது நன்றாயிருக்கிறதா, ஐயா? மூன்று தப்புப்போட்டிருக்கிறான்........ ...போட்டது ஒரு தப்பு அல்ல இதைப் பிரமாதப் படுத்துவானேன்?" என்றார்.

"ஆமாம், அது பிரமாதம்தான்! இது வரை பாப்கின் தப்புப்போட்டதே கிடையாது," என்றார் ஸைஸோவ்.

வியாபுனேவ் மூக்குச்சிவக்க "இலேசில் அவர் அதைவிடமாட்டார். அவர் உடம்பிற்குச் சுகமில்லாதவர் என்ற சாக்கில், நம்மையெல்லாம் சாகச்சாக அடிக்கிறார். நீர் உடம்புக்குச் சுகமில்லா

மலிருந்தும் பரவாயில்லை, நான் சும்மா விடமாட்டேன்" என்றார்.

"என்னுடைய அசௌகரியம் ஒரு பக்கத்திலிருக்கட்டும். உமக்கு அதைப் பற்றி என்ன கவலை? எல்லோரும் அசௌகரியம், அசௌகரியம் என்று என்னைப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்!......உங்கள் அனுதாபத்தை நான் எதிர்பார்ப்பது போலல்லவா இருக்கிறது! எனக்கு உடம்பு சுகமில்லையென்று உங்களுக்குச் சொன்னது யார்? பரீக்ஷைக்கு முன்னால் நான் உடம்புக்கு அசௌகரியமாக இருந்தது வாஸ்தவம் தான். இப்போதுதான் எல்லாம் குணமாகிவிட்டதே; கொஞ்சம் பலவீனம் மட்டும் இருக்கிறது."

அங்கேயிருந்த நிகொலாய், என்ற வைத்திய ஆசிரியர்—அவர்தான் பாதிரியார்; அன்று ஒரு புதுமோஸ்தரான வர்ண அங்கிதரித்து, பூட்ஸுகளுக்கு வெளிப்புறமாக கால் சராயை அணிந்து கொண்டிருந்தார்—ஸைஸோவைப்பார்த்து "உங்களுக்குக் கடவுள்செயலாய் உடம்பு குணமாகிவிட்டது, ஐயா. அதற்காகச் சந்தோஷப்படுங்கள். ஆனால் உங்களை வைத்துக்கொண்டு தொந்தரவுபடவேண்டி இருக்கிறது ........." என்றார்.

"நீர் ரொம்ப யோக்கியர்!" என்று ஸைஸோவ் அவரைத்தடுத்துவிட்டு, "கேள்விகள் நேரடியானவையாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும். ஆனால் நீர் பொடிவைத்தே கேட்டுக்கொண்டிருந்தீர். அதுவா வேலை!" என்றார்.

எல்லோரும் கூடி ஒருவாறு அவர் மனதைத்தேற்றி மேஜையோரத்தில் உட்காரவைத்தார்கள். அவர் உட்கார்ந்து வெகுநேரம் வரைக்கும் எந்தப்பானத்தைக் குடிப்பது என்று யோசனைசெய்தார். கடைசியில் முகத்தைக் கோணவைத்துக் கொண்டு, ஒரு கிண்ணத்தில் பச்சைநிறமுள்ள ஒரு பானத்தை விட்டுக்குடித்தார். அங்கே வைக்கப்பட்டிருந்த முட்டையையும் வெங்காயத்தையும் மிகவும் கடுகடுப்போடு தன்பக்கத்துக்கு இழுத்து வாயில் பிட்டுப்போட்டார். முட்டையில் உப்பில்லாததுபோல அவருக்குத்தோன்றியது. உடனே உப்புப் பொடியை எடுத்து மேலேதூவி, ருசி பார்த்தார். ஆனால் உப்பு மிகவும் கூடிப் போய் விட்டதால் அதைத்தூரத்தள்ளி வைத்துவிட்டார்!

விருந்தில், இன்ஸ்பெக்டருக்கும் ப்ருனிக்கும் மத்தியில் ஸைஸோவ் உட்கார்ந்துகொண்டிருந்தார். சாப்பிட்டு முடிந்ததும், பள்ளிக்கூட வார்டன்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், பள்ளிக்கூட இன்ஸ்பெக்டருக்கும் வாழ்த்துக் கூறினார்கள். மூன்றாவது தடவையாக ஸைஸோவுக்கு வாழ்த்துக் கூறினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் எழுந்து பேச ஆரம்பித்துவிட்டார். முகத்தில் சிந்தனை தேங்கியது. தொண்டையை நன்கு சரிசெய்து கொண்டார். முதலில், தமக்குப் பேச்சுத்திறமை கிடையாதென்றும், அதனால் பிரசங்கம் செய்யப் போவதில்லையென்றும் தெரிவித்துக்கொண்டார்.

(தொடரும்)



# சங்கப்பலகை

ஆசிரியர் அவர்களுக்கு :—"அசோகா" வின் ஆரம்ப வெற்றிக்கு அதன் அற்புதமான பெயரும், பொருத்தமான அட்டைப் படங்களும் காரணமாகும். அட்டைப் படங்களை தனியாக அச்சிட்டு கிடைக்கச் செய்தால் பலரும் ரசிப்பார்கள் என்று நம்புகிறேன். இது விஷயத்தில் தாங்கள் முயற்சி யெடுத்துக் கொள் வீர்களா?

வேல் வைரவன்,

நியூஸ் ஏஜண்ட்.

("அசோகா"வின் அட்டைப்படங்கள், "அசோகா" வாசகர்களின் சொந்தப் பொருளாகும். பத்திரிகை வளர, வளர, அட்டைப் படமும் அதிகமாக அச்சாகும் அல்லவா? எனினும், தாங்கள் விரும் பியது போலவே இன்னும் சிலரும் எழுதி யிருப்பதால், இரண்டாவது மலரில் வெளியான மகாத்மா காந்தி அட்டைப் படத்தை தனியாக அச்சிட முயற்சிக்கி றோம். வந்தனம்.—ஆசிரியர்.)

◆

ஆசிரியர் அவர்களுக்கு :—

'அசோகா' முதல் இதழைப் பார்த்த துமே எனக்கு அதன் வளர்ச்சியில் நம் பிக்கை பிறந்தது. இரண்டாவது இதழில் ஆசிரியரின் "சங்கப் பலகை"யைப் படித் ததும் தமிழ் உணர்ச்சியும், ஊக்கமும் பொங்கி வந்தன. இந்தக் காலத்தில் பத்திரிகைகள் தகுந்த ஆதரவு இல்லா விட்டால் நிலைத்து நிற்க முடியாது. சாதாரணமாக பொது ஜனங்கள் 'பகுத் தறிவுப் போட்டி,' 'பரிசுத் திட்டம்,' இவைகளில் ஊக்கம் செலுத்துவார்கள்: தமிழருக்கு இலக்கிய சேவை புரிய முன் வந்து, வெற்றி கண்டுள்ள நீங்கள், இப் போட்டிப் பந்தயங்களின் துணையை நாடு வீர்களாயின் பத்திரிகை பிரபலமடைவது திண்ணம். செய்வீர்களாக?

அன்பு கணபதி,

சந்தா நேயர்.

(அன்புடையீர்! பத்திரிகைகள் பெருகி வரும் இக்காலத்தில், அவற்றில் எது சிறந் தது, தமிழரின் ஆதரவுக்கு பாத்திர மானது என்று தெரிந்தெடுக்கும் மகத் தான பொறுப்பு தமிழர்களுக்கு ஏற் பட்டிருக்கிறது. அவர்களுக்கு பொது அறிவுக்கும் அதுவே ஊக்கமளிக்கும். ஆகவே, தனியாக போட்டிப் பந்தயங்கள் ஏற்படுத்துவது தமிழர்களின் பொறுமை யைச் சோதிப்பதாக நேரும் என்று அஞ்சுகிறோம்! மன்னிக்கவும்—ஆசிரி யர்.)

# திண்டுக்கல் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி பாங்க் (லிமிடெட்.)

★

(ஸ்தாபிதம் 1930.)

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 20,00,000. |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 4,24,625. |
| ரிஸர்வ் நிதி | ரூ. | 170,000. |
| இதர ரிஸர்வ் நிதி | ரூ. | 15,500. |

கிளை ஆபீஸ்கள்:

| | | |
|---|---|---|
| செங்கல்பட்டு | பண்ருட்டி | திருக்கோயிலூர். |
| திண்டுக்கல் | புதுக்கோட்டை | திருவையாறு |
| ஈரோடு | ராஜமந்திரி | வேலூர் |
| குடியாத்தம் | தஞ்சாவூர் | விழுப்புரம். |
| கும்பகோணம் | தஞ்சாவூர் (கீழக்கு வாசல் | |
| பழனி | திருநெல்வேலி | |

மதராஸ் கிளை ஆபீஸ்: 2-21, சைனாபஜார் ரோடு, ஜார்ஜ் டவுன்.

சகலவிதமான பேங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

பிக்ஸட் டெபாசிட்கள் அடியிற்கண்ட விகிதப்படி பெற்றுக்கொள்ளப்படும்.

1 வருஷத்திற்கு 3½%

2 வருஷத்திற்கு 3¾%

மற்ற விபரங்களுக்கு எமது எல்லா கிளை ஆபீஸ்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

M. S. ஷாமண்ணா, B. com. (Bom.), உதவி செக்ரடரி.

K. V. முத்துகிருஷ்ண செட்டி, மானேஜிங் டைரக்டர்.